மாலை 48 மணி 11 நவம்பர் 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## படமெடுத்தாடும் பாம்பையும் வெல்லலாம்

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

## திருப்பதிக்கு நிகரான திருவல்லிக்கேணி

## தென்முகக் கடவுள் 108 போற்றி



## வரகுணன் வழிபட்ட திருவிடைமருதூர்

## நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை




# அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

## வடபழநி, சென்னை - 26

## திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

அருள்மிகு வடபழநிஆண்டவர் திருக்கோயிலில் எதிர் வரும் 2007 - ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குடமுழுக்கு விழா முன்னிட்டு கீழ்கண்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. நன்கொடை செலுத்த விரும்பும் அன்பர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளும்படியும், திருப்பணியினை நேரிடையாக செய்ய விரும்பும் மெய்யன்பர்கள் தங்களது சம்மதக் கடிதத்தினைத் திருக்கோயில் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### திருப்பணி விவரம்

| வ.எண். | வேலை விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | விநாயகர் சன்னதி மராமத்து | ரூ. 25,000/- |
| 2. | மூலவர் சன்னதி மராமத்து | ரூ. 70,000/- |
| 3. | வள்ளி சுப்ரமணியர் சன்னதி மராமத்து | ரூ. 35,000/- |
| 4. | அங்காரகன் சன்னதி மராமத்து | ரூ. 7,000/- |
| 5. | சண்முகர் சன்னதி மராமத்து | ரூ. 13.000/- |
| 6. | அருணகிரிநாதர் சன்னதி | ரூ. 12.000/- |
| 7. | ஆஞ்சநேயர் சன்னதி மராமத்து | ரூ. 28,000/- |
| 8. | தெற்குக் கோபுரம் மராமத்து | ரூ. 5,00,000/- |
| 9. | கிழக்குக் கோபுரம் மராமத்து | ரூ. 1,85,000/- |
| 10. | மேற்குக் கோபுரம் மராமத்து | ரூ. 1,85,000/- |
| 11. | வடக்குக் கோபுரம் மராமத்து | ரூ. 1,85,000/- |
| 12. | திருக்கோயில் மதில் சுவர் மராமத்து | ரூ. 45,000/- |
| 13. | விநாயகர் சன்னதி அருகில் கருங்கல் தரைதளம் அமைத்தல் | ரூ. 85,000/- |
| 14. | கந்தர் அனுபூதி மண்டபம் மராமத்து | ரூ. 1,85,000/- |
| 15. | அருணகிரிநாதர் மண்டபம் மராமத்து | ரூ. 1,60,000/- |
| 16. | தேவர் மண்டபம் பிரகார மண்டபம் மராமத்து | ரூ. 1,15,000/- |
| 17. | விசாரணைக்கூடம் மராமத்து. | ரூ. 20,000/- |
| 18. | மயில் மண்டபம் மராமத்து | ரூ. 7,000/- |
| 19. | ஆதிபீடம் மராமத்து | ரூ. 25,000/- |
| 20. | திருக்குளம் மதில்சுவர் நீராழி மண்டபம் மராமத்து | ரூ. 1,00,000/- |
| 21. | கொடிமரம் மற்றும் ராஜகோபுரம் கலசங்கள் தங்கத்திருப்பணி செய்தல் | ரூ. 50,00,000/- |
| 22. | கிருத்திகை மண்டபம் கட்டுதல் | ரூ. 26,00,000/- |
| 23. | மரத்தேர் செய்தல் | ரூ. 7,80,000/- |

காசோலை அனுப்ப வேண்டிய முகவரி
துணை ஆணையாளர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு வடபழநிஆண்டவர் திருக்கோயில்
வடபழனி -சென்னை - 26.
தொலைபேசி எண் . 24836903
இணையதளம் : vadapalaniandavartemple.org
மின்அஞ்சல் முகவரி : vadapalaniandavar @ vsnl.net

**ந. தனபால், பி.ஏ., பி.எல்.**
துணை ஆணையர்- செயல் அலுவலர்

**தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.**
இணைஆணையர் - தக்கார்



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2037 விய- கார்த்திகை
மாலை 48 மணி 11 நவம்பர் 2006

# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

''திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார்
உலகாள்வார்'' என்பது பழமொழி.

திருக்கோயில் திருப்பணிக்குப் பக்தியுடன் ஒரு செங்கல்லைக் காணிக்கையாகத் தரினும் உலகையே ஆளத்தக்க பெரும்புண்ணியம் வாய்க்கும் என்பதையே இப்பழமொழி நமக்கு எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு அரிய முயற்சி மேற்கொண்டு அமைக்கப்பட்ட ஆலயங்களை அணுவளவும் சிதையாமல் காக்கும் அறப்பணியால் முன்பு உண்டான புண்ணியம்போல் எட்டு மடங்குப் புண்ணியம் வாய்க்கும் எனவும், காலக்கிரமத்தில் ஆலயத்திற்கு ஏதேனும் பழுது நேருமானால், அதைச் சீர்செய்யும் திருப்பணிக்கு நூறுமடங்குப் புண்ணியம் வாய்க்கும் எனவும் திருவிடைமருதூர்ப் புராணம் எடுத்துரைக்கின்றது.

''இன்புற ஒருவன் தான் புதிதாக
இயற்றிடும் அறத்தினும் ஒருவன்
முன்பு செய்திருந்த அறத்தினுக்கு இறுதி
முந்துறச் செய்திடா திருக்கின்
கொன்பயிர் பயன் அங்கு எண்மடங்கு இனிது
கூடும், நீடறன் இழிந்திடுங்கால்
தன் பொருள் முயற்சி கொண்டுஅதை விளங்கச்
செய்திடின் சதமடங்கு எய்தும்''

என்பது திருப்பணிச்சிறப்பினை எடுத்துக்காட்டும் மிகச்சிறந்த பாடல் ஆகும்.

பழமையும் பெருமையும் மிக்க மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் சில இடங்களில் தூண்களிலும் விதானக் கற்களிலும் சிறிய விரிசல் உண்டானதைக் கேள்விப் பட்ட நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள், எவ்வவு விரைந்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் இப்பழுதினைச் சீர்ப்படுத்தித் திருப்பணிகளைச் சிறப்புற முடித்துத் திருக்குட நீராட்டு விழாவைப் பக்தர்கள் மனம் மகிழும் படியாக நிகழ்த்திடல் வேண்டும் என ஆணையிட்டிருப்பதை உங்களுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சென்ற இதழில் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் வடித்துள்ள ''தமிழ்க் களஞ்சியமாம் தொல்காப்பியம்'' எனும் அரிய படைப்பை வாசகர்கள் பலரும் பாராட்டிக் கடிதம் அனுப்பியுள்ளார்கள், நம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ''குறளோவிய''மாம் தமிழ்க் காவியத்திலிருந்தும் அரிய பல குறளோவியங்களை வெளியிடவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த இதழில் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் வடித்துள்ள ''குறளோவியத்''தமிழ்ப் பெருங்காவியத்திலிருந்து வாசகர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் ஒரு அரிய படைப்பை வெளியிட்டுள்ளோம் என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ள வினை இருள் நீக்கி, வீடுபேறெனும் பேரொளியை ஏற்றவல்ல "கார்த்திகை விளக்கீடு'' பற்றிய கட்டுரைகளும், ''நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை'' திருத்தலம் பற்றிய சிறப்புக் கட்டுரையும் வாசகர்களுக்குப் பெரும்பயன் விளைக்கும் என்று நம்புகின்றேன்.

"வரகுணன் வழிபட்ட திருவிடை மருதூர்" படைப்பும், "கயிலைக்கு நிகரான திருவெறும்பீசர் திருக்கோயில்" படைப்பும், "இலக்கியங்களில் சண்டிகேஸ்வரர்" படைப்பும் நிச்சயம் வாசகர்களைப் பரவசப் படுத்தும்.

''திருப்பதிக்கு நிகரான திருவல்லிக்கேணி'' ''திருப்பாணாழ்வார்'', ''கம்பன் ஆண்டாளுககு அளித்த குஞ்சம்'' எனும் படைப்புகளும் உங்கள் பாராட்டைப் பெறுவது திண்ணம்.

''காலச்சுவடுகள்'' பகுதியில் ''அமைச்சர் இளங்காரர் திருப்பணி செய்த தில்லையாடித் திருக்கோயில்'' உங்களை வெகுவாக மகிழச் செய்யும்.

''திருக்கோயில்'' இதழைப் படிப்பதுடன் நில்லாமல் உங்கள் பயன்மிகு கருத்துகளையும் தொடர்ந்து எழுதுங்கள் என அன்பினில் வேண்டுகின்றேன்.


அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,*
*119, உத்தமர் காந்தி சாலை,*
*சென்னை - 600 034.*

# படமெடுத்தாடும் பாம்பையும் வெல்லலாம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்



நல்ல பாம்பு எனச் சொல்கிறோம் என்றாலும் கொடிய நஞ்சு கொண்ட பாம்பு அது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற பழமொழி அதனால் தானே பிறந்தது!

அதனுடைய போக்கில் ஏதாவது தடை ஏற்பட்டால அந்தத் தடை தன்னை எதிர்ப்பதற்காகவே வந்த தடை என அது கருதிக் கொண்டு சீறிப்பாய்ந்து தன்னுடைய நச்சுப் பல்லை அழுத்திவிடும். அந்தப் பல்லின் ஊசி போன்ற துளையின் வழியாக நஞ்சு இறங்கித் தாக்கப்பட்ட உடலின் உள்ளே சென்று குருதியை நஞ்சாக்கிக் கொன்றுவிடும்.

அப்படித் தாக்கப்பட்டது ஒரு மிருகமாகவும் இருக்கலாம் - அல்லது மனிதனாகவும் இருக்கலாம். பெரும்பாலும் தனக்கு ஒரு தடை வரும்போது தன்னைக் காத்துக் கொள்ளவே அது கடிக்கிறது.

பூந்தோட்டத்தில் புல்தரையில் பஞ்சுப் பாதம் பட நடந்து செல்லும் பாவையொருத்தி அவளையறியாமல் பாம்பொன்றை மிதித்து விட்டால் உடன் அதனுடைய நச்சுப்பல்லுக்கு இரையாக நேரிடுகிறது.

என் அருமைத் தந்தை முத்துவேலரின்

## இதழின் உள்ளே ....


1. படமெடுத்தாடும் பாம்பையும் வெல்லலாம் - மாண்புமிகு தமிழக முதல்வர் "முத்தமிழ் அறிஞர்" டாக்டர் கலைஞர் அவர்கள் 2
2. நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை - சி.ஜெயராமன் பி.ஏ.,பி.எல்., 4
3. கார்த்திகை விளக்கீடு - பருத்தியூர் டாக்டர் கே. சந்தான ராமன் 8
4. சங்க காலம் முதல் கார்த்திகை தீபம் - தமிழாகரர் தெ. முருகசாமி 11
5. கந்தர் சஷ்டித் தத்துவம் - வாரியார் அடிப்பொடி செ.வே.சுதானந்தன் 13
6. சண்டேசுவர நாயனர் - பேராசிரியர் முனைவர் டி.செல்வராகு 14
7. காலச்சுவடுகள் - அமைச்சர் இளங்காரர் திருப்பணி செய்த தில்லையாடித் திருக்கோயில் - முனைவர் த. அமிர்தலிங்கம் 17
8. கேள்வி - பதில் 19
9. வரகுணன் வழிபட்ட திருவிடை மருதூர் - 21
10. திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் - டி.வி.வெங்கட்ராமன் இ.அ.ப.(ஓய்வு) 24
11. அகத்தியர் தேவாரத் திரட்டு - முனைவர் திருமதி மோ.ஞானப்பூங்கோதை 27
12. சேந்தனைப் பாடிய சேந்தன் - ஐங்கரன் 29
13. திருப்பாணாழ்வார் - திருமதி இந்திரா ஆராஅமுதன் 32
14. திருப்பதிக்கு நிகரான திருவல்லிக்கேணி - டாக்டர் ஆ.எத்திராஜன் 34
15. கயிலாயத்திற்கு நிகரான திருவெறும்பீசர் திருக்கோயில் -கவிஞர் யுவராஜ் அமிழ்தன் 36
16. தென்முகக் கடவுள் 108 போற்றி 37
17. கம்பன் ஆண்டாளுக்கு அளித்த குஞ்சம் 39



வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் கூற விழைகிறேன். என்னைப் போலவே அவர் வாழ்விலும் துன்பங்கள் தொடர்கதைகளாக இருந்திருக்கின்றன.

ஒரு நாள் அவர் கிராமத்து ஓட்டுவில்லை வீட்டில் உள்ளே அமர்ந்து அமைதியாக ஏதோ பணியில் ஈடுபட்டிருக்கிறார். கிராமத்து வீடுகளில் வழக்கமாக இருக்கும் பரண் அவர் தலைக்கு மேல் இருந்திருக்கிறது. அதில்தானே வீட்டில் உள்ள தட்டு முட்டுச் சாமான்கள், பாய்கள், படுக்கைகள் எல்லாமே நிறைந்து கிடக்கும்.

அந்தப் பரணில் நெளிந்து கொண்டிருந்த நல்ல பாம்பொன்று எப்படியோ தவறிப் போய், ஒரு இடுக்கின் வழியாக கீழே விழுந்திருக்கிறது. விழுந்த பாம்பு நேராகத் தரையில் விழாமல் என் தந்தையின் தோள்மீது விழுந்திருக்கிறது.

உடனே என் தந்தை கூச்சலிட்டு அலறிக் கையால் அந்தப் பாம்பைத் தூக்கி எறிய முனைந்திருப்பாரேயானால் பாம்பு தலையைத் தூக்கிப் படத்தை விரித்து இமைப் பொழுதில் அவர் உடலில் நஞ்சினை ஏற்றிவிட்டு ஓடியிருக்கும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

தன் தோளில் பாம்பு விழுந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். அதே சமயம் பாம்பின் இயல்பையும் நினைவுபடுத்திக் கொண்டார். நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் துடித்துத் தள்ளினால் அது கடித்துவிடும். ஆகவே அமைதியாக இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு வந்தார்.







# மாங்காடு அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா

மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில் உப திருக்கோயிலான மாங்காடு அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயிலின் திருக்குடநீராட்டு விழா 31.08.2006 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.ஆர். பெரியகருப்பன் அவர்களும், நம் ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பாம்பு தோள்மீது ஊர்ந்து கொண்டிருக்கிறதே என்ற அதிர்ச்சிக்கு இடம் தராமல் ஆடாமல் அசையாமல் அப்படியே சிலைபோல் உட்கார்ந்திருந்தார். தோளில் இருந்த பாம்பு மெல்ல அவர் தொடை வழியாக இறங்கிப் பிறகு தரையில் நெளிந்து அங்கிருந்து அகன்றுவிட்டது. இந்த நிகழ்ச்சியை என் தாயார் அஞ்சுகத்தம்மை அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எனவே நமக்கு எவ்வளவுதான் துன்பம் வெள்ளம்போல் வந்தாலும் அந்தத் துன்பத்தின் இயல்பு என்ன என்பதை உணர்ந்து கொண்டு செயல்பட்டால் அந்தத் துன்பம் நமக்குக் கேடு ஒன்றும்செய்யாது.

''அறிவுடைய ஒருவன் தனக்கு வரும் துன்பம் வெள்ளம் போல் அளவு கடந்ததாக இருந்தாலும் அவன் அந்தத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் அத்துன்பத்தின் வேதனையிலிருந்து விடுபடுவான்'' என்பது வள்ளுவர் வாக்கு! அதாவது துன்பத்தின் இயல்பை நாம் புரிந்து கொண்டால் அந்தத்துன்பம் தானே கெட்டுவிடுமாம்.

பாம்பின் இயல்பைப் புரிந்து கொண்டது மட்டுமல்ல, அதை நினைவிலும் கொண்டதால் தானே பாம்பினால் ஏற்பட இருந்த துன்பம் அகன்றது.



''வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்கெடும்''

- குறள் 622

-மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியக் காவியத்தில் இருந்து இச்சொல்லோவியமாம் தமிழோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## சகல நலங்களும் தரும்

# திருவண்ணாமலை கிரிவலம்






எட்டு திக்கிலும் அஷ்டலிங்கங்களைக் கொண்ட எண்கோண அமைப்பில் திருவண்ணாமலை நகரம் காணப்படுகிறது. இந்த மலையின் சுற்றளவு 14 கிலோமீட்டர் உள்ளது. இம்மலையில் இன்றும் பல சித்தர்கள் வாழ்ந்து வருவதாக வரலாறு. அதன் காரணமாக மலைவலம் வருவது சிறந்தது. குறிப்பாக பௌர்ணமி நாளன்று மலைவலம் வருவது மிகவும் சிறப்பான பலன்களைத் தரும். காரணம் பௌர்ணமி நாளில் விசேடமாக எண்ணற்ற சித்தர்கள் நடமாட்டம் இருப்பதாகவும், மூலிகைக் காற்றுகளின் மணம் வீசுவதால் மனத்திற்கு அமைதியும், உடல் நலத்திற்கு நன்மையும் ஏற்படுவதால், இன்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் பௌர்ணமியன்று மலைவலம் வந்து அருள்மிகு அண்ணாலையாரை தரிசித்து எல்லா நலன்களும் பெறுகிறார்கள் என்பது கண்கூடாகக் காணும் உண்மை.

# நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை

- சி.ஜெயராமன் எம்.ஏ.,பில்.



இந்தப் பிரபஞ்சம் இயங்க ஐந்து பெரும் சக்திகள் தேவை. ''ஆகாயம், காற்று, நீர், நிலம், தீ'' என்ற இந்த பிரிவுகளைப் பஞ்சபூதம் என்று சொல்கிறார்கள். ''பிரிதிவி, அப்பு, தேயு, வாயு,

''ஆகாயம்'' என்ற இந்த ஐந்து பஞ்சபூதங்களுக்கும் தலம் அமைத்து நம் முன்னோர் வழிபட்டு ஆனந்தப் பரவசம் எய்தினர். 'ஆகாயத்தலமாக' சிதம்பரத்தையும் 'பிரிதிவி' என்கிற பூமித் தலமாக திருவாரூரையும் காஞ்சிபுரத்தையும், 'வாயு' என்கிற காற்றுக்கான தலமாக திருக்காளத்தியையும், 'அப்பு' என்கிற நீர்த்தலமாக திருவானைக்காவையும், 'தீ' என்கிற அக்னித்தலமாக திருஅண்ணாமலையையும், நம் முன்னோர் வழிபட்டனர்.

அக்னியே அனைத்திற்கும் மூலம், ஈஸ்வரன், அருணாசலேஸ்வரனாக, மலை உருவில் காட்சி வழங்கும் திருவண்ணாமலை, பஞ்சபூத ஸ்தலங்களுள் மிகவும் விசேஷமானது.

திருவாரூரில் பிறந்தால் முக்தி: காசியில் இறந்தால் முக்தி: தில்லையில் தரிசனம் செய்தால் முக்தி: ஆனால் திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரரை நினைத்தாலே முக்திதான்.

உலகமெல்லாம் போற்றப்படுவது சைவ சமயம். சைவத்திருத்தல நகரம் திருவண்ணாமலை. எந்நாட்டவருக்கும் இறைவன் தென்னாடுடைய சிவன். அந்த சிவப் பெயர்களில் சிறந்து ஓங்குவது அண்ணாமலையண்ணல்.

இத்திருக்கோயில் மிகப் புராதன கலைச் செல்வங்கள் நிறைந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன் சேர, சோழ, ஹொய்சால மற்றும் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் 7 பிரகாரங்கள், 9 கோபுரங்கள், பல மண்டபங்களின் அமைப்புடன் கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றது.

இத்திருத்தலம் நடு நாட்டு சிவத்தலங்கள் 22-இல் சிறப்புடைய ஒன்றாகவும், முக்தித் தலங்கள் நான்கனுள் நினைத்த மாத்திரத்தில் முக்தி நல்க வல்லதாகவும், பஞ்சபூதத்தலங்களுள் நடுநாயகமான அக்னித்தலமாகவும், ஆறு ஆதாரத்தலங்களுள் மணிபூரகத்தலமாகவும் அமைந்துள்ளது. சூரியன், சந்திரன், அஷ்டவசுக்கள், பிரமதேவர், திருமால் முதலான தெய்வங்களே வழிபட்ட சிறப்புடையது.

படைக்கும் கடவுளாகிய பிரம்மாவும், காக்கும் கடவுளாகிய திருமாலும் இருவருமே பெரியவர்கள் என்று தமக்குள் சர்ச்சைஏற்பட்டு, சிவபொருமானிடம் சென்று தம்மில் யார் பெரியவர் எனக் கேட்க, சிவபெருமான் தனது அடியை அல்லது முடியை உங்களில் யார் கண்டு வருகிறீர்களோ அவர் தான் பெரியவர் எனக் கூற, சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லா ஜோதி பிழம்பாகத் தோன்றி நின்றார்.

திருமால் வராக அவதாரம் எடுத்து அடியைக்காண பூமியைக் குடைந்து சென்றார். அடியைக் காண இயலாமல் சோர்ந்து திரும்பினார். பிரம்மன் அன்ன பறவையாக உருவெடுத்து சிவபெருமானின் முடியைக் காண உயரப் பறந்து சென்றார்.

முடியைக் காண இயலாமல் தயங்கி பறக்கும்போது சிவன் தலை முடியில் இருந்து தாழம்பூ கீழே இறங்கி வந்ததை கண்டு, அதனிடம், சிவன் முடியை காண எவ்வளவு தூரம் உள்ளது என்று கேட்க, தாழம்பூ, தான் சிவனாரின் சடையில் இருந்து நழுவி நாற்பதாயிரம் ஆண்டுகளாகக் கீழ் நோக்கி வந்து கொண்டு இருக்கிறேன் என்று கூற, பிரம்மன் முடியைக் காணும் முயற்சியை விடுத்து தாழம்பூவிடம் ஒரு பொய் சொல்லும்படி கூற, அதாவது திருமாலிடம் சிவன் முடியை பிரம்மன் கண்டதாக சாட்சி சொல்லும்படி கேட்டுக் கொண்டதற்கு இணங்க தாழம்பூ சாட்சி சொல்ல, முற்றும் உணர்ந்த சிவபெருமான், பொய் சொன்ன பிரம்ம தேவனுக்கு ஆலயம் பூலோகத்தில் அமையாதென்றும், பொய் சாட்சி சொன்ன தாழம்பூ சிவ பூஜைக்கு உதவாது என்றும சாபமிட்டு விட்டார்.

திருமாலும், பிரம்மனும் சிவபெருமான் அடியையும், முடியையும் காணமுடியாத ஜோதிப் பிழம்பாக நின்ற இடம் திரு அண்ணாமலை. இங்கு அண்ணாமலையானது கிருத யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க

## திருவண்ணாமலையில் தினமும் நடைபெறும் விசேடம்

இத்திருக்கோயிலின் குறிப்பிடத்தக்க விசேடமாக தினசரி அதிகாலையில் திருமஞ்சனக் கோபுரம் வழியாக யானை முன்வர மேள தாளங்களுடன் 'திருமஞ்சனம்' கொண்டு வந்து சுவாமி சன்னதி நுழைவாயிலில் ஊற்றிய பின்னர்தான் சன்னதிக் கதவுகள் யாவும் திறக்கப்படுகின்றன. மேலும் திருக்கோயிலில் நடத்தப்படும் கோசாலையில் உள்ள பசுக்களில் ஒன்றைத் தினசரி அதிகாலையில் அலங்கரித்து அழைத்து வந்து சுவாமி சன்னதி முன்புறம் அண்ணாமலையாரின் சன்னதி நோக்கி நிற்க வைத்து முறையாக 'கோ' பூஜை செய்த பின்னர்தான் பக்தர்களைச் சன்னதிக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.



மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறி வந்துள்ளது. ஜோதிப் பிழம்பாக இருந்த சிவபெருமானைத் திருமாலும், பிரம்மனும் பணிந்து பிரார்த்திக்க அவர்களின் பிரார்த்தனைக்கு இறங்கி சிவபெருமானே சிவலிங்க திரு உருக்கொண்டு மலையின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள இடம் இத்திருக்கோயில் ஆகும்.

அனல் வடிவமாய் எழுந்த சிவன், அடிமுடி காணாத தோற்றத்தில், அன்னம், பன்றி, பொய் சாட்சி சொன்ன தாழம்பூ உருவ அமைப்புகளுடன் காட்சி தருவது 'லிங்கோத்பவர்' என்று பெயர். எல்லா சைவத்திருக்கோயில்களிலும் சுவாமி கருவறைக்குப் பின்புறம் இத்தலத்தின் வரலாற்றுச் சிற்பமான 'லிங்கோத்பவர்' பிரதிஷ்டை செய்திருப்பர். இதுவே சைவத்தின் தலைநகர் திருவண்ணாமலை என்பதை உறுதி செய்கிறது.

சிவபெருமான் ஜோதிப்பிழம்பாக இருந்தார் என்பதைக் குறிக்கும் வகையில் வருடந்தோறும் கார்த்திகை தீபப் பெருவிழா பத்து நாட்கள் நடைபெறும். பத்தாம் நாள் தீபத்தரிசனத்தன்று உதயகாலத்தில் பரணி தீபமும், பிரதோஷ காலத்தில் அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தி எழுந்தருளிக் காட்சிக் கொடுத்து அவ்வேளையில் அண்ணாமலையின் மலையின் உச்சியில் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்தில் ஆலயத்துள் பஞ்சமூர்த்திகளுக்கும் ஆராதனை செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் தீப தரிசனத்தை காண நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல லட்சக்கணக்கில் பக்தர்கள் இங்கு வந்து தரிசிப்பார்கள்.


உமாதேவியார் விளையாட்டாக சிவபெருமானின் கண்களைத் தன் கையால் மூட உலகம் எங்கும் இருளாயிற்று. ஜீவராசிகள் இருளில் இன்னல்கள் அடைந்தன.

இந்தப் பாபம் தீர்க்க வேண்டி உமா தேவியார் காஞ்சி மாநகரத்தில் மணலை லிங்கமாக அமைத்துப் பூஜை செய்துவரும் நாளில் சிவபெருமான் தோன்றி திருவண்ணாமலை சென்று தவமியற்றித் தமது இடப்பாகம் பெறுமாறு அருளிச் செய்தார்.

சிவபெருமான் கட்டளைப்படி பார்வதி தேவியார் திருவண்ணாமலைக்கு வந்து பவழக்குன்று மலையில் பர்ணசாலை அமைத்து கௌதம முனிவரின் உதவியால் தவம் செய்தார். தவத்தை மகிடாசூரன் என்பவன் கெடுத்து வந்தான்.

உமாதேவியார் துர்க்கையாக உருவெடுத்து மகிடாசூரனை வதம் செய்து, கார்த்திகை மாதம் பௌர்ணமி கூடிய கிருத்திகை பிரதோஷ காலத்தில் மலை மேல் ஜோதி ஸ்வரூப தரிசனம் கண்டு சிவபெருமான் இடப்பாகம் பெற்று உமாதேவியார் அமர்ந்தார். இதனைக் குறிக்கும் வகையில் கார்த்திகை தீபத்தன்று மாலை சரியாக 6.00 மணிக்கு அர்த்தநாரீஸ்வர மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலையில் அருணகிரிநாதப் பெருமான் பிறந்து வளர்ந்து முக்கியடைந்தார். இவர் இல்லற வாழ்க்கையைத் துறந்து முருகப் பெருமானை நாடி தவம் இருந்தார். முருகப் பெருமானின் அருள் கிட்டாததால் திருக்கோயிலின் கோபுரங்களுள் ஒன்றான வல்லாள மகாராஜன் கோபுரத்தின் உச்சியில் ஏறித் தன் உயிரைப் போக்கிக் கொள்ள அங்கிருந்து விழுந்தார். அப்போது முருகப் பெருமான் தோன்றி அருணகிரிநாதரை தடுத்தாட்கொண்டருளித் தம்மைப் 'பாடும் பணியே பணியாக'ச் செய்து வரும்படி கட்டளை இட்டு முருகப் பெருமானே ''முத்தைத்தரு'' என அடியெடுத்துக் கொடுத்து



# அருணாசலம் என்பதன் விளக்கம்



'அருணன்' என்றால் 'சூரியன்' - நெருப்பின் நிறமான சிவப்பைக் குறிக்கும்.

'அசலம்' என்றால் 'கிரி' என்றும 'மலை' என்றும் பொருள். எனவே அருணாசலம் என்றால் சிவந்த நிறத்தையுடைய மலை என்று பொருள்.

அருணகிரி நாதருக்குப் பாடும் ஆற்றலைத் தந்தார். பல ஊர்கள் சென்று முருகப் பெருமானைத் தரிசித்து அவர் பாடிய பாடல்கள் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி முதலியனவாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திரத் திருநாளன்று இந்தத் திருக்கோயிலில் அருணகிரிநாதர் விழா நடத்தப்பட்டு வந்தது.

தற்போது அருளாளர் அருணகிரிப் பெருமானின் முக்திப்பேறு விழா ஆண்டு தோறும ஆனி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபுட தேவராய மன்னருக்குக் கண் பார்வை தெரிய மருததுவ சிகிச்சைக்கு அருணகிரிநாதர் கிளி வடிவம் எடுத்து பாரிஜாத மலர் கொண்டு வந்து சேர்த்தபின்பு தம் உருவத்தில் போக திரும்பிய போது தான் விட்டுச் சென்ற இடத்தில் தனது உடல் காணாமல் போகவே கிளி உருவோடே பறந்து சென்று முக்தி அடைந்தார். கிழக்குத் திசையில் உள்ள நுழைவாயில் கோபுரத்தின் மேல் உள்ள கலசத்தில் கிளி உருவாக அமர்ந்து சென்றதால் இதற்குக் ''கிளி கோபுரம்'' என்று பெயர். கிளி உருவாகவேயிருந்து. 'அநுபூதி' பாடியருளினார் என்பது வரலாறு.

வல்லாள மகாராசன் நீதி வழுவாமல் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். அரசனுக்கு பிள்ளைப்பேறு இல்லை. அண்ணாமலையாரே குழந்தையாக அரசருக்குத் தோன்றியருளினார். அதனால்தான், இன்றளவும் அரசனின் ஈமக்கடன் செய்யும் பொருட்டு ஸ்ரீ அண்ணாமலையண்ணல் மாசி மாதம் மக நட்சத்திரத்தில் ''பள்ளி கொண்டாப்பட்டு'' என்னும் சிற்றூருக்கு எழுந்தருளி உத்திரகிரியை நடத்தும் உற்சவம் ''பள்ளிகொண்டாப்பட்டு'' உத்திரகிரியை மண்டகப்படி உற்சவம்' என்று இன்றும் நடைபெற்று வருகிறது.

'ஞானத் தபோதனரை வாவென்று அழைக்குமலை அண்ணாமலை'ஆகிய இத்தலம் சித்தர்களின் சரணாலயமாகவும் விளங்குகிறது. பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான இடைக்காட்டுச்சித்தர் இத்தலத்திற்கு உரியவராக விளங்குகிறார். விருபாட்சதேவர், குகைநமச்சிவாயர், குருநமசிவாயர், தெய்வசிகாமணி, அருணாசல தேசிகர், மகான் சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ரமண மகரிஷி


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |


(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



முதலான ஞானத்தபோதனர்களைத் தனது ஜோதியில் இணைத்துக் கொண்ட மகத்துவம் உடையது திருவண்ணாமலை.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலானோர் அண்ணாமலையாரை வந்து தரிசித்து பதிகங்கள் பாடியுள்ளார்கள். மாணிக்கவாசகர் திருவண்ணாமலைக்கு வந்து பலகாலம் தங்கியிருந்து (வைணவத்தில் மார்கழி மாதத்திற்கு திருப்பாவை இருப்பது போல)' சைவத்திற்கு மார்கழி ''திருவெமபாவை'' (20) பாடல்களையும், திருவம்மானை பதிகத்தையும் இயற்றி உள்ளார்.

அண்ணாமலையார் சன்னதிக்குப்பின் வைணவர்களின் தெய்வமான அருள்மிகு வேணுகோபாலசுவாமி சன்னதியும், மலைசுற்றும் வழியில் அருள்மிகு கிருஷ்ணன் சன்னதியும் உள்ளது. இது அரியும் சிவனும் ஒன்றெனக்காட்டுகிறது. இந்த அமைப்பு பிற இடங்களில் காண்பது அபூர்வம்.


இங்கு உள்ள மலையை அருள்மிகு அண்ணாலையாரின் உருவாகவே மக்கள் போற்றி வணங்கி வருகிறார்கள். மலையின் உயரம் 2668 அடி. இம்மலையைச் சுற்றி வந்தால் எல்லா நன்மையும் உண்டாகும்என்பது நம்பிக்கை. காரணம் மலையின் மத்தியிலும், அடிவாரத்திலும் குகைகள், ஆசிரமங்கள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன. அவைகளில் இன்றும் சாதுக்கள் வாசம் செய்து வருகின்றனர்.

கார்த்திகைதீபம் மலைமேல் ஏற்றுவதற்கு நெய் முதலியவைகளைத் திருக்கோயில் கண்காணிப்பில் சுத்தமாகச் சேமித்து வைக்கப்பட்டு, பிரார்த்தனையாளர்களும், பக்த கோடிகளும் உரிய தொகை செலுத்தினால் அவர்கள் பங்கிற்குண்டான நெய், திரி, கற்பூரம் முதலியவைகளைச் சிப்பந்திகள் மூலம் பாதுகாப்போடு மலைக்கு கொண்டு சேர்க்கப்படும்.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை திருக்கோயிலுக்குள் சிவகெங்கை தீர்த்தத்தில் புற அமுக்குப்போகப் புனித நீராடிப் பிரம்ம தீர்த்தத்தில் மூழ்கி அசுத்தம் அகன்று பிரம்ம ஞானம் பெற்றிடுவர்.

உடலே குன்று, உள்ளமே கொப்பரை, நேயமே வத்தி, தியானமே நெய், பிராணனே கற்பூரம், ஞானமே அக்னி, அஞ்ஞான இருள் கெட இவைகளைப் பெருக்கி மெய்ஞானச்சுடர் மேலோங்கத் தீப தரிசனம் காண்போம்.

# இரண்டு திட்டைகள்



பிரளயம் முன்னொரு காலத்தில் ஏற்பட்டபோது உலகம் முழுக்க வெள்ளத்தில் மூழ்கிய போதும் மூழ்காமல் இருந்தன இரண்டு திட்டைகள்(மேடுகள்).

அந்தத் திட்டைகளில் ஒன்று தான் வடகுடி திட்டை எனப்படும் சீர்காழி. மற்றொரு திட்டை, நின்ற நிலையில் ராஜகுருபகவான் தரிசனம் தரும் குருஸ்தலமான தென்குடி திட்டை.

தஞ்சாவூரிலிருந்து 10கி.மீ தூரத்தில் தஞ்சை-திருக்கருகாவூர் வழியில் அமைந்துள்ளது இத்தென்குடி திட்டை திருத்தலம்.

# கார்த்திகை விளக்கீடு

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A. D.Litt. Ph.D.,

முருகனுக்கு உகந்த இரண்டு மாதங்கள்

இரண்டு தமிழ் மாதங்கள் முருகனுக்குரிய நட்சத்திரங்களின் பெயரால் வழங்கி வருகின்றன. முருகன் விசாக நட்சத்திரத்தில் பூவுலகில் வந்து உதித்தான். விசாகன் உதித்த மாதம் வைகாசி என்று பெயர்பெற்றது.

மற்றொன்று முருகனுக்குப் பால் கொடுத்து வளர்த்த கார்த்திகைப் பெண்களுக்கு உரிய கிருத்திகை நட்சத்திரம். கிருத்திகை சிறப்பாகக் கொண்டாடப்படும் மாதம் கார்த்திகை என்று அழைக்கப்பட்டது.

முருகன் விசாக நட்சத்திரத்தில் உதித்தான். ஆனால் விசாகத்தைவிட, கார்த்திகை நட்சத்திரமே அவனுக்கு மிகவும் உகந்ததாக ஆயிற்று. குழந்தை முருகனுக்குக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டினார்கள். ''கார்த்திகைப் பெண்கள் பாலூட்டியதால் முருகன், 'கார்த்திகேயன்' என்று பெயர் பெறுவான்'' என்றும், ''கார்த்திகை நட்சத்திரத்தில் அவனை வழிபடுவோருக்கு, இக வாழ்க்கையில் எல்லா நலன்களையும் தந்து, இறுதியில் மோட்சமும் அருள்வேன்'' என்றும் சிவபெருமானே உறுதியளித்தார். கந்தபுராணம் உணர்த்தும் நீதி நன்றி மறவாமை ஆகும். கார்த்திகைப் பெண்களுக்கு நன்றி பாராட்டி, ஈசனே அந்த வரத்தை அளித்தான்.

கார்த்திகைத் திருநாள்

பன்னிரெண்டு மாதங்களிலும் கிருத்திகை வருகிறது. எனினும் கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியுடன் சேர்ந்து வருகிறது. ஆகவே இதனைப் ''பெரிய கார்த்திகை'' என்று போற்றுகின்றனர். கார்த்திகை மாதம் முழுவதுமே தினசரி மாலையில் அகல் விளக்குகளை ஏற்றுவது நல்லது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களிலும், காசி நகரிலும் இவ்வழக்கம் இன்றும் உள்ளது.

கிராமங்களில் சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னால் இருந்தே கார்த்திகைப் பண்டிகைக்காக, உரல்களில் அவல் இடிக்கும் ஓசைகேட்கத் தொடங்கிவிடும். ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே இல்லங்களில் வெல்லப்பாகு மணம் வீசத் தொடங்கிவிடும்.

கார்த்திகை தீபத்தைக் கொண்டாடுவதில் பெண்களே அதிகமான ஆர்வம் காட்டுகின்றனர். பெண்களுக்கு, 'கார்த்திகைச் சீர்' கொடுப்பதை மகிழ்ச்சியான கடமையாகவே சகோதரர்கள் கருதுகின்றனர். ''கல்யாணமோ! கார்த்திகையோ!'' என்று இந்தப் பண்டிகையைச் சுபமங்கள வைபவமாகவே கொண்டாடுகின்றனர்.

விளக்கீடுவிழாவின் பயன

கார்த்திகைப் பண்டிகையின் முதல் நாள் பரணி தீபம். இரண்டாம் நாள் கார்த்திகை தீபத் திருவிழா. மூன்றாம் நாள், 'குப்பைக் கார்த்திகை' என்று குறிப்பிடப்படும். அன்று மாட்டுக் கொட்டகை, கொல்லைப்புறம், குப்பைத் தொட்டி ஆகிய எல்லா இடங்களிலும் அகல் விளக்குகள் ஏற்றுவார்கள்.

ஐப்பசி அடைமழைக் காலம். மழை ஓய்ந்த பிறகு நோய்க்கிருமிகள் உற்பத்தியாகும். அவை வளர்ச்சி அடைந்து மார்கழியில் காலரா முதலான நோய்களை ஏற்படுத்தும். கார்த்திகை விழாவில் இல்லந்தோறும் நூற்றுக் கணக்கில் நல்லெண்ணெய் தீபங்களை ஏற்றுகிறோம். திருக்கோயில்களில் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றுகின்றனர். இவற்றின் சுடரின் பயனாக நோய்க்கிருமிகள் அழிந்து போகின்றன.

திருக்கோயில்களில், 'சொக்கர்பனை' கொளுத்துகின்றனர். சொக்கர் என்னும் சிவபெருமான் திருவண்ணாமலையில் அழல் வடிவமாகத் தோன்றியதை நினைவு கொள்ளும் வகையில் சொக்கர்பனை கொளுத்துகின்றனர்.

கிராமங்களில் கோயில்களின் வாயிலில் பனைமட்டை அல்லது தென்னை மட்டைகளைக் கூம்பு வடிவத்தில் கட்டிவைப்பர். புறப்பாட்டுக்குத் தயாராக இருக்கும் சுவாமியின் முன்னால் அக்கூம்பைக் (சொக்கர்பனையை) கொளுத்துவார்க்ள.

மகாபலி மன்னன் ஆண்டு முழுவதும் அவ்வாறு கொளுத்தியதாகக் கூறுவர். அதுவே, விஷ்ணு ஆலய சொக்கர்பனையின் ஐதீகமாகும். ஐதீகம் வேறுபட்டாலும் பயன் ஒன்றே. அதுதான் நோய்க்கிருமிகளை அழித்தல்!


கார்த்திகை தீபமேற்றும் விழா தொன்று தொட்டு நடந்து வருகிறது. திருஞான சம்பந்தப் பெருமான் திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கப் பதிகம் பாடினார். கபாலீச்சரம் அமர்ந்த பெருமானின், ''கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்?'' என்று பாடுகிறார். தீபத் திருவிழாவைத் தமிழ்ஞான சம்பந்தர், 'விளக்கீடு' என்ற தூய தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகிறார்.

வைகாசி விசாகத்தை ஒட்டி, மயிலையில் இலட்சதீப விழா நடைபெறுகிறது. இவ்வாறு, உள்ளூர் மரபுகளுக்கு ஏற்ப, தைப்பூசம் போன்ற நாட்களிலும் ஆங்காங்கே விளக்கீடு விழாக்கள் நடப்பதுண்டு.

காஞ்சிபுரத்தில் தீபப்பிரகாசர் திருக்கோயில் உள்ளது. அவரை, 'விளக்கொளிப் பெருமாள்'

## இரண்டு கயிலாயங்கள்

இமயமலையில் அமைந்துள்ளது ஒரு கயிலாயம். சிவலோகத்தில் அமைந்துள்ளது இன்னொரு கயிலாயம், அதுவே திருக்கயிலாயம் ஆகும்.



என்று குறிப்பிடுகின்றனர்,

### விளக்கீடு விழாவின் உட்பொருள்

அகல், எண்ணெய், திரி, சுடர் ஆகிய நான்கும் விளக்காகிறது. அது போல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் வாழ்க்கையின் பயன்கள் ஆகும். அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிகளால் எய்தலாம். நமிநந்தி அடிகள், கலியநாயனார் போன்றவர்கள் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் செய்து இறைவன் திருவருளைப் பெற்றனர்.

### அண்ணாமலை தீபம்

இறைவனின் அடியையும், முடியையும் காண, திருமாலும், பிரமனும் முயன்றனர். அப்போது இறைவன் அழல் உருவாய் உயர்ந்து நின்றான். அண்ணுதல் என்றால் அடைதல் என்பது பொருள். திருமாலும், பிரமனும் அடைய முடியாத நிலையில் ஈசன் அழலாய் நின்றான். அவ்வழல் உருவே பின்னர் மலையாகிவிட்டது என்பர்.

திருமால் செல்வத்துக்கு அதிதேவதையான மகாலட்சுமியைத் தமது மார்பில் வைத்திருக்கிறார். பிரமன் கல்விக்கு அதி தேவதையான சரஸ்வதியைத் தமது நாவில் வைத்து இருக்கிறார். அவர்களால் ஈசனைக் காண முடியவில்லை !ஆம்! செல்வத்தாலும், கல்வியாலும் கடவுளைக் காண முடியாது என்பதே அடிமுடி தேடிய வரலாற்றின் உட்பொருள் ஆகும்.

திருவண்ணாமலை உச்சியில் செப்புக் கொப்பரையில், இருபத்து நான்கு முழம் உள்ள துணியில், ஒரு மணங்கு கற்பூரமும், இருபது மணங்கு நெய்யும் ஊற்றித் தீபமேற்றுகின்றனர். விளக்கின் ஒளியில் இருள் விலகுகிறது. அது போல் அறிவாகிய ஒளியில் அறியாமை இருள் விலக வேண்டும் என்பதே தீபத்திருநாளின் நோக்கமாகும்.

### விளக்கே மனித நாகரிகத்தின் தொடக்கம்

மனித நாகரிகத்தின் வளர்ச்சியே, அவன் விளக்கைக் கண்டுபிடித்த நாளில்தான் தொடங்கி இருக்கிறது. மரக்கட்டைகளையும், விலங்குகளின் கொழுப்பையும் கொண்டு ஆதிமனிதன் விளக்கேற்றினான். பின்னர் சங்கு, கிளிஞ்சல் போன்ற பொருட்களை விளக்காக்கினான். அதன்பின் அவன் கண்டுபிடித்த அகல் விளக்கு இன்று வரை பயன்பட்டு வருகிறது.

இறைவனை, 'ஒளிர்வளர் விளக்கு' என்று போற்றுகின்றனர். சிறந்த மனிதர்களை, 'வழி காட்டும் ஒளிவிளக்கு'' என்று புகழ்கிறோம். பெண்களைக் 'குடும்ப விளக்கு' என்று போற்றுகிறோம். அவள் விளக்கேற்றுவதிலேயே இல்லறக் கடமை தொடங்குகிறது. ஆகவே, "வீட்டிற்கு விளக்கேற்ற ஒரு பெண் வேண்டும்'' என்று கருதுகின்றனர்.

ஒளியும் காற்றும் உள்ள இடத்தில் நோய்கள் அண்டாது. எனவே, ''வைத்தியருக்குக் கொடுப்பதை வாணியருக்குக் கொடு'' என்ற பழமொழியும் தோன்றியது. செக்கில் எண்ணெய் உற்பத்தி செய்து விற்கும் வணிகர்களையே, 'வாணியர்' என்றனர்.

### நிறைவான பொருள் விளக்கே!

பகவான் கிருஷ்ணர் தருமனிடமும், துரியோதனனிடமும் தலா ஒரு பொற்காசைக் கொடுத்து, ''இருவரும் வீடு நிறைந்த பொருளாக வாங்கி வையுங்கள்'' என்று கூறினார். துரியோதனன் வைக்கோல் முதலான பொருட்களை வாங்கி வீட்டில் வைத்தான். அப்போதும் வீட்டின் ஒரு பகுதி வெற்றிடமாக இருந்தது. கண்ணனிடம் அவன் மேலும் ஒரு பொற்காசு கேட்டான். தருமனோ சில விளக்குகளை வாங்கி வீட்டில் ஆங்காங்கே ஏற்றி வைத்தான். பொற்காசில் எஞ்சிய தொகையைக் கண்ணனிடம் திருப்பிக் கொடுத்தான். விளக்கே வீட்டிற்கு மங்கலமும் நிறைவும் அளிக்கும் பொருள் என்பது இதனால் தெளிவாகிறது.

ஆங்கிலக் கவிஞர் ரஸ்ஸல் என்பவர் அரபு நாட்டுக் கதை ஒன்றை ஆங்கிலக் கவிதையாக இயற்றினார். மகனைக் கொன்றவனைப் பழிவாங்கக் காத்திருந்தார் தந்தை. அந்த நிலையில் குற்றவாளி தந்தையின் மாளிகையிலேயே ஓரிரவு தஞ்சம் புகுந்து தங்கினான்.

அவனே தன் மகனைக் கொன்றவன் என்பதை அறியாது அவனுக்கு விருந்தளித்து உபசரித்தார் தந்தை. அவன் விரைவில் பயணிக்க ஒரு குதிரையை அளித்து அவனை வழியனுப்பினார். அப்போது அக்குற்றவாளி, தானே உபசரித்தவரின் மகனைக் கொன்றவன் என்று கூறி மன்னிப்புக் கேட்டார்.

தந்தை குற்றவாளியிடம் மூன்று மடங்கு பொற்காசுகளைக் கொடுத்துத் தன் கண்ணில் படாமல் சென்றுவிட வேண்டினார். அச்செயலை வருணித்த ரஸ்ஸல். மன்னிக்கும் பெருந்தன்மை மற்றவரிடத்திலும் பெருந்தன்மையையே தோற்று விக்கிறது. எவ்வாறெனில், ஒரு விளக்கு மற்றொரு விளக்கை ஏற்றினாலும் தன்னொளியில் குறைவதில்லை என்றார். ""As one lamp lights another nor grows less; So nobleness enkindleth nobleness"" என்றார்.

அத்தகைய உயர்ந்த மனித நேயத்தை விளக்கீடு விழாவில் போற்றுகிறோம்.

## மூவேந்தர்களும் விரும்பிய ஊர்

சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் விரும்பிய ஊர் சேலம்.



ஔவை மூதாட்டி பாரி மன்னர் பெற்ற அங்கவை, சங்கவை என்ற இரு பெண்களுக்கும் திருமணம் செய்துவைத்த ஊர் சேலம்.

இந்தத் திருமணத்தில் கலந்து கொள்ள வந்த மூவேந்தர்கள் தத்தம் பெயரால் உருவாக்கிய ஊர்கள் சேலத்தில் உள்ளமை குறிப்பிட வேண்டிய ஒன்று.

சேரன் உருவாக்கிய ஊரே சேலம் என்றானது.
பாண்டியன் உருவாக்கிய ஊரே வீரபாண்டி.
சோழன் உருவாக்கிய ஊரே உத்தம சோழபுரம்.

உத்தமசோழபுரத்தில் உள்ள கரபுரேஸ்வரர் ஆலயம் புகழ்மிக்கது. இந்த கோயிலின் முன் உள்ள ஔவையின் சிலையை மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

# சங்க காலம் முதல் கார்த்திகை தீபம்

**தமிழாகரர் தெ.முருகசாமி எம்.ஏ.பி.ஓ எல்**

ஊரறிய உலகறியத் தெரியும் துல்லியமானதைக் குன்றிலிட்ட விளக்கு என்பர். யாவரும் எளிதாக. தெளிவாக அறியத்தக்க வகையில் எவ்வித மறைப்புக்கும் இடமின்றி எங்கிருந்து பார்த்தாலும் தெரியும்வண்ணம் ஏற்பட்ட விளக்கு என்பது மட்டுமின்றிப் புறஇருளைப் போக்கிப் பொருளை விளக்கும் சிறப்பும் உடையது என்பதால் இருளை விலக்கிப் பெருளைக் காட்டும் ஒளிக்கு விளக்கு என்றனர் ஆன்றோர்.




விளக்கு என்றதும் கார்த்திகை விளக்குதான் நம் நினைவுக்கு வரும். எல்லா மாதத்திலும் எல்லா நாளிலும் விளக்கேற்றி வழிபடுவது தமிழர்தம் வழக்கமாயினும் கார்த்திகை மாதத்தை மட்டும் விளக்கோடு தொடர்புபடுத்திக் கூறக் காரணம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

வயலில் ஆடிப்பட்டம் தேடி விதைத்ததும் ஆவணியில் கருக்கொண்ட மேகம் புரட்டாசியில் மண்ணுருகப் பெய்யும் நீர்ச்சத்தால் நெற்பயிர்கள் பால் பிடிக்கும். ஐப்பசியின் அடைமழையில் நெற்பயிர்கள் கருக்கொள்ளும். ''கார்த்திகையில் கருத்த இடத்து மழை'' என்னும் பழமொழியின் படி விட்டுவிட்டுப் பெய்யும் மழையால் முன்பு கருக் கொண்டு முற்றிய நெல், முளைத்து விடாதபடி மழைமேகத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக, மலைமுகடுகளில் வந்து தங்கும் மேகங்களின் மழைக்கூறை மாற்றவே பெரிய தீப்பந்தங்களை ஏற்றி வைப்பர். இதனால் மேகங்கள் மழைக்கூறு நீங்கி பனியாக மார்கழியில் கொட்டும்போது முற்றிச் சாய்ந்த நெற்கதிர் அறுவடையாகும் நிலையில் தைப்பொங்கலுக்குப் புத்தரிசி கிடைத்து விடும்.

இப்படி வேளாண்தொழிலுக்கு உதவியாக இருக்கும் வயில்தான் முகடுகளில் தீபம் ஏற்றும் வழக்கம் தொன்று தொட்டுத் தொடங்கி இருக்க வேண்டும் எனக் கார்த்திகைத் திங்களை உய்த்துணரலாம். இதைப் பற்றிய குறிப்பு, நக்கீரர் அகநானூற்றின் 141 ஆம் பாடலில் குறிப்பிடுகிறார்.

''உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி
மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்த மாலை தூக்கி
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம. !''

உழவுத் தொழிலுக்கு உதவியான கலப்பை (நாஞ்சில்)க்கு வேலையில்லாமல் போகுமாறு மழையும் நின்று போனதால் தெளிவான ஆகாயத்தில் இருளை நீக்கும் முழுநிலவானது கார்த்திகை நட்சத்திரங்களுடன் (அறுமீன்) சேர்ந்து ஒளிவீசும்போது தெருக்கள்தோறும் வரிசையாக விளக்குகளை ஏற்றி வைத்து மாலைகளால் அலங்காரம் செய்து கார்த்திகை விழாக் கொண்டாடப்பட்டதாக அகநானூறு கூறுகிறது. இதுபோலவே, களவழி நாற்பது என்ற இலக்கியத்தில் பொய்கையார், போர்க்களத்தில்



வெட்டிச்சாயும் வீரர்களின் உடல் குருதி வெள்ளத்தில் மிதப்பதைக் கார்த்திகை விளக்கின் வரிசைபோல் உள்ளதாகக் கூறினார். மலைமுகடுகளில் விளக்கேற்றிய குறிப்பை ''அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில் பெருவிழா விளக்கம்'' என்று பாலைபாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார். (அக.நா.185)

இப்படியாகச் சங்ககாலத்தில் இருந்த சமயத் தொடர்பான விளக்குவழிபாட்டு வழக்கம் தொடர்ந்து சமய உணர்வுகள் மேலோங்கியிருந்த காலத்தில் சிறப்பாகவே இருந்தது எனலாம். எலும்பைப் பெண்ணாக மாற்றிய ஞானசம்பந்தர் பாடும் மயிலாப்பூர் தேவாரத்தில் ''கார்த்திகை விளக்கீடு காணாமல் போதியோ!'' என்று கார்த்திகைத் திங்களுக்கான சிறப்பை வெளிப்படுத்தினார். வழிவழியான இவ்விளக்கு வழிபாட்டைச் சரியாகப் பதிவு செய்தவர் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் ஆவார்.

இருட்டைப் போக்குவது விளக்கு. இருட்டு புற இருட்டு, அகஇருட்டு என இருவகைப்படும். புறஇருட்டை ஓட்டும் விளக்குகளாக சூரியன், சந்திரன் மற்றும் பல சுடர்களைக் கூறலாம். ஆனால் உள்ளத்தில் உள்ள தீய எண்ணங்களாகிய இருட்டை ஓட்டுவதற்கு ஊனக்கண்ணால் காணத்தகும் விளக்குச் சுடர்கள் பயன்பட மாட்டா. அதற்கு ஞான விளக்குதான் தேவை.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது என்பது புற இருட்டைப் போக்கும்விளக்கு. நல்லக விளக்கது நமச்சிவாயவே என்பது அக இருளை ஓட்டும் ஞானவிளக்கு. இதைத்தான் வள்ளுவரும் குறிப்பாக.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு''

என்று விளக்குகளின் வேறுபாட்டைக் கூறினார். ஆண்டவனை வள்ளலார். ''ஆணவம் என்னும் ஓர் இருளற என் உள்ளத்து ஏற்றிய விளக்கே'' என அழைக்கிறார். ''மாய வல்லிருள் நீங்க மனத்திடைத்தூய ஞானச் சுடர் விளக்கேற்றிய நாயகனே'' என்று அதிவீரராம பாண்டியர் கூறினார்.

இப்படியாக, உலகில் புற இருட்டையும் அக இருட்டையும் போக்கத் தனித்தனி விளக்குகள் இருந்தாலும் தெய்வீகம் பொருந்திய இக்கார்த்திகை விளக்கு மட்டும் இரண்டுவிதமான இருட்டையும் போக்கும் அதிசய விளக்கு என்று வியப்படைகின்றார் சிவப்பிரகாசர்.

''ஏற்றிடும் விளக்கின் வேறுபட்டு அகத்தின்
இருளெலாம் தன்பெயர் ஒருகால்
சாற்றினும் ஒழிக்கும் விளக்குஎனும் சோண
சைலனே! கைலை நாயகனே!'' (56)

என்றும்

''கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவ ரகத்து இருள் அனைத்தும்
சாய்ந்து நின்று எழுந்து விளக்குறும் சோண
சைலனே! கைலை நாயகனே!'' (08)

## காந்தத் தீர்த்தம்

சேலத்திலிருந்து 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள புகழ்மிக்க திருத்தலம் கஞ்சமலை சித்தேஸ்வரசுவாமி ஆலயம் ஆகும்.



இவ்வாலயத்தில் அமைந்துள்ள திருக்குளமே காந்தத் தீர்த்தம் ஆகும்.

வேண்டாத பருக்கள் முதலான தோல் வியாதிகள் குணமடைய காந்தக் குளத்தில் உப்பும், வெல்லமும் கொட்ட வேண்டும்.

உப்பும், வெல்லமும் கரைவது போல் பருக்கள் முதலான தோல் வியாதித் துன்பங்கள் மறைந்து போகும்.

என்றும் கூறும் கார்த்திகை விளக்கின் அதிசயத்தை என்னென்பது!, இந்த அதிசயத்திற்கு எது காரணம் என்பதையும் சிவப்பிரகாசரே கூறும்போது, இறைவனே கார்த்திகை விளக்காக உள்ளதைக் காரணமாகக் கூறுகிறார். திருவண்ணாமலை வடிவான ஆண்டவனே பாம்பையும் பன்றிக் கொம்பையும் அணிந்த அதிசய விளக்காகக் காணப்படுகிறானாம்.

''கட்செவியும் ஒண்கேழலின் மருப்பும் சார்தரும்

உலக விளக்கெனும் சோணசைலன்'' (24)

என்பது சிவப்பிரகாசர் திருவாக்கு.

வீட்டில் விளக்கிற்கு அகல் திரி, நெய், நீமுதலியன தேவை. அவற்றோடு சுடரை ஏற்றுவதற்குரிய ஆளும் இருந்தால்தான் விளக்கை ஏற்ற முடியும். ஆனால் ஆண்டவனாகிய கார்த்திகை விளக்கை ஏற்ற எந்தச் சாதனங்களும் தேவையில்லை. தானே சுயம்பாகத் தெரியக்கூடிய விளக்கு.

''அகவிளக் கென்ன அகல்திரி நெய்தீ
ஆக்குவோர் இன்றியே எழுந்த
சகவிளக்கு என்ன விளங்குறும் சோண
சைலனே! கைலை நாயகனே!''


இங்ஙனமாகிய தெய்வீகம் பொருந்திய ஆண்டவனாகிய கார்த்திகை விளக்கானது ஆன்மாக்கள் பிறவிக்கடலைக் கடந்து முத்தியெனும் கரையை அடைவதற்குக் கலங்கரை விளக்கு போல உள்ளதெனச் சிவப்பிரகாசர் கூறுவது வியப்பாக உள்ளது.

''பவக்கடல் கடந்து முத்தியம் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சைலனே! கைலை நாயகனே!'' (02)

இவ்வாறாகப் பற்பல கற்பனை நயத்துடன் கார்த்தை விளக்கைப் பற்றிச் சிவப்பிரகாசர் கூறுவதை, கார்த்திகை விளக்கை வணங்கத் தூண்டச் செய்யும் ஆன்மீக விளம்பரவாசகமாகக் கருதலாம்.

# கந்த சஷ்டியின் தத்துவம்

பாம்பனார் - வாரியார் அடிப்பொடி செ.வே.சதாநந்தன்



முருகன், குமரன்,குகன், கந்தன், ஆறுமுகன் என்றெல்லாம் பக்தர்களால் புகழப்பெறும் செந்தமிழ்க் கடவுளின் பல்வேறு விழாக்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற விழாவே கந்த சஷ்டிப் பெருவிழாவாகும், சஷ்டி என்றால் ஆறு என்று பொருள். எனவே சஷ்டி விழா ஆறுநாள் விழாவாகும்.

தேவர்களைக் கொடுமைப்படுத்திய சூரபதுமன், அவன் தம்பிகளாகிய தாருகன், சிங்க முகன் ஆகியவர்களோடு, கந்தப் பெருமான் போரிட்டு வென்று தேவர்களைச் சிறைமீட்டு அவர்களுக்கு ஆட்சியுரிமை தந்து தேவருலகை வாழ வைத்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது கந்த சஷ்டிப் பெருவிழா. செவ்வேட் பரமனாகிய கந்தனுக்கும், சூரபதுமனுக்கும் போர் நடைபெற்ற இடம் திருச்செந்தூர்.

போருக்குப் பின்னர் முருகன் இந்திரன் மகளாகிய தெய்வயானையை மணம் செய்த இடம் திருப்பரங்குன்றம். அது ஏழாம் நாள் விழா.

செந்தமிழ் நாட்டில் நடைபெற்ற வரலாற்றை மையமாகக் கொண்ட செந்தமிழ்க் கடவுளின் தெய்வப் பெருவிழாவே கந்த சஷ்டிப் பெருவிழா.

ஆன்மாக்களுக்கு அல்லது மானிட உயிர்களுக்கு மூன்று வகையான அழுக்குகள் உண்டு. மூலமாகிய முதல் அழுக்கே ஆணவம். அதை ஒட்டி ஆன்மாக்களுககு உண்டாகிய இரண்டு அழுக்குகள் உண்டு. அவைகள் மாயை, கன்மம் எனப்பெறும்.

மாயையானது உலகப் பொருள்களில் கவர்ச்சியை உண்டாக்கி ஆன்மாக்களுக்கு மோகத்தை உண்டுபண்ணும். ஞானிகளைக் கூட மயங்கவைத்துவிடும்.

மயக்கத்தை உண்டாக்குதலும், ஆன்மாக்களை உலகப் பெருள்களின் மேல் பற்று முதலியவைகளை ஏற்படுத்துதலும் ஆகிய இரண்டு வகைகளில் செயற்படுவது மாயை. சூரபதுமனின் ஒரு தம்பியாக நின்ற தாருகனே மாயை மயமாக நின்று செயல்படுபவன்.

அடுத்த அழுக்கானது கன்மம். இதுவும் இரண்டு வகைப்படும். நல்வினை, தீவினை எனச் சிங்கமுகன் கன்ம மயமாக நின்றவன்.

மூன்றாவது மூல அழுக்கே ஆணவம். இதுவும் நான் என்றும், எனது என்றும் செயல்படும். சூரபதுமன் ஆணவ மயமாக நின்றவன். மூன்று அழுக்குகளும் ஆறாகப் பிரிந்து செயல்பட்டன. ஆகையால் ஆறுநாட்களில் அவைகளை அழித்து ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் கொடுத்தான் கந்தன் என்பதே கந்த சஷ்டிப் பெருவிழாவின் தத்துவம்.

## பன்னீர் இலை பிரசாதம்



திருச்செந்தூர் கோவிலில் சுவாமி பிரசாதமான விபூதியைப் பன்னீர் இலையில் மடித்துத் தருகிறார்கள்.

செந்தில் முருகன் தம் 12 திருக்கரங்களால் விசுவாமித்திரமுனிவரின் காசநோய் தீர பன்னீர் இலை விபூதியை வழங்கினார்.

பன்னீர் இலையில் 12 நரம்புகள் இருப்பதைக் காணலாம்.

காசநோய்க்குப் பன்னீர் இலையும், விபூதியும்இன்றும் அருமருந்தாகத் திகழ்கின்றது.



# சண்டேசுவரநாயனார்

- பேராசிரியர் டாக்டர்.டி.செல்வராஜ்

இலக்கியங்களில் சண்டேசுவரர் :

''மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
தாதைதாள் மழுவினால் தடிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு
அடியேன்''

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய
திருத்தொண்டத்தொகை

1. சண்டே சுவரரின் வரலாறு -

தஞ்சைமாவட்டம், திருப்பனந்தாளுக்கு அருகில், மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்த மூதூர்சேய்ஞலூர், (சேய்ஞ்ஞலூர்)

சேய் + நல்லூர் = முருகன் இறைவனை வழிபட்ட நல்ல திருத்தலம் சேய் நல்லூர். இப்போது சேய்ஞ் ஞலூர்என்று வழங்குகிறது.

இங்கே அந்தணர் குலத்தில், எச்சதத்தனுக்கும், பவித்திரைக்கும் மகனாக அவதரித்தவர் விசார சருமர்.

விசார சருமருக்கு ஐந்து வயது நிரம்பிய போதே முற்பிறவிப் பயனால் பக்தி உணர்வுகளும், நல்லறிவுகளும் அவரிடம் இயல்பாகவே பொருந்தி வெளிப்பட்டன.

அவருக்கு ஏழு வயது நிரம்பியது. குல வழக்கத்தின்படி உபநயனச் சடங்கும் நிறைவேறியது. அடுத்து, வேதங்களை ஓத நண்பர்களுடன் பாட சாலைக்குச் செல்வாராயினார்.

அவ்வாறு செல்லும்போது, ஒரு நாள், ஆயன் செலுத்திச் செல்லும் ஆனிரைகளைக் கண்டார். ஒரு பசு ஆயனை முட்டியது. ஆயன் அப்பசுவை வநையப்புடைத்தான்.

பசுவின் மீது மிக்க இரக்கம் கொண்ட அவர், ஆனிரைகளை மேய்க்கும் தொழிலைத்தாமே முன்வந்து ஏற்றார்.

மேய்க்கும்போது, ஒரு குழந்தைக்குரிய மனப்பக்குவம் மாறாத அவர், விளையாட்டாக, ஆத்தி மர நிழலில் மணலால் கோயிலை அமைத்தார். சிவலிங்கத்தை உருவாக்கினார். வள்ளல் பெரும்பசுக்கள் அளித்த குடம், குடமான பாலால் சிவலிங்கத்திற்கு அபிடேகம் செய்தார். பல மலர்களால் அலங்கரித்து, அர்ச்சனையும் செய்தார்.

அவர் பக்திப்பரவசத்துடன் செய்த சிவவழிபாட்டை அயலான் ஒருவன் கண்டான். வழிபாட்டால் பால் வீணாக்கப்படும்செய்தியைப் பொதுச் சபையில் கூடியிருந்த அந்தணர் குழுவினரிடம் கூறினான். அவர்கள் இதுபற்றி எச்சதத்தனிடம் விசாரித்தனர்.

மறுநாள் காலை, உண்மையை அறிய, அவரைப்பின் தொடர்ந்து சென்றான் எச்சதத்தன். ஒரு குராமரத்தின் மேலே ஏறி ஒளிந்திருத்தபடி அவர் செய்த சிவலிங்கப் பாலாபிடேக வழிபாடுகளை நேரில் கண்டான். சபையோர் கூறியது உண்மை என உணர்ந்தான்.

இறங்கி வந்து, கைத்தடியால் அவரது முதுகில் ஓங்கிப்பல முறை அடித்தான். உடலும், உள்ளமும், உயிரும் பக்திக்கடலில் மூழ்கிச் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அவர், இந்த அடிகளை உணரவே இல்லை. மாறாக வழிபாட்டைத் தொடர்ந்தார்.



மேலும் வெறுப்புற்றுச் சினந்த அவன், அபிடேகப் பாற்குடங்களைக் காலால் உதைத்து, உருட்டிச் சாய்த்துச் சிதைத்தான். மாபாதகம் செய்தான்.

அவர் சிவ வழிபாட்டிற்குத் தடை ஏற்பட்டதை அறிந்தார். இத்தடைக்குக் காரணமாகி மாபாதகம் செய்தவர் தம் தந்தையே என்று தெரிந்தார். ஒரு கோலை எடுத்தார். இறையருளால் அது மழுவாக மாறியது. மழுவால் தந்தையின் கால்களைத் துண்டித்துத் தண்டித்தார். அவனும் விழுந்து மடிந்தான்.

தடைகள் நீங்கியதால் அவர் சிவ வழிபாட்டில் தொடர்ந்து ஈடுபட்டார். இறைவன் பிரசன்னமானார்.

தொண்டர்களுக்குத் தலைவராகும் பதவியையும், இறைவன் உண்ட பரிகலத்திற்கும், உடுத்த உடைக்கும், புனைந்த அணிகலன்களுக்கும் சூடிய மாலைகள் முதலியன அனைத்திற்கும் உரிமையாளராகும் சண்டீசர் பதத்தையும் அருளினார். தமது திரு முடிமேல் இருந்த கொன்றை மாலையை எடுத்து விசாரசருமரது திருமுடிமேல் புனைந்தருளினார்.

''அண்டர்பிரானும் தொண்டர்தமக்
கதிப னாக்கி, அனைத்து நாம்
உண்ட கலமும், உடுப்பனவும்,
சூடு வனவும், உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர்பொன் தடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை

மாலை வாங்கிச் சூட்டினார்.''

(சண்டேசுரநாயனார் புராணம் 56)

தந்தையை இழந்த பாலனை, தாமே தமக்கு மகனாக ஏற்றுத் தந்தையுமானார் இறைவன்.

விசார சருமரது மாய உடம்பை இறைவன் தீண்டியதால் அது சிவ மயமாய்ப் பிரகாசித்தது. இப்போதும் பொலிகிறது.

விசாரசருமரை ஈன்றெடுத்து, வளர்த்து, அவர் சண்டீசப்பதம் பெற்று என்றும் நிலைத்து வாழ்வதற்கு ஒரு துணைக் காரணமாக அமைந்து, அவர் வீசிய மழுவால் வெட்டப்பட்டு மடிந்த எச்சதத்தனும், தன் சுற்றத்துடன் சிவபதம் சேர்ந்தான்.

இவ்வாறு விசாரசருமர் சண்டேசநாயனார் ஆயினார்.

சண்டேசுவர நாயனாரின் தனிச் சிறப்புகளும், பெருமைகளும்

(1) மேலும், மேலும் உயர்வு. மணல் லிங்க வழிபாடு

மணலால் லிங்கத்தை அமைத்துக் காஞ்சிபுரத்தில் உமையம்மையும், இராமேசுவரத்தில் இராமனும் வழிபட்டுப் பற்பல நற்பலன்களைப் பெற்றனர். இவர்களைப் போல மணல் லிங்க வழிபாடு செய்தவர் விசாரசருமர்.

அபிடேக வழிபாடு - சிவபெருமான் அபிடேகப் பிரியன்.அதுவும் பஞ்சகவ்வியத்தால் அபிடேகம் செய்வது அவனுக்கு மிகவும் பிடித்தமானதாம். பஞ்சகவ்வியத்தில் ஒன்றான பாலால் விசாரசருமர் அபிடேகம் செய்தார்.

சிவ புண்ணியம் :

சிவ பாதகம் செய்தவரைத் தண்டிப்பது பாவமாககாது. அது சிவ புண்ணியம், சிவமயம்

தக்கனது யாகம் தீமையானது.

பாலன், தன் தந்தையின் தாள்களை வெட்டிய பாதகம் நன்மையாய் உயர்ந்து பொலிந்தது.

''அரனடிக் கன்பர் செய்யும்
பாவமும் அறம தாகும்
பரமனுக் கன்பிலாதார்
புண்ணியம் பாவ மாகும்.
வரமுடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த
பாதகம் நன்மை யாய்த்தே''

(சிவஞான சித்தியார்)

விசார சருமர் சிவபூசைசெய்தார், செயற்கரிய செயலையும் செய்தார். இவரது அனைத்துச் செயல்களுககும் பக்தி யொன்றே அடித்தளமாக அமைந்தது.

விசார சருமர் மனித குலத்தில் பிறந்து, ஓர் அடியாராக உயர்ந்து, சண்டீசர் பதவியைப் பெற்ற நாயனாராகப் பெருமையடைந்து, ஒரு தெய்வத்திற்கு நிகராகச் சிறந்து, இறுதியில் சிவ குடும்பத்தினரில் ஒருவராக இணைந்தார். தெய்வமானார்.

(2) சண்டீசபதம் : இது தெய்வீகத்தன்மையுடைய ஒரு பதவியின் பெயராம். தெய்வங்களைத் தியானித்துப் பயன் பெறும் சண்டீச பதங்கள் பல உள்ளன. சண்டேசுவரர்கள் அந்தந்த தெய்வங்களை வழிபடுகின்றவர்களுக்கு உரிய பயன்களை அருளுகின்றார்.

## தத்தாத்ரேயர் ஜெயந்தி

கார்த்திகை மாதம் பௌர்ணமி ஸ்ரீதத்தாத்ரேயர் ஜெயந்தி நாளாகும்.

மூன்று முகங்கள், ஆறுகால்கள், காலின்அடியில் நான்கு நாய்கள், பக்கத்தில் ஒரு பசு என்று காட்சியளிக்கும் ஸ்ரீ தத்தாத்ரேயர் மும்மூர்த்திகளின் அம்சமாகும்.



அநுசூயா தேவியின் கற்பைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளும் மூன்று குழந்தைகள் ஆயினர்.

அத்திரிமுனிவர் மூன்று குழந்தைகளையும் ஒரு சேர அணைக்க உண்டானவரே தத்தாத்ரேயர் ஆவார்.

(3) பெயர்கள் : நாயனாரின் இயற்பெயரான விசார சருமர் என்ற பெயரை அடியார்கள் பயன்படுத்துவதில்லை. இவருக்குத்தண்டி, சண்டி, சண்டேசுவரர், சண்டிகேசுவரர், சண்டீசர், பாலன், மாணி முதலிய பல பெயர்கள் உண்டு.

(4) காலப்பழமை :

''உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி,
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப, முனிந்து
மறுமழு வால்வெட்டி, மாலைபெற் றானே''

(திருமந்திரம் 351)

பொருள் - தனக்கு உறுவதை அறிய வல்ல சண்டேசுவரர் வெண்மையான மணலைக் கூட்டி, பிறவி அறும் வகையில் ஆனைந்தால் அபிடேகம் செய்தார். தந்தை இதைப் பொறுக்காமல் பகை கொண்டு சிதைத்தான்.அவர் வெகுண்டு மழுவால் கால்களை வெட்டி இறைவன் அருளிய கொன்றை மாலையை ஏற்றார்.

திருமூலர் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பர்.இவர் மேற்கண்ட பாட்டில் சண்டேசுவரரைச் சிறப்பித்தார். இவரைத்தவிர வேறு நாயனார் ஒருவரையும் குறிக்கவில்லை.

ஆகவே, சண்டேசுவரர் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது தெரிகிறது. நாயன்மார்களில் முதன்முதல் தோன்றிய நாயனார் இவராகவே இருக்கலாம்.

மேற்கண்ட திருமந்திரப் பாட்டு, சண்டேசுவரர் வரலாற்றை மிகச் சுருக்கமாக வரைகிறது. இது வரலாற்றின் ஆதி மூலம், முதல் சான்று. இது சண்டேசுவரரைத் ''தண்டி'' என்று

குறிப்பிடுவதும், இவர் பஞ்சகவ்வியத்தால் (ஆனைந்தால்) இறைவனுக்கு அபிடேகம் செய்தார் என்று குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கன.

(5) சண்டேசுவரரும், திருக்கண்ணப்பரும்-

சண்டேசுவரரைப் போலத் திருக் கண்ணப்பரும் காலத்தால் முந்திய நாயனார் ஆவர். மாணிக்க வாசகர்,

''தீதில்லை மாணி சிவகருமம்''

என்ற பாட்டில் சண்டேஸ்வரர் வரலாற்றைச் சுட்டினார்.

(திருத்தோள் நோக்கம் 7)

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை'' என்ற பாட்டில் திருக்கண்ணப்பரையும் சுட்டினார்.

*(திருக்கோத்தும்பி 4)*

பழைய நாயன்மார்களான இந்த இருவரைத் த்விர வேறு நாயன்மார்களை மாணிக்க வாசகர் சுட்டிக் குறிக்கவில்லை.

(6) வயது - நாயன்மார்களில் திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தனர் என்பர். திருநாவுக்கரசருக்கு வயது 81.

சுந்தரருக்கு வயது 18. திருக்கண்ணப்பருக்கும், திருஞானசம்பந்தருக்கும் வயது 16.

நாயன்மார் எல்லாரையும் விட வயதால் மிக மிக இளையவர் சண்டேசுவரர். இவரது வயது ஏழாண்டுகள்மேல் ஆகும். ஆகவே, இவரைப் ''பாலன்'' எனக்குறிப்பது பொருத்தமே.

(7) நாயன்மாரும் ஆனிரைகளும் -

ஆனிரைகளுடன் தொடர்புடைய நாயன்மார்கள் மூவர் ஆவர்

(1) திருமூலர் - மூலன் என்ற இடையன் இறக்கச் சுந்தர நாதர், அந்த இடையனின் உடலில் புகுந்து, பசுக்களின் துன்பங்களைப் போக்கினார். இவரே திருமூல நாயனார்.

(2) ஆனாயர் - ஐந்தெழுத்து மந்திரங்களைப் புல்லாங்குழலில் இசைத்து ஆனிரைகளை மயக்கியவர்.

(3) சண்டேசுவரர் - அந்தணர் குலத்தில் அவதரித்தாலும், ஆயர் குலத்துக்குரிய ஆனிரைகளை மேய்க்கும் தொழிலை ஆசையுடன், ஆர்வத்துடன் மேற்கொண்டு சண்டேசபதம் அடைந்தவர்.

(8) தன்னலமற்ற வன்தொண்டர் - இறைவனை அடைவதற்குரிய பக்தி நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்காகும். வன்தொண்டு புரிந்து இறையருளைப் பெறுவது ஐந்தாம்நெறியாம்.

1. எறிபத்தர் 2. ஏயர்கோன்
2. கலிக்கம்பர் 4. கழற்சிங்கர் 5. சக்தி
6. சண்டேசுவரர் 7. சிறுத்தொண்டர்
8. செருத்துணை 9. விறல் மிண்டர்

10. முனையடுவார் 11. மூர்க்கர். இவர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள். இவ்வாறு கூறியவுடன் இவர்கள் தகாத கொடிய செயல்களைச் செய்தவர்கள் என்று கருதுவது தவறு. செயலை மட்டும் கருதாமல், அச்செயலின் பயன்களைக் கருத வேண்டும்.

இவர்களது செயல்களில் தன்னலம் இல்லை, இவர்கள் தாம் கொண்ட கொள்கை மாறாதிருக்கவும், குறிக்கோளை அடையவும் கொடூரமான செயல்களில் ஈடுபட்டனர். ஆகவே, மாபாதகங்களை அறவே அகற்ற இவர்கள் செய்த பாவச் செயல்கள், வன்முறைச் செயல்கள் சிவ புண்ணியச் செயல்களே. அன்பு நெறியுடன் முரணாத செயல்களே. வீடு பேற்றை அளிக்கக்கூடிய செயல்களே.

(9) நாயன்மாரும் பூத உடம்பும் - பூத உடம்புடன் இன்றும் இந்நிலவுலகத்தில் வாழ்பவர்களாகக் கருதப்படுகின்ற நாயன்மார்கள் மூவர். அவர்கள்,

1. சண்டேசுவரர்
2. திருக்கண்ணப்பர்
3. காரைக்காலம்மையார்.

*(அடுத்த இதழில் நிறைவுபெறும்)*

# சந்தான பாக்கியம் தரும் தொட்டில் உற்சவம்



கும்பகோணம் திருவாரூர்சாலையில், குடவாசல் என்ற ஊரில் இறங்கினால் அங்கிருந்து 5கி.மீ தொலைவில் உள்ள சேங்காலிபுரத்தில் உள்ளது ஸ்ரீதத்தாத்ரேயர் ஆலயம்.

கார்த்திகை பௌர்ணமிக்கு அடுத்தநாள் இங்கு நடைபெறும் தொட்டில் உற்சவம் விசேடமானது.

இங்கு மூலவர் சந்நிதியில் தத்தாத்ரேயருக்கு அருகில் மரத்தால் செய்யப்பட்ட அழகிய தத்தாத்ரேயர் சிலை உள்ளது. குழந்தை இல்லாதவர்கள் இந்த மரத் தத்தாத்ரேயர் சிலையை மடியில் வைத்துக் கொண்டு மூன்று முகங்களுக்கும் பசும்பாலைக் காட்டி வேண்டிக் கொண்டால், அடுத்த வருடத்திற்குள் குழந்தை வரம் கிடைத்துவிடும்.

காலச்சுவடுகள்

# அமைச்சர் இளங்காரர் திருப்பணி புரிந்த தில்லையாடித் திருக்கோயில்

முனைவர் த.அமிர்தலிங்கம்

மயிலாடுதுறை நாலுகாவில் அமைந்துள்ள ஊர்தில்லையாடி.

இவ்வூரில் பிறந்தவரான வள்ளியம்மை தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தில் தானும் ஈடுபட்டு ''தில்லையாடி'' க்குச் சிறப்புச் சேர்த்துத் ''தில்லையாடி வள்ளியம்மை'' என நம் தமிழ்த்திரு நாட்டிற்கே சிறப்பினைச் சேர்த்துக் கொண்டுள்ளார்.



அவ்வள்ளியம்மை பிறந்த ஊருக்குத் ''தில்லையாடி'' எனப் பெயர் வந்த ஒரு வரலாறு ஆண்டவனின் அருள் விளையாடலை விவரிக்கும் ஒரு அற்புதமான வரலாறு ஆகும்.

திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தைத் திருப்பணி செய்து திருக்குடநீராட்டுவிழா நடத்த வேண்டும் என்று பிராத்தித்துக் கொண்டான் சோழமாமன்னன் ஒருவன்.

தம் அமைச்சர்களில் மிகுந்த பக்தி மிக்கவரான இளங்காரர் என்பவரை அழைத்து அவரிடம் ஏராளமாகப் பொன்னும் பொருளும் கொடுத்துத் திருக்கடவூர் ஆலயத் திருப்பணியை நிறைவேற்றும்படி ஆணை பிறப்பித்தான் சோழ மன்னன்.



மன்னனின் ஆணையைத் தலைமேற் கொண்டு திருக்கடவூர் புறப்பட்டார் அமைச்சர் இளங்காரர். அவர் திருக்கடவூர் செல்லும் வழியில் இரவுநேரத்தில் ''தில்லைவனம்'' என்ற கிராமத்தில் தங்க நேர்ந்தது.

உறங்கிய அமைச்சர் ஒரு கனவு கண்டார். அக்கனவில் தோன்றிய சிவபெருமான் ''இளங்காரா! திருக்கடவூர் கோயிலைத்தான் புதுப்பிப்பாயா? இந்தவூரில் என் கோயில் பாழடைந்துள்ளதைப் புதுப்பிக்கமாட்டாயா?'' என்று கேட்டு மறைந்து விட்டார்.

அமைச்சர் கனவு கலைந்து எழுந்தார். அருகிலிருந்தவர்களிடம் விசாரித்து அவ்வூரிலிருந்த கோயில் சென்று கோயிலின் நிலை கண்டார். அரசன் தன்னிடம் தந்து அனுப்பிய தங்க நாணய மூட்டைகளில் ஒரு மூட்டையை ஆலய நிர்வாகிகளிடம் கொடுத்து உடனே திருப்பணியைத் தொடங்குமாறு கூறிவிட்டுத் திருக்கடவூர்வந்து சேர்ந்தார்.

திருக்கடவூர், தில்லை வனம் - இரு ஊர்களிலுமாகச் சிவாலயத் திருப்பணியைத் தொடங்கி திருப்பணியை விரைந்து முடித்தார் அமைச்சர் இளங்காரர்.

திருக்கடவூர் ஆலயத்திற்குக் குடநீராட்டு விழா நடைபெற்ற அதே நாளில் தில்லை வனம் திருக்குடநீராட்டு விழாவும் நடைபெற ஆவன செய்து முடித்தா அமைச்சர் இளங்காரர்.

திருக்கடவூர் திருப்பணிகளையும், திருக்குட நீராட்டு விழாவையும் கண்டு மகிழ்ந்த சோழ மன்னன் அமைச்சர் இளங்காரரைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

சோழமன்னனிடம் சென்று இளங்காரரைப் பற்றிக் குறைகூறினார்கள். ''திருக்கடவூர் திருக்கோயிலுக் கென தந்த பொன்னையும், பொருளையும் தில்லைவனக் கோயிலுக்கும் செலவழித்து அமைச்சர் இளங்காரர் அரசரின் ஆணை மீறிவிட்டார், தம் சுய லாபத்திற்காக இதைச் செய்து விட்டார்'' என்று கோள் மூட்டினார்கள்.

அமைச்சர் இளங்காரர் தம் ஆணையைமீறி நடந்து விட்டதாக அறிந்த சோழமன்னனும் அமைச்சரை அழைத்துக் கடிந்து கொண்டதோடு நில்லாமல் அவர்தம் கைகளையும் கால்களையும் வெட்டி எறிய ஆணை பிறப்பித்துவிட்டார்.

அமைச்சர் என்ன கூறியும் அரசன் அவர் சொன்னதை நம்பவில்லை.

அரசன் ஆணைப்படி அமைச்சர் இளங்காரரின் கைகளும் கால்களும் வெட்டப்பட்டன.

அன்றிரவு அரசன் கனவில் தோன்றிய சிவபெருமான் ''மன்னா! தில்லைவனக் கோயிலுக்கும் திருப்பணியைச் செய்யுமாறு ஆணை பிறப்பித்தவன் யானே! என் ஆணையையே அமைச்சர் நிறைவேற்றித் தந்தார்'' என்று கூறி மறைந்தார்.

கனவு கலைந்து எழுந்த மன்னர் பதறியடித்து அமைச்சர் இளங்காரர் துடித்துக் கொண்டிருந்த இடம் விரைந்து வந்து அவர்முன் மண்டியிட்டுத் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்!

என்னே ஆச்சரியம்! வெட்டுப்பட்ட கைகளும் கால்களும் சேர்ந்து கொள்ள, யாவரும் வியக்க, நலமுடன் எழுந்தார் அமைச்சர் இளங்காரர். சரணடைந்த அமைச்சரைக் காத்தருளிய இறைவருக்கு ''சரணாகத ரட்சகர்'' எனவே பெயர் வழங்குகின்ற சிறப்பை அறிகின்றோம்.

அமைச்சர் இளங்காரர், இளங்கார முனிவராய் தாம் திருப்பணி செய்த தில்லைவனத் திருக்கோயிலிலேயே தங்கி அருள்மிகு சரணாகத ரட்சகர்தம் இறைபணியில் ஈடுபட்டு வந்தார்.

இளங்கார முனிவருக்குத் தில்லையில் கூத்தப் பெருமான் ஆடும் திருநடனம் காண ஆசைஏற்பட்டது.

''சிதம்பரத்தில் ஆடுவதுபோல் இந்தத் தில்லைவனத்திலும் திருநடனம் புரிந்து என் விருப்பத்தை நிறைவேற்றித் தர வேண்டும்'' என விண்ணப்பித்துக் கொண்டார் இளங்காரமுனிவர்.

அடியார் வேண்டியதை வேண்டியவாறே தந்து அருள்புரியும் சிவபெருமான் இளங்கார முனிவருக்குத் தம் திருநடனம் காட்டி அருள்புரிந்து அவரைத் தமக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

அன்று முதல் ''தில்லை வனம்'' ''தில்லையாடி'' எனவழங்கப்பட்டு வருகின்றது.

# வாசகர் எண்ணங்கள்



''தமிழ்க்களஞ்சியமாம் தொல்காப்பியம்'' என நம் தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் வடித்திருந்த எழுத்தோவியம் அருமை, நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வடித்துள்ள ''குறளோவியம்'' தமிழ்க் காவியத்திலிருந்து பல அரிய ஓவியங்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- முத்தையா,
சைதாப்பேட்டை.

''இராமாநுசர் செய்த புரட்சி'' என்ற நம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துரை யாவரும் மறுக்க முடியாத ஆணித்தரமான கருத்தாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இராமாநுஜர் ஆற்றிய சேவை தமிழக வரலாற்றில் கொண்டாடப்பட வேண்டிய அற்புதமாகும்.

- த.சத்திய நாராயணன்,
அயன்புரம்.

''குன்றக்குடி முருகனுக்குப் பெரிய மருது அளித்த தங்கக் கவசம் ''காலச்சுவடுகள்'' பகுதி பக்திப் பரவசப் படுத்தியது.


- திருமதி இந்திரா ஆரா அமுதன்,
திருவரங்கம்.

''தமிழ் அருச்சனை'' 108 போற்றி மலர்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிடும் தங்கள் தமிழ்ப்பணி மகத்தானது. அறநிலையத் துறையின் பொற்பணிகள் தொடர்ந்து வரலாறு படைத்திட வாழ்த்துக்கள்.

- பித்தளை வணிகன் மதுரைமாறன்,
திண்டுக்கல்.

# கருடன் கட்டிய சிவாலயம்

கருடன் கட்டிய சிவாலயம் என்ற பெருமை கொண்டது குடவாசல் அருள்மிகு கோணேஸ்வரர் ஆலயம்.



கருடன் கொண்டுவந்த அமுதக்குடத்தின் வாய்ப்பாகம் உடைந்ததால் உண்டான அமுதத்தீர்த்தம் இத்திருக்கோயில் வாசலிலேயே இருப்பதை இன்றும் காணலாம்.

கார்த்திகை மாதம் திங்கட்கிழமையில் கோணேசரை வழிபட வீடுபேறு பெறலாம் எனத் தலவரலாறு கூறுகின்றது.

# பதில்





★★★இரா. தனசேகரன், தாம்பரம்.

கேள்வி - தர்மம் தழைக்கும், அதர்மம் அழிங்யும் என்பதை உங்களால் உறுதி செய்ய முடியுமா?

பதில் - முடியும்.

சிங்கம் மும்முன்றாய்ப் பிறக்கின்றது., புலிகளும் ஐந்தந்தாய்ப் பிறக்கின்றது. இருப்பினும் அம் மிருகங்களின் அதர்மம் அவற்றின் சந்ததியை அவைகளே அழித்துவிடுகின்றன. பசுக்கள் ஒவ்வொன்றாகத்தான் பிறக்கின்றன. ஆயினும் அவற்றின் தர்மம் அவைகளின் வம்சத்தை விருத்தி செய்கின்றன. இதனால் தர்மமே தழைக்கும் அதர்மம் அழியும் என்பதை உறுதி செய்ய முடியும்.

★★★கமலம்மாள், தஞ்சாவூர்.

கேள்வி - பெற்ற தாயை வணங்கிடக் கிடைக்கும் புண்ணியம் என்ன?

பதில் - ஆறுதரம் பூமியை வலம் வருதலும், பதினாயிரம் தடவை காசியில் குளித்தலும், பலநூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியத்தைவிட அதிக புண்ணியம் தாயைப் பக்திபூர்வமாக வணங்கக் கிடைக்கிறது.

★★★ பரமசிவம், சத்தியமங்கலம்.

கேள்வி - மூர்க்கரின் குணத்தை முறியடிக்க முடியாதா?

பதில் - மூளும் தீயை ஒரு சிறு கலசத்து நீரால் அணைத்திடலாம். சுடுவெயிலைச் சுளகு என்று சொல்லப்படும் முறத்தால் தடுத்திடலாம். யானையை அங்குசத்தால் அடக்கிடலாம். எருது, கழுதை போன்றவற்றை ஒருதடியால் அடக்கிடலாம். நோயினை மருந்தாலும், விடத்தை மந்திரத்தாலும் போக்கிடலாம். அதற்கும் அரிய செயலைச் செய்தாலும் செய்யலாம். மூர்க்கரின் குணத்தை மட்டும் முறியடிக்க முடியாது.

★★★ அன்பழகன், செங்கற்பட்டு.

கேள்வி - பணத்தின் பராக்கிரமத்தைச் சொல்ல முடியுமா?

பதில் - பணமில்லாதவனைத் தாயே நிந்திப்பாள். தகப்பன் மகிழ்ச்சி அடையான், உடன்பிறந்தவர்கள் பேசமாட்டார்கள், பணியாளனோ கோபிப்பான், மகன் பின்செல்ல மாட்டான், மனைவி தழுவ மாட்டாள், தன்னைப் பணம் கேட்பான் என்னும் பயத்தால் நண்பனும் நல்ல வார்த்தை சொல்ல மாட்டான். அதனால் பணத்தைச் சம்பாதித்தால்தான் அனைவரும் உரிமை கொண்டாடுவார்கள்.

★★★ பழனியம்மாள், சேலம்.

கேள்வி - ஒருவன் சேகரிக்கும் பொருளை எவ்விதம் செலவழித்தல் வேண்டும் என்பது பற்றிக் கூறுங்கள்.

பதில் - ஒருவன் சம்பாதித்த பொருளைத் தருமம், அக்கினி, அரசன், திருடன் என்ற நான்கு மக்கள் அனுபவிக்கத் தக்கவர்கள்.

அவர்களில் மூத்த குமாரனாகிய தருமத்துக்கு நாலிலொரு பங்கு செலவழியாதவனுடைய பொருளை மற்று மூன்று பிள்ளைகளாகிய அக்கினி, அரசன், திருடன் ஆகியோர் அபகரித்துக் கொள்வார்கள்.

''வருவாயுள் கால் வழங்கி
வாழ்தல் இனிதே''

- இனியவை நாற்பது.

★★★ த.சிவனான், மதுரை

கேள்வி - வள்ளலைக் கருமி என்றும், கருமியைத் தியாகி என்றும் நினைக்கலாமா ? எப்படி?

பதில்- வள்ளலானவன் தான் பிறருக்குக் கொடுத்த பொருளை எல்லாம் இவ்வுலகை விட்டுப் போகும்போது ஒன்றுக்கு ஆயிரமாக (புண்ணியமாக) வாங்கிக் கொண்டு போவதனால் அவனைக் கருமி எனலாம், ஈயாத கருமி போகும்போது எல்லாவற்றையும் இவ்வுலகிலேயே விட்டுவிட்டுப் போவதனால் புண்ணியத்திற்கு ஆசைப்படாத அவனைத் தியாகி என்றும் கூறலாம்.

★★★ அறிவுக்கரசி, தருமபுரி

கேள்வி - வள்ளல்களை வகைப்படுத்திக் கூறுங்கள்

பதில் - கேளாமலே பொருளைத் தந்தவர் முதல் ஏழு வள்ளல்கள். அவர்கள் குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி எனப்படுவர்.

கேட்பவர்களுக்குத் தந்தவர் இடை ஏழுவள்ளல்கள். அவர்கள் அக்ரூரன், சந்திமான்,

சிசுபாலன், கர்ணன், வக்கிரன், சந்தன், அரிச்சந்திரன் எனப்படுவர்.

புகழுக்காகத் தந்தவர் கடை ஏழு வள்ளல்கள்; அவர்கள் பாரி , ஆய், எழினி, காரி, ஓரி, அதியன், பேகன் எனப்படுவர்.

சூடாமணி நூல் வள்ளல்கள் மூவகையினர் என்பதைப் பின்வருமாறு கூறுகின்றது.

''உறுபொருள் தண்டா தீந்தும்
வாரியில் இரந்தோர்க்கு இட்டும்
வளர்புகழ் துதிக்க ஈந்தும்
பேரியல் வையம் எண்ணப்
முப்பாலாகும் பெற்றனர்''.

❋❋❋ ஐங்கரன், நந்தனம்

கேள்வி - தெய்வத்துணை இல்லாதவர்க்குத் துன்பம் தொடர்ந்து வருமா?

பதில் - ஆம், மொட்டை தலையன் ஒருவன் வெயிலில் தவித்து நிழலுக்காக ஒரு பனை மரத்தின் அடியில் நிற்க, அந்த நெட்டைப் பனை மரத்திலிருந்து பனம்பழம் ஒன்று அவன் தலையில் வீழ்ந்தது. அதுபோல் தெய்வத் துணை இல்லாதவர்களுக்கு அவர்கள் போகும் இடம் எல்லாம் நிழல்போல் துன்பம் தொடர்ந்து வரும்.

❋❋❋ தேன்மொழி, சைதாப்பேட்டை.

கேள்வி - நால்வர் இறைவனை வழிபட்ட முறையாது?

பதில் - கோயிலில் அலகிடுதல், பூவெடுத்தல், இறைவனை வாழ்த்தல் முதலியன சரியை - சாலோகம்- தாசமார்க்கம். இவை திருநாவுக்கரசர் வழிபட்ட முறையாம்.

பூஜை முதலியன செய்தல், பரஞ்சோதியை அருச்சித்தல், நித்யாகரினி காரியம் முதலியன செய்தல் - கிரியை - சாமீபம் - சத்புத்ரமார்க்கம் - இவை திருஞானசம்பந்தர் வழிபட்ட முறையாம்.

பொறி புலன்களை அடக்கிப் பிராண வாயுவைச் சலனமற நிறுத்தி ஆறாதாரங்களின் பொருளை உணர்ந்து முழுச் சோதியை நினைத்திருததல் யோகம் - சாரூபம் - சுகமார்க்கம் - இவை சுந்தரர் வழிபட்ட முறையாம்.

புறத்தொழில், அகத்தொழிலின்றி அறிவு மாத்திரையானே செய்யும் வழிபாடு ஞானம் - சாயுச்சியம் - சன்மார்க்கம் - இவை மாணிக்கவாசகர் வழிபட்ட முறையாம்.

❋❋❋ நாகராஜன், புரசை

கேள்வி - இக்கால மனிதர்களில் பலர் எத்தகையவர்?

பதில் - நன்மை என்றால் நஞ்சு, தீமை என்றால் தேவாமிர்தம். வம்பு வார்த்தை என்றால் வாய்ப்பாடம், பொய் என்றால் பூரணம், புண்ணியமென்றால் போராட்டம், குற்றமெனறால் கொண்டாட்டம், தன் குற்றத்தில் குருடன், அடுத்தவர் குற்றத்தில் ஆயிரங்கண்ணாக விளங்குபவர்தான் இக்கால மனிதரில் பலர்.

❋❋❋ செல்வராஜன், சேலையூர்.

கேள்வி - தமிழைத் ''தெய்வத் தமிழ்'' என்று போற்றக்காரணம் என்ன?

பதில் - உலகில் பேசப்படும் மொழிகளில் தலைசிறந்தது தமிழ் மொழியேயாம். இறைவனருளை எளிதில் பெறுவதற்கு ஏற்ற மொழியும் தீந்தமிழே ஆம்.

இறைவன் சங்கப் புலவரில் தானும் ஒருவனாய் இருந்து தமிழ் ஆராய்ந்தமையாலும், ''பெற்றான் சாம்பன்'' பொருட்டு உமாபதி சிவத்திடம் சீட்டு எழுதியனுப்பியது தமிழிலே ஆதலாலும், சுந்தருருக்கும், சேக்கிழாருக்கும், அருணகிரியார்க்கும் அடிஎடுத்துக் கொடுத்தது தமிழிலேயே என்பதனாலும், தமிழின் பெருமை நன்கு விளங்குகின்றது.

முதலை வாய்ப்பட்ட மகனுக்கு உயிர் கொடுத்தது தமிழ். கற்புணையை நற்புணை ஆக்கியது தமிழ். எலும்பைப் பெண்ணாக்கியது தமிழ். இறைவனை இரவில் இருமுறை நடந்து தூது போகச் செய்தது தமிழ்; குதிரைச் சேவகனாக வரச் செய்தது தமிழ். கற்றூணில் காட்சி தரச் செய்தது தமிழ்.

பற்பல அற்புதங்களைச் செய்ய வைத்தது தமிழ். இயற்கையான மொழி தமிழ். பேசுந்தோறும் பேரின்பத்தை வழங்குவது தமிழ். இன்ன பல காரணங்களினால் தமிழ் ''தெய்வத்தமிழ்'' என்று போற்றப்படுகின்றது.

## ஆற்காடு நவாபின் அபிமானம் பெற்ற திருத்தலம்

ஆர்க்காடு நவாப் அவர்கள் திருவல்லிக்கேணி திருவேட்டீஸ்வரர் ஆலயத்திற்கு மானியங்கள் அளித்துள்ளார்.




அவர் வழங்கிய மானியத்திலிருந்துதான் தினமும் திருவேட்டீஸ்வரருடைய அர்த்த ஜாமப் பூசைக்குப் பால், பழம், பூக்கள் ஆகியவை நூறு வருடங்களாக வந்து கொண்டிருந்துள்ளன. இன்றும் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வரகுண பாண்டியன் வழிபட்ட திருவிடை மருதூர்

பாண்டிய நாட்டிலே மதுராபுரியில் வைதீகநெறியும் சைவ நெறியும் தழைத்தோங்க அரசியற்றிய வரகுண பாண்டியர் ஒருநாள் காட்டுக்குச் சென்று வேட்டையாடி விரைந்து திரும்பிவருகையில் சூரியாஸ்தனமாயிற்று.

அப்போது வழியில் அயர்ந்து கிடந்த ஒரு பிராமணன் அவர் ஏறிய குதிரையினால் மிதிக்கப்பட்டு இறந்தான். அரசர் அதனை அறியாமல் தம் நகரத்தை அடைந்தார். பிரம ஹத்தி அவரைப் பற்றி மிகவும் வருத்தியது.

அதனால் அவர் மனம் நொந்து பல தான தருமங்களைச் செய்து வந்தார். ஒன்றினாலும் அது தீரவில்லை. பின்பு தமது குலதெய்வமாகிய சோமசுந்தர மூர்த்தியைப் பிரார்த்தித்து வந்தார்.



ஒரு நாள் சிவபெருமானுடைய திருவருளினாலே, ''வரகுணா! இன்னும் சில நாளில், நீமத்தியார்ச்சுனம் அடைவை. அப்போது இது தீரும். கவலைப்பட வேண்டாம்'' என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி உண்டாயிற்று. மன்னர் அது கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

சில நாட்களுக்கு பின் சோழராஜன் யுத்தம் செய்வதற்கு வர அரசர் அவனோடு யுத்தம் செய்து அவனைத் துரத்திக் கொண்டே வந்து இந்த ஸ்தலத்தை அடைந்தார். அடைந்த தினம் குருபுஷ்யமாதலால் மிகவும் மகிழ்வுற்று விதிப்படி புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அளவிறந்த தானங்களை அந்தணர்களுக்கு அளித்தார். பின்பு காருண்யாமிர்தத்திலும் நீராடித் திருக்கோயிலுக்குள்ளே செல்கையில் அப்பிரமஹத்தி நடுநடுங்கி வெளியே நின்றுவிட்டது.



அரசர் மகிழ்ந்து விதிப்படி சுவாமியையும், அம்பிகையையும் தரிசித்து இந்த ஸ்தலத்திலே என்றும் வசித்தல் வேண்டும் என்ற குறிப்புடையவராகிச் சிவபெருமானின் கட்டளைப்படி மேலை வாயில் சென்று திருவீதியில் ஒரு பக்கத்தில் ஒரு மாளிகை கட்டுவித்துக் காலந்தோறும் சென்று சுவாமி தரிசனத்தோடு நூறு அசுவமேதப் பிரதட்சிணமும் செய்து கொண்டு அம்மாளிகையில் தங்கி அரசியற்றுவாராயினர்.


பின்பு மேலைக் கோபுரத்தைத் தம் பெயரால் கட்டுவித்துத் திருக்கோயிலுக்கு வடக்கே சோம சுந்தரக் கடவுளுக்கு ஓர் ஆலயம் இயற்றுவித்து இன்னும் பற்பல பணிகள் செய்து வந்தார்.

இப்படியிருக்க ஒரு தினம் சென்று நமஸ்காரம் செய்யும்போது மருதவாணர், ''வரகுணா! கயிலையங்கிரியின் கொடுமுடியையொப்ப ஒரு மதில் கட்டுவித்து அதனை வலஞ்செய்க, அதைச் செய்யுமொரு பிரதட்சணம் ஆயிரம் பிரதட்சிணத்துக்கு ஒப்பாகும். நமக்கு மிக உவப்பாம்'' என்றருளக் கேட்டு அரசர் அவ்வாறே புரிவித்து வலம் வருவாராயினர்.

பின்னொரு நாள், கொடிய கள்வனொருவனைச் சிரச்சேதம் செய்தற் பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக் கட்டிக் கொண்டு செல்லுகையில், அவன் நெற்றியில் திருநீறு விளங்குவதைக் கண்டு, கட்டை அவிழ்த்து விடுவித்து அவனுக்கு வேண்டும் பொருளை அளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

மற்றொரு நாள் ஒரு தடாகத்தில் தவளைகள் சப்தித்தலைக் கேட்டு இவை ''ஹரஹர'' என்று சப்திக்கின்றன என்று கருதி இரத்தினங்களையும், பொன்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

ஒருநாள் திருமஞ்சன தைலத்துக்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்காரனொருவன் எடுத்து உண்பதைக் கண்டு, ''நீஇதை உண்ணலாமோ?'' என்றனர். அவன் எள்ளுண்ட கடனைத் தீர்க்க வேண்டும் என்னும் பழமொழிப்படி மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடிமையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்'' என்று கூற அப்படியாயின் எனக்கும் இதில் சிறிது கொடு என்று சொல்லி அவன் எச்சில் எள்ளை வாங்கியுண்டார்.




# திருவிடைமருதூர் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பு மலர்

"வரகுண பாண்டியன் வழிபட்ட திருவிடைமருதூர்'' எனும் இவ்வரிய கட்டுரை மேற்காணும் திருக்குட நன்னீராட்டு விழா மலரிலிருந்து எடுத்து நன்றியுடன் வெளியிடப்பட்டுள்ளது.

404 பக்கங்களின் ஏராளமான வண்ணப் படங்களளுடன் அரிய பல கட்டுரைகளுடன் வெளியிடப்பட்டுள்ள இம்மலர் ஒவ்வொருவரும் பேணிப் பாதுகாக்க வேண்டிய கருவூலமாகும்.

திருகுடநீராட்டு விழா மலரின் விலை ரூ.200/ (ரூபாய் இருநூறு மட்டும்) ஆகும்.

மலர் வேண்டுவோர் நாடவேண்டிய முகவரி;

சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
திருக்யிலாய பரம்பரை திருவாவடுதுறை
ஆதீனம், திருவாவடுதுறை - 609803.,

அப்பால் ஒரு நாள், தலையோடொன்று இந்த க்ஷேத்திர எல்லையில் கிடத்தலைக் கண்டு மனமுருகி அதனைத் தமது மலர்க்கரத்தால் எடுத்துக் கண்ணீர் வெள்ளத்தால் ஆட்டி, ''உம்மைப் போல் தமியேனும் இந்த ஸ்தலத்து எல்லையில் என்தலை கிடக்கப் பெறுவேனோ?'' என்று மனமுருகினார்.

பின்னொரு நாள், திருக்கோயிலின் முன்னே நாய்மலம் கிடத்தலைக் கண்டு, ''இதை எடுப்பவர்க்கு என் தேசத்தில் காற் பங்கு கொடுப்பேன்'' என்று எண்ணி முதற் பிரதட்சிணமும், அஃது எடுக்கப்படாமையால், ''அரைப்பங்கு கொடுப்பேன்'' என்று இரண்டாம் பிரதட்சிணமும், ''முக்காற் பங்கு கொடுப்பேன்'' என்று மூன்றாம் பிரதட்சிணமும், ''முழுமையும் கொடுப்பேன்'' என்று நான்காம் பிரதட்சிணமும் செய்தார். அப்பொழுதும் நாய்மலம் எடுக்கப்படவில்லை. அது கண்ட அரசர் ''என் தேசம் எனக்கே உரியது'' என்று சொல்லி அதைத் தமது திருக்கரத்தினால் எடுத்துப் புறத்தே எறிந்தார்.

வேறொரு நாள், திருவீதிப் பிரதட்சிணம் செய்யும்போது, பழுத்த வேப்ப மரங்கள் வெயிலில் நிற்றலைக் கண்டு, ''அந்தோ! சிவலிங்கத்தை யொத்த திருவுருவங்கள் பலவற்றைத் தாங்கிய இவை வெதும்புகின்றனவே'' என்று இரங்கி அம்மரங்களுக்கெல்லாம் மேல் மண்டபம் கட்டுவித்தனர்.

பின்னர் ஒரு நாள், தாம் விவாகம் செய்து கொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்தில் கண்டு, ''இவள் எம் பெருமானுக்கே உரியவள்'', என்று நினைத்து உடனே ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக் கொண்டு ஆலயத்தை அடைந்து திருமுன் நின்று, ''மருதவாணா! இப்பெண்ணை அங்கீகரித்தருள்க'' என்று பிரார்த்தித்துக் கதவைத் தட்டி அழைக்கவே சிவபெருமான் கதவைத் திறந்து ''வரகுணா! வருக'' என்றழைத்தார்.

அப்போது பாண்டியர் ''ஸ்வாமி இப்பெண்மணியை அங்கீகரித்தருள்க!'' என்று பிரார்த்திக்க, எம்பெருமான், வலக்கை மாத்திரம் வெளியே தெரிய அப்பெண்ணை உட்கொண்டருளினார்.

அரசர் அது கண்டு, ''இந்தக் கை மாத்திரம் எளியேனால் தீண்டப்பட்டதென்றோ நீக்கியருளினீர்?'' என்று மனம் தளரவே சிவபெருமான் ''உனது அன்பை உலகத்தார் அறியும் படி இக்கையை நாளை அங்கீகரிப்போம்'', என்று கட்டளையிடுதலும் அரசர் மகிழ்ந்து வெளியே வந்தார். திறக்கப்பட்ட கதவுகள் முன் போலவே மூடப்பட்டிருந்தன. அரசரையும் தேவியையும் மனையிலுள்ளோர் தேடிப் பின்பு அரசரை மட்டும் கண்டு, ''தேவியார் எங்கே!'' என்று வினவ மகாலிங்க மூர்த்தியினிடத்தில் இருக்கிறார் என்றார். அவர்கள் ஆச்சரியமடைந்து பூசிப்பவர்களோடு உள்ளே புகுந்து மகாலிங்கப் பெருமான் முடிமீது கை விளங்குதலைக் கண்டார்கள். சிவபிரான் உடனே அக்கையை உள்ளே வாங்கியருளினர்.

அதுகண்ட அரசர் மகிழ்ச்சியடைய, மற்றவர்கள் அச்சமும், அதிசயமும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்ப மா[illegible] பெய்தார்கள்.

இவ்வாறு வரகுணர் பல நாள் இந்நகரில் வசித்துக் கொண்டிருந்து மருதவாணர் கட்டளையின்படி தமது மதுராபுரியையடைந்து சோமசுந்தர மூர்த்தி சிவலோகம் காட்டியருளத் தரிசித்துப் பலநாள் அரசாட்சி செய்து சிவபதமடைந்தனர்.

பட்டினத்தடிகள் தாம் பாடியருளிய திருவிடைமருதூர் மும்மணிக் கோவை நூலில் வரகுணதேவர் தம் சிவ பக்தியைப் பின் வருமாறு கொண்டாடிப் போற்றியுள்ளமை நாம் அறிந்து இன்புறவேண்டிய ஒன்றாகும்.

''வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி யூளைகேட்டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென்றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்,
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர்''

எனச் சிவபத்திச் செல்வராகிய வரகுண தேவர் செய்த பேரன்பின் செயல்களை விரித்துரைத்துப் போற்றியுள்ளார்.

இங்கு புகழ்ந்து போற்றப் பெற்ற பட்டினத்தார் பெரிய அன்பின் வரகுண தேவரைத் திருவாதவூரடிகளும்

''புயலோங் கலர்சடை யேற்றவன்
சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன்''
எனவும்

''வரகுணனாந் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'' எனவும் புகழ்ந்துள்ளார்

# காவல் தெய்வம் கருப்பண்ணசாமி

அழகர் கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் பிரதான வாயில் முன் பதினெட்டாம்படி கருப்பண்ணசுவாமி வீற்றிருக்கிறார். இவர் இங்கு வீற்றிருப்பதற்கான சுவையான வரலாறு பின்வருமாறு:


உற்சவர் சுந்தரராஜர் பெயருக்கு ஏற்ப கொள்ளை அழகானவர். தங்கத்தில் உயர்ந்த தங்கமென மதிக்கப்படும் அபரஞ்சித்தங்கத்தால் செய்யப்பட்டவர் உற்சவர் சுந்தரராஜர்.

இவரைத் திருடிக் கொணர்வதற்காக 18 மந்திரவாதிகளை அனுப்பிவைத்தானாம் மலையாள மன்னன் ஒருவன்.

அப்பதினெட்டு மந்திரவாதிகள் தங்களுக்குத் துணையாக மந்திரங்களில் வல்ல தம் இஷ்ட தெய்வத்தையும் அழைத்துக் கொண்டு ஆலயம் வந்தனர்.




ஆனால் இம்மந்திரவாதிகளின் எண்ணம் அறிந்த அழகர் கோயிலில் இருந்த சாஸ்திரங்கள் அறிந்த பட்டாச்சாரியர்கள் அந்த 18 மந்திரவாதிகளையும், ஆலயப் பிரதான கோபுரவாசலில் 18 படிகளின் கீழே வைத்துப் புதைத்து விட்டார்கள்.



மந்திரவாதிகளுக்குத் துணையாக வந்த தெய்வம்தான் கருப்பண்ணசுவாமி, ''நான் அழகர் பெருமையைக் காணவே வந்தேன். கோபுர வாசலிலே இனி காவல் தெய்வமாக இருந்து கோயில் சொத்துக்களைப் பாதுகாப்பேன். எனக்கு அழகர் அர்த்தஜாம நிர்மால்ய நைவேத்திய பிரசாதத்தை வழங்க வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டாராம் கருப்பண்ணசுவாமி.

அழகர் கோயிலில் மூடப்பட்டிருக்கும் கதவையே கருப்பண்ண சாமியாக இன்று மக்கள் வழிபட்டு வருகிறார்கள்.



# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)



“சூரியகாந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரியகாந்தஞ் சூழ்பஞ்சைச்சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறுபோல
ஆரியன தோற்றமுன் அற்றமலங்களே”

(திருமந்திரம் 117)

சூரியகாந்தம் என்பது ஒரு வகைக்கல். இயற்கையில் கிடைப்பது. பார்ப்பதற்கு மற்றகற்களைப் போலவே இருக்கும். ஆனால் அதற்கென்று ஒரு தனிப்பட்ட தன்மை உண்டு. சூரியன் வெளிவந்தபோது அதனுடைய கிரணங்களைப் பெறும் ஆற்றல் அந்தக்கல்லுக்கு உண்டு.

அது மட்டுமின்றி, சூரிய கிரணங்களின் இயற்கைச் சூட்டைப் பிறபொருள்கள் மீது பிரதிபலிக்கும தன்மையும் சூரியகாந்தக்கல்லுக்கு உண்டு. லகுவாக எரியும் தன்மை உடைய பொருள்கள் அருகில் இருக்குமேயானால், சூரியகாந்தக்கல், அவற்றின் மீது சூரிய கிரணங்களின் இயற்கைச் சூட்டைச் செலுத்தி, அவற்றை எரித்து விடும். சூரியகாந்தக்கல், இந்த ஆற்றலை, சூரியனுடைய சக்தியால் பெறுகிறது.

ஒரு சூரிய காந்தக்கல்லைச் சுற்றி, பஞ்சு வைக்கப்பட்டுள்ளதாக கருதிக் கொள்ளுங்கள் என்கிறார் திருமூலர். சூரியன் வெளிப்படாத நேரத்தில், சூரியகாந்தக்கல் அந்த பஞ்சைச் சுட்டெரித்து விடாது. அந்தக் கல்லும், பஞ்சும் ஒன்றோடொன்று நெருங்கிக் கிடந்தாலும், பஞ்சுக்கு ஒன்றும் நேராது. சூரியன் வெளிப்படும் போது, சூரியக்காந்தக்கல் சூரிய கிரகணங்களையும் சூட்டையும் பெற்று, அருகில் உள்ள பஞ்சின் மீது சூட்டை செலுத்தி எரித்துவிடும்.

அந்தக் காலத்திலேயே, திருமூலரைப் போன்ற அருளாளர்கள் விஞ்ஞானம் தெரிந்து கொண்டு, அதன் மூலமாக தத்துவங்களை விளக்கினார்கள் என்பர் சான்றோர்கள். உண்மைதான். இங்கு திருமூலர் கையாண்ட உதாரணம் எளிதானது. அவர் கோடிட்டுக் காண்பிக்கும் அடிப்படையான உண்மை மிக ஆழமானது.

சூரியக்காந்தக்கல் தானாகச் சுடாது. சூரியன் சந்நிதியில் சுடும் என்றார் திருமூலர். சந்நிதி என்பதற்கு முன்னிலை என்று பொருள் கொள்ளலாம். சூரியன் நேராகப் பஞ்சைச் சுடுவதில்லை. சூரியக்காந்தக்கல்லுக்கு எரிக்கும் திறனைக் கொடுத்து, சுட்டு எரிக்க வைக்கின்றது. எனவே சூரியக்காந்தக்கல்லுக்கு சுடும் தன்மை என்று ஒன்று சிறப்பாக உண்டு. மற்ற கற்களுக்கு இது கிடையாது. இந்தத் தன்மை சூரீய காந்தக் கல்லில் அடங்கி இருந்தது. சூரியன் சந்நிதியில் அது வெளிப்பட்டது.


பதி, பசு, பாசம் ஆகியவற்றின் தொடர்பை விளக்குவதற்கு, இந்த உதாரணத்தை, திருமூலர் சிறப்பாகப் பயன்படுத்துகிறார்.

முன்னைய மந்திரத்தில், பதி, பசு, பாசம் எனப் பகர்மூன்றில் பதியினைப் போல் பசு, பாசம் அனாதி என்ற முப்பொருள் உண்மையை திருமூலர் தெளிவு படுத்தினார். மேலும், பாசங்கள் பசுவாகிய உயிரைப் பற்றும். அவை பதியினிடத்து அணுக மாட்டா என்றும் உரைத்தார். பசு பதியிடத்து அணுகும். அவ்வாறு அணுகும் போது அதனைப் பற்றியுள்ள பாசங்கள் அதனைப் பற்றி நில்லாது, விட்டு நீங்கும் என்றும் அருளிச் செய்தார். இதுவே, சைவம் உலகத்திற்குத் தந்த முடிவான தத்துவ உண்மையும் ஆகும்.

இந்த மந்திரத்தில் பசுவாகிய உயிர் சூரியகாந்தக்கல்லாகும். பாசங்கள் என்று சொல்லப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள், சூரியகாந்தக்கல்லை மூடியுள்ள பஞ்சு போலாகும. சூரியகாந்தக்கல் சூரிய வெளிச்சமின்றி தனியாக நிற்கும் போது, பஞ்சினைச் சுட்டுவிடாது. அதுபோல் ஆன்மாக்கள் தனியாக நின்று தம்மை மிகக் கட்டுப்படுத்தியுள்ள மலங்களான பாசங்களை நீக்கமாட்டாது.

சூரியகாந்தக்கல்லும், பஞ்சும் சடப் பொருள்கள். அறிவில்லாதவை. சூரிய காந்தக் கல்லுக்குத் தன்னை பஞ்சு மூடிக் கொண்டிருக்கின்றது என்பது தெரியாது. உயிர், பசு அறிவுடைய பொருள். ஆயினும் அதனுடைய அறிவு சிற்றறிவே. ஒருவர் அறிவித்தாலொழிய தானாகவே அறிந்து கொள்ளும் திறன் அதற்குக் கிடையாது.

மேலும், அது, தான் சார்ந்துள்ள பொருள்களின் வண்ணமாகவே விஷயங்களை அறிந்து கொள்ளும். ஒரு பொருளைச் சார்ந்திருக்கும் போது, உயிர், தன்னை அந்தப் பொருளாகவே கருதிக் கொள்ளும்.



## சோடச(16) தீப ஆராதனைகளும் பயன்களும்

1. தூபம் - உற்சாகம்
2. தீபம் - விழிப்பு
3. மகாதீபம் - அரசபோகம்
4. நாகதீபம் - உயர் பதவி
5. விருஷப தீபம் - அரசு
6. புருஷாமிருக தீபம் - பிணி நீக்கம்
7. சூல தீபம் - ரோக நிவர்த்தி
8. கமட (ஆமை) தீபம் - நீர்ப்பயம் நீங்கல்
9. கஜ (யானை) தீபம் - செல்வம்
10. வியாக்ரபுலி தீபம் - துஷ்ட நிவர்த்தி
11. சிம்மதீபம் - ஆயுள் விருத்தி
12. த்வஜ(கொடி) தீபம் - செல்வம்
13. மயூர (மயில்) தீபம் - மக்கள் பேறு
14. ஐந்து தட்டு பூர்ணகும்ப தீபம் - சாந்தி, மங்களம்
15. நட்சத்திர தீபம் - உலகாளும் ஆதீபத்தியம்
16. மேருதீபம் - மேலான வீடுபேறு

தனது உண்மை நிலையை அது அப்போது அறிந்துகொள்ளாது.

உயிருக்குத் தன்னைப் பிணைத்துள்ள மலங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டு. ஆனால், ஆணவம், கண்மம், மாயை ஆகியவை உயிரின் அறிவை, மறைக்கவும், உண்மையை மறக்கவும் செய்கின்றன. அதனால், உயிர், இந்த மலங்களிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள முடியும் என்று அறிந்து கொள்ள முடிவதில்லை. உயிர்கள் தானாகப் பாசங்களை நீக்கிக் கொள்வதில்லை.

சூரியன் வரும் போது சூரியக்காந்தக்கல் தான் சூரியனின் கிரணங்களைப் பெற்று, தனது தன்மையை வெளிக்காட்டுகிறது. சூரியகாந்தக் கல்லுக்கு ஒப்ப, உயிரானது அறியாமையாகிய இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. தான் ஒரு அறிவுப் பொருள் என்று கூட அது தெரிந்து கொள்ளவில்லை.

இங்கே தான் ஒரு அற்புதம் நிகழ்கின்றது.

''ஊசலாட்டுமிவ் வுடலுயிராயின
இருவினை அறுத்தென்னை
ஓசையாலுணர்வார்க்குணர்வரியவன்
உணர்வு தந்தொளியாக்கிப்
பாசமானவை பற்றறுத்துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசைதீர்த்தடியாரடிக் கூட்டிய அற்புதம்
அறியேனே''

என்று மாணிக்கவாசப் பெருமான் தனக்குக் கிடைத்த பேற்றினைப் பற்றி நன்றியுணர்வோடு பேசுவார்

(திருவாசகம் -அற்புதப்பத்து)

பலபிறவிகள் எடுத்துக், கர்மங்களைக் கழித்துக் கொண்டு, அவற்றின் சேட்டைகளிலிருந்து விலகி, உயிரானது, அருட்சக்தியின் துணையைப் பெறத் தொடங்குகிறது. ''உய்யும் வழி எது-'' என்று ஏக்கத்துடன் ஆராய்கின்றது. ஆகம நூல்களைப் படித்தும் கேட்டும், ஞானப்பாதையில் அடி வைக்கின்றது. உயிருக்கு அப்போது வழி காட்டுபவன் சிவபெருமானே!

உயிர் உலகத்தோடு நின்றபோது, ஆணவ இருள் அதன் மனநிலையைக் கட்டுப்படுத்துகிறது. மாயாகாரியங்களாகிய உடலும், கருவிகளும், உயிரின் அறிவை சிறிது விளக்கவும் உதவுகின்றன. அது போதாது. ஏனெனில், உயிர் அந்த அறிவில் மயங்கி நின்று விடுகிறது. அந்த மயக்கத்தை நீக்கி, உடம்பை, தனக்கு வேறாக நீக்கி, தன்னை ஒரு அறிவுப் பொருளாக உணர்ந்து, பின்னர், அந்த அறிவுக்குள்ளே அறிவாக விளங்கும் திருவருளையும் கண்டு, விளக்கம் பெற்று, அந்த திருவருள் விளக்கில் அடங்குவதுவே வீட்டுப் பேறுக்கு வழியாகும்.

''விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல்லார்க்கு
விளக்குடையான் கழல்மேவலும்ஆமே''

(திருமந்திரம்- ஒன்பதாம் தந்திரம்-ஞானோதயம்)

சகலர்களுக்கு சிவபெருமான் ஞானாசிரியனாகத் தோன்றுவான் என்பது சாத்திர உண்மை. ''ஆரியன் தோற்றமுன்'' என்றார் திருமூலர்.

# நடராஜரின் நடனம்



அண்டத்துக்குச் சிதம்பரம், பிண்டத்துக்கு இருதயம் என்பர்.

இதயம் துடிப்பது நின்றால்
உயிர்ப்பு அடங்கிப் போகும்
சிதம்பரத்தில் நடராஜரின்
திருநடனம் நிகழாவிட்டால்
அண்டங்கள் அசைவற்று
இயங்காமல் நின்று அழிந்து ஒழிந்து போகும்.

நடராஜர் உடுக்கை ஆக்கலை உணர்த்துகின்றது

அவர்தம் அமைந்த கை காத்தலை உணர்த்துகின்றது

அவர் ஏந்தியுள்ள நெருப்பு அழித்தலை உணர்த்துகின்றது.

ஊன்றிய திருவடி மறைத்தலை உணர்த்துகின்றது.

அவர்தம் எடுத்த திருவடி அருளலை (முத்தி, அனுக்கிரகம்) உணர்த்துகின்றது.

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி'' என்றும் அருளுகிறார் திருமூலர்.

சூரியன் சந்நிதியில் பஞ்சு சுட்டு எரிவது போல், ஞானாசிரியனின் தோற்றத்தில், மலங்கள் அற்றன என்கிறார் திருமூலர். இங்கே ''அகற்றும் மலங்கள்'' என்று கூறவில்லை. ஞானாசிரியன் முன்பு, உயிராக தனது மலங்களை நீக்கிக் கொள்ளாது. உயிரானது, குருஅருளால் சிவபெருமானின் அறிவையும், அருளையும் பெறுகிறது. சிவனது அறிவேயாய் நிற்கிறது. அந்த அறிவில் மலங்கள் நீங்குகின்றன என்பது தெளிவு.

ஞானகுருவின் திருவடி தரிசனத்தின் சிறப்பை அளவிட்டுச் சொல்லமுடியாது என்பார் திருமூலர். ஏன்? அவர் பரசிவப்பொருளேயாகும். அந்த நிலையிலே, துரிய நிலைகளுக்கு அப்பாற் பட்டு பேரொளிப் பிழம்பாக விளங்குபவர். அறிவு எனப்படும் உயிரோ, உடலில் தங்கி, அறியாமையில் உழன்று கொண்டிருக்கின்றது. உயிரை, அங்கிருந்து விடுவித்து, சுத்தநிலை என்று சொல்லப்படும் ''பெரிய குருபதம்'' என்ற இடத்தில் தங்க எல்லாவகைகளிலும் துணைபுரிபவர் ஞானாசிரியன். அவருடைய பெருமையை அளவிட்டுப் பேசஇயலாது என்கிறார் திருமூலர்.

''துரியங்கள் மூன்றும் கடந்தொளிர்சோதி
அரிய பரசிவம் யாவையுமாகி
விரிவு குவிவற விட்டநிலத்தே
பெரிய குருபதம்பேசஒண்ணாதே''

(திருமந்திரம், ஒன்பதாம் தந்திரம்-ஞானகுருதரிசனம்)

குருவைத் தரிசித்து வணங்கும் போதே, உயிர்களுக்குச் சிவத்தைக் காட்டாது உலகத்தைக் காட்டுகின்ற முப்பத்தாறு கருவிகளின் சேட்டைகளும் அடங்கிவிடும். ஞானாசிரியனின் உபதேசம் சிறப்பாக, சிவனது திருவடியைத் தரும். பின்பு, முடிவான அனுபவமாக, அவனது ஆனந்தம் வந்து, அது எல்லையின்றிப் பெருகுமாறு செய்வதும் ஞானாசிரியனின் தரிசனமும், வழிபாடும் என்கிறார் திருமூலர்.

''ஆறொடு முப்பதும் அங்கே அடங்கிவிடல்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
பேறே சிவபதம் மேலா அளித்திடும்
பேறாக ஆனந்தம் பேணும் பெறுகவே''

(திருமந்திரம்-ஞானோதயம்)

சிவஞானசித்தியார், ஞானாசிரியன் தோற்றமுன் உயிருக்கு விளைவதெல்லாம் என்னென்ன என்று சூரியகாந்தக்கல் உதாரணத்தை வைத்தே விளக்குகிறது. ஞானாசிரியன் உயிரின் முன்பு தோன்றியபொழுதே அவ்வுயிர்க்கு, அவனுடைய அறிவுரை கேட்கும் அறிவு விளங்கித் தோன்றும். தோன்றவே, சிவத்தின் இயல்பும் உயிரின் அறிவின் கண் வெளிப்படும். சிவம் உயிருக்கு உயிராக நிற்கவும், உயிருக்குத் தனது இயல்பும் தெளிவாகும், இறைவன் எங்கும் கலந்து நிற்பவன். எனவே உயிருக்கு அவன் கலந்து நிற்கும் உலகெல்லாம் வெளிப்படையாகும். இவையெல்லாம் ஞானாசிரியனின் உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே உயிர் பெறும்.

''சூரியக்காந்தக்கல்லினிடத்தே செய்ய
சுடர் தோன்றிவிடச் சோதி தோன்றுமாபோல்
ஆரியனாம் ஆசான்வந்து, அருளாய் தோன்ற,
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்
துரியனாம் சிவன் தோன்றத், தானும் தோன்றும்;
தொல்லுலகமெல்லாம் தன்னுளே தோன்றும்;
நேரியனாய், பரியனுமாய், உயிருக்குயிராய் எங்கும்
நின்ற நிலை எல்லாம் முன்நிகழ்ந்து தோன்றும்''

(சிவஞானசித்தியார் -280)

(தொடரும்)

# அகத்தியர் தேவாரத் திரட்டு

— 'சித்தாந்த வித்யாநிதி', பேராசிரியை
முனைவர் திருமதி மோ. ஞானப்பூங்கோதை



சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபட்டு உய்யும் சமயம் சைவசமயமாகும். சங்க காலம் தொடங்கித் தமிழ் மொழியில் தோன்றிய சைவப் பனுவல்கள் பற்பல. அவற்றுள், ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் முதலிகள் அருளிச் செய்த பனுவல்களே 'தேவாரம்' எனப் பெயர்பெறுகின்றன.

இறைவனை உணர்ந்து உய்வதற்காக அருளிச் செய்யப்பட்ட தமிழ் மறையாகிய இத்தேவாரம் 1,02,000 பதிகங்களைக் கொண்டிருந்தன எனினும் இன்று நமக்குக் கிடைத்திருப்பவை 797 பதிகங்கள் மட்டுமே ஆகும்.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளே இப்பதிகங்களைத் தில்லையில் கண்டெடுத்து, 7 திருமுறைகளாக வகுத்து அருளினார்.

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தருடைய பதிகங்களைக் கொண்டுள்ளன. 4,5,6 ஆம் திருமுறைகள் திருநாவுக்கரசருடைய பதிகங்களைக் கொண்டுள்ளன. 7ஆம் திருமுறை, சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய பதிகங்களைக் கொண்டுள்ளது-

பிற்காலத்தில் சிவாலய முனிவர் என்பவர் கல்வி, கேள்வி ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கிய நிலையில் இத்தேவாரங்களது பெருமையையும், இவற்றை முறையோடு நாள்தோறும் ஓதினால் வீடுபேறு அடையலாம் என்பதையும் அறிந்து அவ்வாறே ஓத ஆரம்பித்தார்.

ஆயினும் அவை முற்றுப் பெறாமையினால், மிக வருந்தித் தில்லை நடராஜரைப் பணிந்து வணங்கித் தம் எண்ணம் ஈடேற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள, அதுசமயம், ''சிவாலய முனிவனே! நீபொதிகை மலையிலே உறையும் அகத்திய முனிவரை அடைவாயாக. அங்கு உன் எண்ணம் முற்றுப் பெறும்''. என ஒரு வான்மொழி எழுந்தது.

சிவாலய முனிவரும் கூத்தப் பிரானை வணங்கி விடைபெற்றுப் பொதிகை மலையை அடைந்தார். அங்கு அகத்தியரைக் காண்பதற்காக மூன்றாண்டுகள் வழிபாடு செய்தார். பின் அகத்திய முனிவர் காட்சி தந்து, தேவாரப் பதிகங்கள் முழுமைக்கும் பொருள் கூறிப் பின்னர் இருபத்தைந்து பதிகங்களை மட்டும் திரட்டி, ''எட்டு தலைப்புகளில் அமைந்துள்ள இந்த இருபத்தைந்து பதிகங்களை ஓதினால் தேவாரம் முழுவதையும் ஓதிய பலன் கிடைக்கும்'' என்று மறைந்தருளினார். சிவாலய முனிவரும் அவ்வாறே அகத்தியர் திரட்டித் தந்த தேவாரப் பதிகங்களை நாள்தோறும் ஓதி வீடுபேறு அடைந்தார்.

அகத்தியர் திரட்டித் தந்த எட்டுத் தலைப்புகள் - 1. குருவருள், 2.வெண்ணீறு, 3.அஞ்செழுத்து, 4.கோயில், 5.அரனுரு, 6.திருவடி, 7.அர்ச்சனை, 8.தொண்டு ஆகியனவாகும். இதனை நமக்கு உணர்த்தும் வெண்பா -

''குருவுருவும் வெண்ணீறு எழுத்தஞ்சும் கோயில்
அரனுருவும் என்தலை மேலாக்குந் - திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு''

இவ்வாறு எட்டுத் தலைப்புகளில் அமைந்துள்ள இருபத்தைந்துப் பதிகங்களைப் பற்றி காண்போம்.

1. குருவருள் : ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் திருஞானசம்பந்தரின் முதற்பதிகமும், ''கூற்றாயினவாறு'' எனத் தொடங்கும் திருநாவுக்கரசரின் முதற்பதிகமும், ''பித்தா பிறைசூடி'' எனத் தொடங்கும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் முதற்பதிகமும பெருமையுடைய ஞானகுருவின் திறத்தை நமக்கு விளக்கும் மூன்று பதிகங்களாகும்.

2.வெண்ணீறு : ''மந்திரமாவது நீறு'' எனத் தொடங்கும் திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகம் திருவெண்ணீற்றின் பெருமையைக் காட்டுவதோடு பராசக்தியின் உண்மையியல்பையும் காட்டும் பதிகமாகும்.

3. அஞ்செழுத்து : திருஞான சம்பந்தரின் 'துஞ்சலும் துஞ்சல்' எனத் தொடங்கும் அஞ்செழுத்துப் பதிகம், 'காதலாகிக் கசிந்து' எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகம், திருநாவுக்கரசரின், 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகம், சுந்தர மூர்த்தி சுவாமிகளின், 'மற்றுபற்று' எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகம் என 4 பதிகங்கள் அஞ்செழுத்து மந்திரத்தின் உண்மையையும், பெருமையையும் எடுத்துக்காட்டுவனவாகும்.

4. கோயில் : சைவ சமயத்தில் திருக்கோயில் வழிபாடு மிக முக்கியத்துவம் பெறும். மூவர் முதலிகளும் பற்பலத் தலங்களுக்கும் சென்று இறையை வணங்கிப் பதிகங்கள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தரின் ''ஆரூர் தில்லை..'' எனத் தொடங்கும் பதிகம், திருநாவுக்கரசரின் ''தில்லை..'' எனத் தொடங்கும் பதிகம், சுந்தரரின் 'காட்டூர்,,,'' எனத் தொடங்கும் பதிகம் ஆகிய இம் மூன்று பதிகங்களும் கோயிற் திறனை எடுத்துக் காட்டுபவையாகும்.

# கடைமுழுக்கும் முடமுழுக்கும்



ஐப்பசி மாதம் கடைசி நாளில் மயிலாடுதுறையில் காவிரியில் மாயூரநாதர் கோயிலின் பஞ்சமூர்த்திகளும் காவிரியில் தீர்த்தம் ஆடுகின்றனர். இது ''கடைமுழுக்கு'' எனப் போற்றப்படுகின்றது. நாடெங்கும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் மயிலாடுதுறையில் அன்று ''கடைமுழுக்கு'' வைபவத்தில் பங்கு பெற்றுக்காவிரியில் தீர்த்தமாடிப் புண்ணியம் பெறுகின்றனர்.

கார்த்திகை மாத முதல் நாள் விடியற்காலையில் காவிரியில் தீர்த்தமாடுவது ''முடமுழுக்கு'' எனக் கூறப்படுகின்றது.

ஐப்பசி கடைசிநாளன்று காவிரியில் நீராடிப் புண்ணியம் பெற விரும்பி நெடுந்தொலைவி லிருந்து புறப்பட்டு வந்தான் முடவன் ஒருவன்.

அவன் வந்துசேரும்போது கடைமுழுக்கு விழா முடிந்துவிட்டது. அம்முடவனுக்கு இரங்கிய அருள்மிகு மாயூரநாதர் ''கவலைப்படாதே, நீநாளை சூரிய உதயத்திற்கு முன் ரிஷப தீர்த்தத்தில் நீராடு, துலா மாதம் முழுதும் நீரா்டிய பலன் உனக்குக் கிடைக்கும்'' என்று அருள்புரிந்தார். அப்படியே அவனும் கார்த்திகை முதல்நாள் விடியற்காலையில் நீராடி முத்தியடைந்தான்.

---

5. சிவனுருவம்: சிவபெருமானது உருவத்தை இருபத்தைந்து மூர்த்தங்களாக்க கூறுவது மரபு. தேவாரங்களில் அவ்வுருவச் செய்திகள் பல இடங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள் 'ஓருருவாயினை...'' எனத் தொடங்கும் திருஎழுக்கூற்றிருக்கையும், 'வரிய மறையார்' எனத் தொடங்கும் பதிகமும் திருஞானசம்பந்தர் அருளியவை. ''பாளையுடை..'' ''வடிவேறு...'' எனத் தொடங்கும பதிகங்கள் திருநாவுக்கரசர் அருளியவை. 'மருவார்...'' எனத் தொடங்கும் பதிகம் சுந்தரர் அருளிய பதிகமாகும். இவ்வவைந்து பதிகங்களும் சிவனது உருவத்தைச் சிறப்பிக்கின்றன.

6.திருவடி : இறைவனது திருவடி என்பது அவனது திருவருளைக் குறிப்பதாகும். உயிர்கள் சரணடைய வேண்டிய திருவடியைத் திருஞானசம்பந்தரின், ''பொடியுடை...'' எனத் தொடங்கும் பதிகமும், திருநாவுக்கரசரின் 'அரவணையான்..'' எனத் தொடங்கும் பதிகமும், சுந்தரரின் ''அந்தணாளன் ..'' எனத் தொடங்கும் பதிகமும் சிறப்பிக்கின்றன.

7. அர்ச்சனை : ''அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும் அதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக'' என்பது சேக்கிழார் வாக்கு. இதனைத் திருஞானசம்பந்தரின் ''பந்துசேர்...'' எனத் தொடங்கும் பதிகமும், திருநாவுக்கரசரின் 'வேற்றாகி விண்ணாகி..'' எனத் தொடங்கும் பதிகமும், சுந்தரரின் ''கொன்று செய்த..'' எனத் தொடங்கும் பதிகமும் இவ்வாக்கை மெய்ப்பிக்கின்றன.

8. தொண்டு: நடமாடும் கோயிலாய் விளங்கும் அடியார்களுக்குத் தொண்டு செய்வதே சிறந்த வழிபாடாகும். 'தொண்டல்லால் துணையில்லை' என்பது அப்பர் வாக்கு. ''வேயுறு தோளி...'' எனத் தொடங்கும் திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகமும், ''குலம் பலம்..'' எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் பதிகமும், சுந்தரரின் ''தில்லை வாழ் அந்தணர்..'' எனத் தொடங்கும் பதிகமும் தொண்டின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு அகத்தியர் திரட்டித் தந்த பதிகங்களைத் தினமும் ஓதிப் பேறு பெற்றவர் பலராவர். இன்றும் பலர் இவ்வழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

**''எட்டில் அமைந்த இருபத்தைந்தை**
**எண்ணி ஓதி இன்பம் பெறுவோம்.''**

# சேந்தனைப் பாடிய சேந்தன்



ஐங்கரன்

''முருகு'' மூன்று குற்றெழுத்துக்களால் ஆன, மிகத் தொன்மை வாய்ந்த, அழகிய சொல்! முருகு என்றாலே அழகு!...

முருகன்:

ஓரெழுத்து ஒரு மறையாம் பிரணவத்திற்குப் பொருள் சொன்னவன், விந்து, நாதம் - இரண்டையும் குறிக்கும் மயிலையும் சேவலையும்கொண்டவன், இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளையும் உடையவன். முறையே வள்ளி, தெய்வயானை, வேல்வடிவில், இளமை அழகு, வீரம் மூன்றையும் ஒருங்கே பெற்ற முத்தமிழோன், அறம், பொருள்,இன்பம், வீடு நான்கையும் நல்குபவன், ஐம்பெரும் பூதங்களுடன் தொடர்பைக் கொண்டும் அவற்றைக் கடந்து ஆளுபவன், அறுபடை வீடுகளில் உறைபவன், அறுவகைப் பகைகளை வெல்லத் துணை நிற்பவன்.....

இந்த இளம்பூரணனுக்கு எத்தனையோ திருநாமங்கள்.. அவற்றுள் ஒன்று சேந்தன்; செவ்வேளாகிய சேந்தனை இன்னொரு சேந்தன் பாடியுள்ளார்....

''செப்புறைச் சேந்தன்'' என்று தம்மைக் குறித்துள்ள அவ்வடியார் அருளிய திருப்பதிகங்கள் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

'திருவிசைப்பா - திருப்பல்லாண்டு' என்னும் ஒன்பதாம் திருமுறைக்குச் சிறப்புகள் பலவுண்டு.. அவற்றுள் ஒன்று . அதிலுள்ள பாடல்களை அருளியவர்களின் எண்ணிக்கையும் ஒன்பது என்பது!.. திருப்பல்லாண்டும் இத்திருமுறையில் உள்ளது.

சேந்தனார் திருப்பல்லாண்டு பாடியவர்; முருகவேளையும், சிவனொடு ஒக்க பாடியவரும் அவரே....

சேயோனின் சிறப்பைச் சித்தரிக்கும் வகையில், அகத்துறைப் பாடல்களை எழுசீர் விருத்தத்தில் அந்தாதித் தொடையாக அமைத்து அவர் பாடியுள்ள திருவிசைப்பாப் பதிகம் நெஞ்சைநெகிழ்விப்பதாகவுள்ளது. தலைவன்பால் அன்பு கொண்ட ஒரு தலைவியின் துயரங்கண்ட நற்றாய் இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது இத்திருப்பதிகம். 'மாலுலாமனம்' எனத் தொடங்கி, 'மாலுலாமனமே' என நிறைவடைகிறது.

முதற் பாடல் ஒரு தத்துவக் களஞ்சியம்!... 'வள்ளிதன் மணாளனான தலைவன், தலைவியின் சங்கு வளையைப் பற்றினான் என்பது செய்தி.

''மாலுலர் மனந்தந் தென்கையிற் சங்கம்

வவ்வினான்''

ஒன்றைத் தந்து மற்றொன்றைப் பெறுவது உலக வியல்பு.. இங்கே நடந்ததோ வேறு - ''எளிவந்த வான்கருணை அதாவது ஆன்மாவுக்கு'' எளிமையாக வந்து அருள் புரிவது!.... ஞானப்பயிர் ஆன தினையை, ஜீவான்மாவான வள்ளி காத்துக் கொண்டிருக்க, கருணை வள்ளலாம் முருகப் பெருமான் அருள் புரிந்தமையை நுட்பமாகக் கூறுகிறது.

''மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்'

ஸ்ரீ குமரவேள் அவன் என்பதைச் சொல்லிவிட்டு, அப்பெருந்தகையே கீழிறங்கி வந்து 'வள்ளிதன் மணாளன் ஆனான்'' என்பதைச் சொல்லும் நயம் மெய்சிலிர்க்கச் செய்கிறது.

''கவளமாகரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்

கனகக்குன் றெனவருங் கள்வன்''

யானையின் மேல் பொற்குன்று அமர்ந்தாற் போல் வரும் அக்'கள்வன்' இவளது எழிலைக் கவர்ந்தானாம்!... முன்பொரு சமயம் அவ்விளங்காளையின் தந்தை விடையேறி, சிவக் கொழுந்தாகிய சிறுவரின் 'உள்ளங் கவர் கள்வனாக' வரவில்லையா?... அப்படி!....

கோவினை என்று தொடங்கும் மூன்றாம் பாடல். சொல்லாட்சிக் கோர் எடுத்துக் காட்டு:

.......... கோழிவெல் கொடியோன்


காவனற் சேனை யென்னக்காப் பவன்.....


என்னும் தொடர், சங்க காலத்துக்கே இட்டுச் சென்று விடுகிறது!... குறுந்தொகையில், குமரக்கடவுள் வாழ்த்தில்

.................................... குன்றின்

நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்

சேவலங் கொடியோன் காப்ப - என்னுந் தொடரில், அப்பெருமானின் தெறலையும் அளியையும் ஒருங்கே காட்டுகிறார் பெருந்தேவனார். ஒப்பிட்டு இன்புறுகிறோம்.





## அவதூதர் ஆடம்பரி ஆனகதை

ஆடையும் துறந்த அவதூதர் ஒரு நாள் கோவணம் தரிக்கத்துவங்கினார்.

மாற்றுக் கோவணத்தை எலி தூக்கிச் சென்றது. எலியை விரட்ட பூனை ஒன்றை வளர்த்தார். பூனைக்குப் பால்வேண்டி ஒரு பசுவாங்கினார். பசுவின் புல்லுக்காக புல்வயலை வாங்கினார்.

நிலங்களைப் பாதுகாக்கப் பண்ணை அமைத்துப் பரிவாரங்களைஅமர்த்தினார்.

அவற்றை நிர்வகிக்கும் காரியங்களை நம்பாமல் பொறுப்புள்ள ஒருவர் வேண்டுமென ஒரு பெண்ணை மணந்தார். பின் மக்களைப் பெற்றார். பேரப்பிள்ளைகளைப் பெற்றார்.

பலதரப்பட்ட இன்பதுன்பங்களில் இறைவனையே அவர் மறந்து போனார்.

அவதூதர் ஆடம்பரி ஆனகதைதான் இது.

---

அத்தகைய தலைவன், ''தூவிநற் பீலி'' மாமயிலூருஞ் சுப்பிரமண்ணியன்' இவளது மேகலையைக்கவர்ந்து விட்டானாம்!

தமிழிலக்கியத்தில் முதன் முதலாகச் சுப்பிரமணியன்' என்னும் பெயர் இங்கு ஆளப்படுவது குறிப்பிடத்தக்கது.

மிகவும் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்ததாக உள்ளது 'தானமர்' என்ற அடுத்த பாடல். ஒரே கேள்வி: தலைவன் இப்படி இடர் விளைவிப்பது நல்லதா? எப்படிப்பட்ட தலைவன்?--

''மானமர்தடக்கை வள்ளல்தன் பிள்ளை''

மானேந்திய கையனான சிவபெருமானின் பிள்ளை!... ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் ஆகிய அறுவகைப் புண்ணியங்களை வளரச் செய்ய எழுந்தருளியிருப்பவன். கொடி போன்ற இவருக்கு இடர்விளைவிக்கலாமா?.........

இடர் விளைவிப்பதோடு அல்லாமல், படும் துன்பத்தைக் குறிக்கொள்ளாது இருப்பது அழகா?.... ''குணமணி'' என்ற பாடலில் இப்படி ஒரு முறையீடு, ஓசைநயத்துடன்!. தலைவன் - கங்கைதன் சிறுவன்; காங்கேயன்!

''கணபதி பின்னிளங்கிளை, தடை தந்து தடைநீக்கும் விநாயகனின் இளவல்!''

கங்கையைச் சூடித் தன் பேராற்றலையும், திங்களைச் சூடித் தன் பெருங்கருணையையும் விளக்கியவன் மங்கை பங்கன்... அத்தகையவனின் மகன். இம்முருகவேள்... இவன் காக்கும் கடவுள் திருமாலின் மருகனும் கூட! இச்சிறுமிக்கு அருள் புரிவானா? 'கிளையிளஞ்சேய்' என்ற இப்பாடலில் தகவையும் கனிவையும் ஒருங்கே காணுகிறோம்.

''என் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொல் முருகவேள் பரிந்தே''

நெஞ்சைநெகிழ்விக்கும் தொடர்!

அழகிய சொல்லையுடைய இவள். 'அழகுக்கு அரசு' ஆகிய தலைவனை,

''பரிந்த செஞ்சுடரோ பரிதியோ மின்னோ
பவனத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந்துரமோ தூமணித் திரளோ''.

என்றெல்லாம் மயக்கங் கொள்ளும் விதம் இருந்தவாறு என்னே?- இந்த வியப்பு அடுத்த பாடலில் மேலிடுகிறது.. ஐயவணி விரவிய அரிய பாடல்!.....

''முன்னேவந் தெதிர் தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார் மார்பின் விஞ்சையனோ? ................. என்றல்லாம் பரவையார் திகைத்ததை நினைவு கூர்கிறோம்.... அங்கே சுந்தரமூர்த்தி; இங்கே சுந்தரத்தரசு!''

புரமெரித்த பரமனின் புதல்வன் இத்தலைவன்... ஏன் இவனே அசுரர் மாளப் பெரும்போர்விளைவித்தவன்!...

தந்தையின் திருநாமங்கள் எண்ணற்றவை. இவனும் தொகை மிகு நாமத்தவன்.. அத்தகையவன் அருள்புரியாமையால் தலைவி மடல் தொடங்கினாள் ''வகை மிகும்'' என்னும் பாடல் ஏந்திவரும் செய்தி இது.

''குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசரவண நிகுதர் கலகா! பிறைச்சடையர்
குருவெனநவுரையுதவு மயிலா!''

எனச்சந்தத் தமிழ் போற்றும் சொல்லச் சொல்ல நாமமணக்கும் திருநாமங்கள் கொண்டவன் சிவகுமாரன்..

''தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென்
துடியிடை மடல் தொடங்கினளே''

''தலைவி மடல் தொடங்கியும் தான் புனைந்துள்ள மாலையின் புறஇதழைக் கூடத் தந்து

# மாங்கல்ய நூலில் ஒன்பது இழைகள்



மாங்கல்ய நூலில் ஒன்பது இழைகள் உண்டுஅவை.

1. வாழ்க்கையை உள்ளது உள்ளபடி புரிந்து கொள்ளுதல்
2. ஆற்றல்
3. தூய்மை
4. தெய்வீக நோக்கம்
5. உத்தம குணங்கள்
6. மேன்மை
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு, ஆகியவற்றைப் பிரதி பலிக்கின்றன. இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொண்டு குடும்பத்தைச் சிறப்புறச் செய்தல் வேண்டும் என்ற கருததில் ஒன்பது இழைகள் கொண்ட மாங்கல்யம் அணிவிக்கப்படுகின்றது.

அருளாதவன் இத்தலைவன்'' என்று கூறிவிட்டு, இவனே அடியார்க்கு எளியனாகவும், அறியார்க்கு அரியனாயும் இருக்கும் பாங்கையும் போற்றுகிறது. ''தொடங்கினள்'' என்று தொடங்கும் பாடல்.

''பன்னிரு நயனத்

தறுமுகத் தமுதினை'' என்னுந் தொடர் ஓர் இனிய ஊற்று!

சிவபெருமான் வேத முதல்வன்..... நாத தத்துவமாகிய மானை இடத் திருக்கையின்கண் ஏந்தியருளுவது இதை உணர்த்தவே!.... மான், சிவபெருமானின் திருக் கண்ணை நோக்கிக் கொண்டிருக்கிறது. இதன் உட்பொருள் - நாத தத்துவம் அவனது நேர்திருக்குறிப்பால் தொழிற்படுவது என்பதே!

''வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்''

''நாதன் நான்'' என நவிற்று மாறே.... என விளக்குவார் பட்டினத்துப் பிள்ளையார். இத்தத்துவத்தைச் சேந்தனார் மிக நுட்பமாகக் குறித்துள்ளார். பத்தாம் பாடலில்

தலைவியின் மான்விழி வேத முதல்வனின் அருள் திறத்தைத் தாய்க்கு நினைவூட்டுகிறது.. சிவபெருமானின் குலக் கொழுந்தான முருகன் என் மகளுக்கு அருள் புரியாதிருக்க மாட்டான் என்று உறுதி பெறுகிறாள்.

''இருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்

கண்ணுடைக் கோமனக் கொழுந்தே!''.

அற்புதமான தொடர்...

தலைவியின் தாய் மொழியாகச் சேந்தனார் முருகப் பெருமானை ஏத்திய இப்பாடல்களைக் கேட்பார்தம் இடர்தீரும் என நிறைவடைகிறது, இத்திருப்பதிகம்.

''திருக்கு ராவடி நிழல்தனி லுறைவோனே

திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே!''

என்றும்

''செழுமலர்ப் பொழிற் குரவ முற்றபொற்

றிருவிடைக்கழிப் பெருமாளே''

என்றும் பிற்காலத்தில் அருணகிரிநாதர் பரவிய திருவிடைக்கழி முருகனைத்தான் தலைவனாக் கொண்டு அந்தாதி பாடினார் சேந்தனார்... பாடல் தோறும்

''திருவிடைக்கழியில்

திருக்குரா நிழற்கீழ் நின்ற'' - குமரனைப் போற்றி உருகுகிறார்.

இத்திருப்பதிகத்தைப் படித்து முடித்ததுமே திருவிடைக்கழிக்கு விரைய வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுவது இயல்பே ... அபிராமியந்தாதி பெற்ற திருக்கடவூருக்கு அருகேயுள்ள திருத்தலம்தான் அகத்துறை யந்தாதி பெற்ற இத்திருவிடைக்கழி!... ★★★

## இராஜகோபுரத்தின் சிறப்பு

கோவிலின் உள்ளிருக்கும் கோபுரங்களை விட மிகப்பெரியதாகக் கோவிலின் முகப்பிலே உள்ளது இராஜ கோபுரம். இதனை ''ஸ்தூல லிங்கம்'' என்பர்.



''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பது பழமொழி

தூரத்தில் இருந்து பார்க்கும் போதே, இறைவனின் நினைவுவர உறுதுணையாய் விளங்குவது இராஜகோபுரத்தின் சிறப்புஆகும்.

# திருப்பாணாழ்வார்



நீளாதேவியின் அம்சமான கமல வல்லி நாச்சியாரைப் பெற்றெடுத்து, அழகிய மணவாளனான அரங்கனுககு கன்னிகாதானம் செய்து கொடுத்த சோழ அரசன் ஆண்டு வந்த காலம் இது.

''ஊரெனப்படுவது உறையூர்'' என்ற பெருமை பெற்ற உறையூர் அவர்களது தலைநகரம். இதன் மற்றைய பெயர்கள், திருக்கோழி, நிகளாபுரி, உறந்தை, நாச்சியார் கோயில் எனப்படும்.

இந்த ஊரில், கி.பி.8ம் நூற்றாண்டு, துன்மதி வருடம், கார்த்திகை மாதம், தேய்பிறை துவிதியை திதியில் புதன்கிழமை அன்று ரோகிணி நக்ஷத்திரத்தில் செந்நெற்பயிரில் பாணர் அவதரித்தார். இவர் திருமாலின் ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாவார்.


பஞ்சம ஜாதியான பாணர் குலத்தில் பிறந்த ஒருவன் நெற்பயிரின் அருகில் வரும்போது இவரைக் கண்டான். குழந்தையின் பெற்றோர் அருகில் எங்காவது இருக்கிறார்களா என்று சுற்று முற்றும் தேடினான். ஒருவரும் தென்படவில்லை. குழந்தை இல்லாத தனக்குத் தெய்வம் தந்த பரிசு என்று நினைத்து மனைவியிடம் கொடுக்க, இருவரும் பாசத்துடன் வளர்த்தனர். பாணக்குலத்துக்கு ஏற்ற யாழிசையில் சிறப்புற்று இருந்த பாணரை எல்லாரும் ''திருப்பாணர்'' என்றே அழைத்து வந்தனர்.

பூலோக வைகுண்டமான திருவரங்கத்தை காலால் தீண்டக் கூடாது என்று இவர் நினைத்தார். அதனால் தினமும் வைகறையில் காவிரியின் தென்கரையில் கையில் வீணையை வைத்துக் கொண்டு பல பாடல்களை அரங்கனை நோக்கியபடியே பாடிவருவதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவ்வாறு இருக்கும்போது ஒரு நாள், அரங்கனுக்குத் திருமஞ்சனத் தீர்த்தம் எடுத்து வரும் லோக சாரங்க முனிவர் என்பவர் இவரைப் பார்த்து ''தள்ளிப்போ'' என்றார். மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்த பாணனின் காதில் அவர் சொன்னது விழவில்லை. கோபம் கொண்ட முனிவர் ஒரு கல்லை எடுத்து பாணரின் மீது வீசி எறிந்தார். பாணர் முகத்தில் கல்பட்டு ரத்தம் பெருகியது. கண் விழித்துப் பார்த்து அபசாரத்திற்காக வருந்தி நகர்ந்து சென்றார்.

பொற்குடத்தில் நீரை முகந்து கொண்டு வந்த முனிவர் சன்னிதிக்குள் சென்று பார்க்கும்போது, பெருமாளின் நெற்றியிலிருந்து செந்நீர் பெருகியதைப் பார்த்து பதறிக் கோயில் அதிகாரிகளிடம் தெரிவித்தார். இச்செய்தி காட்டுத் தீயைப் போல பரவி அரசன் வரை சென்றது, அமைச்சர்களுடன் கலந்து பேசியும் காரணம் புரியாததால் பகவானிடமே பாரத்தைப் போட்டுவிட்டான் அரசன்.

ஒரு நாள் பிராட்டி



வைகுண்டத்தில் பெருமாளிடம் இவ்வாறு வினவினாள் ''பலகாலமாக நம்மைப் பற்றியே பாடி வருகிற பாணரிடம் இன்னும் ஏன் பராமுகமாக இருக்கிறீர்கள்''? என்று

இந்த நிகழ்ச்சிக்காகத்தான், தான் காத்திருந்ததாகக் கூறிய பெருமாள், விரைவில் பாணருக்கு அருள்புரிவதற்கான சமயம் வந்து விட்டதாகத் தெரிவித்தார். அன்று இரவில் முனிவரின் கனவில் சென்று, ''என் பக்தனுக்கு நீசெய்த அபசாரம் நீங்க, அவனை உன்னுடைய தோளில் சுமந்து கொண்டுவா'' என்று கட்டளையிட்டார்.

தான் கண்ட கனவைப் பல பெரியவர்களிடம் கூறிய முனிவர் அவர்களைத் துணையாகக் கொண்டு பாணரிடம் விரைந்தார்.

பாணர்ரை வலம் வந்து பெருமாளின் கட்டளையைச் சொன்னார்.

அதற்கு, ''நீசனான் நான் திருவரங்கத்தை மிதிக்க மாட்டேனே'' என்று பாணர் தன் சாதியைக் கூறி மறுத்தார்.

''நீர் மிதிக்க வேண்டாம். என்னுடைய தோளில் ஏறி அமரும், நான் சுமந்து செல்கிறேன்'' என்ற முனிவர் கூற, ''நான் தங்கள் பாதத்தில் தலை வைத்து வணங்க இருக்க, எவ்வாறு தங்கள் தோளின் மீது சவாரி செய்வேன்'' என்று மறுபடி மறுத்தார்.

இது இறைவனின் கட்டளை என்று முனிவர் சொன்னவுடள், மறுபேச்சின்றிப் பணிந்தார்.

அரங்கனின் சன்னிதிக்குள் முனிவர் சென்று பாணரை இறக்கினார்.

இறைவனை பாதம் முதல் கேசம் வரை அணு அணுவாக ரசித்துப் பார்த்த பாணர், உடனே


''அமலனாதி பிரானடியார்க் கென்னை
ஆட்படுத்த விமலன், விண்ணவர் கோன்
விரையார் பொழில் வேங்கடவன்,
நிமலன் நின் மலன் நீதி வானவன்
நீள் மதிளரங்கத்தம் மான், திருக்
கமல பாதம் வந்தென்
கண்ணினுள்ளன வொக்கின்றதே'' (1)
என்று ஆரம்பித்து
''கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன்
என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணியரங்கள் என்னமுதினைக்
கண்ட கண்கள், மற்றொன்றினைக்
காணவே!'' (10)

என்று 10 பாடல்கள் கொண்ட பாமாலையைப் பாடினார். இந்த அருளிச் செயலுக்கு ''அமலனாதிபிரான்'' என்று பெயர்.

பின் எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கையில் பெரிய பெருமாளின் திருவடிகளை வணங்கியபடியே மறைந்து போனார்.

அவர் காவிரிக் கரையில் நின்று கொண்டு பல பாடல்களைப் பாடியிருந்த போதிலும், கடைசியாகப் பாடிய இந்த அமலனாதிப்பிரான் மட்டும் தான் நமக்கு கிடைத்தது. இதைப் பாடி விட்டு இறைவனுடன் ஒன்றிவிட்டார் என்பது தான் நாம் அறிந்த உண்மை. அவரைத் தோளில் தூக்கி வந்ததற்கான பரிசாக அரங்கன் லோகசாரங்க முனிவருக்கும் பேரின்ப வீட்டை அளித்தான்.

## பஞ்சபூதங்களை வென்றவர் ஸ்ரீ ஆஞ்சநேயர்



1. வாயு புத்ரன் ஆனபடியால் காற்றை வென்றவர்
2. இராம நாம அருளால் சமுத்திரத்தைத் (நீர்) தாண்டி வென்றார்.
3. பூமாதேவியான சீதையின் அருளுக்குப் பாத்திரமானதால் நிலத்தை வென்றார்.
4. இராவணன் இவருடைய வாலில் வைத்த நெருப்பைக் கொண்டே இலங்கையை எரித்து வெற்றி கொண்டார்.
5. ஆகாசமார்க்கத்தில் நீந்திடும் ஆற்றல் உடையவர் ஆதலால் ஆகாயத்தை வென்றார்.

ஸ்ரீரங்கத்தில் ரங்கவிலாசமண்டபத்தில் இருக்கும் வீர ஆஞ்சநேயர் சன்னதியிலேயே திருப்பாணாழ்வாரும் சேர்ந்து சேவை சாதிக்கிறார்.

பரம்பொருளை இறைவனைத் தன் தோளில் சுமக்கும் பாக்கியத்தை அனுமன் பெற்றார்.

கீழ் ஜாதியில் பிறந்த காரணத்தால், திருவரங்கத்தை மிதிக்க மாட்டேன் என்று விரதம் பூண்ட பாணருக்கு, உயர் குலத்தார் தோளில் சுமந்து செல்லப்பட்டு, அரங்கனுடன் உடனேயே ஐக்கிய மாகி விட்ட பேறு பெற்ற பெருமையை என்ன வென்று சொல்வது ! ஆண்டாளைப் போன்ற பாக்கியம் அல்லவா ?

பாஞ்சராத்ரதீபம் எனப்படும் திருக்கார்த்திகை அன்று வருகிறது அவரது திருநக்ஷத்திரம், இந்த வருடம் டிசம்பர் மாதம் 5ம் தேதி செவ்வாய்க் கிழமையன்று வருகிறது.

முனிவாஹனர் என்று போற்றப்படும் திருப்பாணாழ்வார் இப்பூவுலகில் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார்.

# திருப்பதிக்கு நிகரான திருவல்லிக்கேணி

வைணவச் சுடராழி டாக்டர் ஆ.எதிராஜன்



**இன்துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும்**
**இன்பன், நற்புவி தனக்கு இறைவன்**
**தன்துணை ஆயர் பாவை நப்பின்னை**
**தனக்கிறை, மற்றையோர்க்கெல்லாம்**
**வன் துணை, பஞ்சபாண்டவர்க்காகி**
**வாயுரை தூது சென்று இயங்கும்**
**என்துணை எந்தை தந்தை தம்மானை**
**திருவல்லிக் கேணி கண்டேனே**

(1072) பெரியதிருமொழி 2-3-5

என்பது திருமங்கையாழ்வாரின் இன் தமிழ். தண்டமிழ்த் தலைநகரில் அலைபுரளும் கடலோரம் அருள் செழிக்க வீற்றிருக்கும் திவ்ய தேசமிது.




வரலாறு:

இத்தலத்தைப் பற்றிப் பிரும்மாண்ட புராணத்தில் பிருந்தாரண்ய மகாமித்யம் என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது. பிருந்தம் என்றால் துளசி. ஆரண்யம் என்றால் காடு. எனவே பிருந்தாரண்யம் துளசிவனம் என்று பொருள் கொள்ளப்படும்.

சுமதி என்னும் மன்னன் வேங்கட மலையில் ஸ்ரீனிவாசப் பெருமாளை வழிபட்டு அர்ஜுனனுக்கு தேரோட்டிய கண்ணனாக பெருமாளைக் காண விழைவதாக எண்ணித் தவத்திலிருக்க, அப்போதே ஸ்ரீனிவாசன் அசரீராய் நீ விரும்பிய தோற்றத்துடன் கைரவணி தீர்த்தங்கொண்ட பிருந்தாரண்யத்தில் எழுந்தருளினேன். ''அங்கு சென்று தரிசிப்பாயாக'' என்று கூற, சுமதியும் அவ்வாறு செய்தான் என்பது வரலாறு.

ஆனால் இந்த பிருந்தாரண்யத்திற்கு எப்போது பெருமாள் அவ்விதம் வந்தாரென்னில் வேதவியாசருக்கு ஆத்திரேய முனிவர் என்னும் ஒரு சீடரிருந்தார். அவர் தம் குருவின் கட்டளைப்படி பிருந்தாரண்யத்திற்குத் தவம் செய்ய வந்தபோது அவரால் கொடுக்கப்பட்ட கண்ணனின் திவ்ய மங்கள விக்ரகமொன்றையுங் கொண்டு வந்தார். அவ்விக்கிரகம் ஒரு கையில் சங்கேந்தியதாயும், மறு கையில் தான முத்திரையுடையதாயும் (தன் திருவடியில் சரணம் அடைய அருள் புரிதல்) இலங்கியிருந்தது.

பிருந்தாரண்யம் வந்த ஆத்திரேய முனிவர் அங்கு சுமதி என்ற முனிவரைக் கண்டு (சுமதி மன்னர்வேறு) மகிழ்ந்து தம் வருகையைக் கூற இருவரும் அப்பெருமானை அங்கேயே பிரதிட்டை செய்து வழிபடலாயினர். வலப்புறம் ருக்குமணியையும் இடப்புறம் சாத்தகியையும் நிறுவி வழிபட்டு அவ்விருவரும் மோட்சஉலகுபெற்றனர்.

இக்கோலத்தையே கண்டு வழிபடுமாறு ஏழுமலையான் கட்டளையிட சுமதி மன்னனும் அவ்விதமே வழி பாடியிற்றினான். வேங்கடவனால் காட்டப்பட்டதால் வேங்கட கிருஷ்ணன் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

மூலவர்:

வேங்கட கிருஷ்ணன் ருக்குமணி பிராட்டியுடன் பலராமன், ஸாத்யகி, அநிருத்தன், பிரத்யுமனன் இவர்களோடு கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

உற்சவர்: பார்த்தசாரதி

தாயார்: வேதவல்லி

விமானம்:

ஆநந்த விமானம், பிரணவ விமானம், புஷ்ப விமானம், சேஷ விமானம், தைவீக விமானம்.

தீர்த்தம்:

கைரவிணி (அல்லிக்கேணி), இத்தீர்த்தத்தில் இந்திர. ஸோம, அக்கினி, மீன, விஷ்ணு என்ற 5 தீர்த்தங்கள் சூழ்ந்துள்ளதாய் ஐதீகம். கடலுக்கு மிக அருகாமையில் இருந்தாலும் மீன்கள் இதில் வசிப்பதில்லை (அவ்வளவு புனிதமானது) இந்த தீர்த்தம். பெருமாளின் திருமஞ்சனத்திற்கும் இதுவே தீர்த்தம்.

காட்சிகண்டவர்கள்:

சுமதி ராஜன், பிருகு மகரிஷி, மதுமான் மகரிஷி, சப்தரோமர், அத்திரி மகரிஷி. ஜாஜலி மகரிஷி.

சிறப்புகள்:

1) ஐந்து மூர்த்திகள் ஒருங்கே எழுந்தருளியுள்ள ஸ்தலம்

அ) அத்திரி முனிவரின் தவத்திற்கு மகிழ்ந்த திருமால் அவர் விருப்பப்படி நரசிம்ம மூர்த்தியாக இத்தலத்தில் எழுந்தருளினார்.

ஆ) மதுமான் மகரிஷி என்னும் முனிவரின் தவத்திற்கு இசைந்து அவர் விரும்பிய வண்ணம் ராமனாக இத்தலத்து எழுந்தருளினார். சீதை, இலக்குவன் பரத சத்ருக்கனரும் பின் தொடர்ந்தனர்.

இ) சப்தரோமர் என்னும் ரிஷியின் தவத்திற்குகந்து கஜேந்திரவரதர் கோலத்தில் இங்கு காட்சிதந்தார்.

ஈ) சுமதி என்னும் மன்னனின் விருப்பதிற்கிசைந்து வேங்கட கிருஷ்ணனாய் அவதாரம் செய்தார்.

உ) திருமாலுடன் ஊடல் கொண்ட திருமகள் வைகுண்டத்தை விட்டுப் பிரிந்து இவ்விடத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த பிருகு மகரிஷியின் குடிசைக்கருகில் குழந்தையாய் உருவாகி நிற்க. வேதங்களில் கூறப்பட்ட தேவமகள் இவளே என உணர்ந்து வேதவல்லி என்று பெயரிட்டு வளர்த்துவர தக்க பருவம் வந்ததும், ரங்கநாதனே இளவரசர் வடிவம் பூண்டு திருமகளை ஏற்றுக் கொண்டார். திருமகள் ரங்கநாதரைக் கண்டதும் இவரே மந்நாதர் (என் கணவர்) என்றுரைத்ததால் மந்நாதர் என்ற பெயரும் உண்டு.

எனவே திருமணக் கோலத்திலான ரங்கநாதராக (மந்நாதர்) இத்தலத்தில் எழுந்தருளினார்.

இவ்விதம் ஐந்து மூர்த்திகளும் ஒருங்கே எழுந்தருளியிருப்பது இந்த ஒரு திவ்ய தேசத்தில் மட்டும்தான்.

**2. திருமலை வெங்கடேசனே வேங்கட கிருஷ்ணனாக எழுந்தருளியிருப்பதால் இரண்டாவது திருப்பதி என்றழைக்கிறார்கள். புரட்டாசி சனிக்கிழமைகள் திருப்பதியைப் போல் இங்கும் விசேடம்.**

3. கண்ணன் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருந்து பீஷ்மர் விட்ட அம்புகளை அர்ஜுனனுக்காக ஏற்றுக் கொண்டதைக் காண்பிக்க இன்றைக்கும் ஸ்ரீபார்த்தசாரதி (உற்சவர்) திருமுகத்தில் வடுக்களைக் காணலாம்.

4. வைணவத் தலங்களில் முக்கிய மூன்றான வேங்கடம், அரங்கம். கச்சி என்ற முத்தலத்துப் பெருமாள்களும் இங்குள்ளது ஒரு சிறப்பு.

5. இக்கோவிலின் முன் மண்டபம் தொண்டைமானால் கட்டப்பட்டதென்பது திருமங்கையாழ்வாரின் பாடலினால் தெளிவுறும் விஷயமாகும்.

''மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாட மாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர்கோன் செய்த
நன்மயிலைத் திருவல்லிக் கேணி.'' *1077*

என்கிறார்

6. திருமயிலை எனப்படும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் ஒரு காலத்தில் ஒரே ஊராகக் குறிக்கப்பட்டன. மயிலை சிவஸ்தலம். அல்லிக்கேணி விஷ்ணு ஸ்தலம். மயிலைத் திருவல்லிக்கேணி என்பதே திருமங்கையாழ்வார் அமுதவாக்கு. அழகிய அல்லிமலர்கள் நிறைந்த குளத்தை உடையமையால் திருவல்லிக்கேணி என்ற பெயருண்டாயிற்றென்பர்.

7. ''பார்த்தன் தன் தேர்முன் நின்றானை'' இத்தலத்துக் கண்டேனென்றும், ''தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணி கண்டேனென்பதும்'' திருமங்கையாழ்வார் பா உரைக்கும் அவதார நினைவூட்டுகளாகும்.

8. முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வாரும், திருமழிசையாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம்.


9. 108 திவ்ய தேசங்களிலே தான் வளர்ந்த குலவழக்கப்படி பெரிய மீசையுடன் எழுந்தருளியுள்ள ஸ்தலம் இது ஒன்றுதான்.

10. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில்.

''திரிந்துழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
பரிந்து புகன்மின் புகன்றால் - மருந்தாங்
கருவல்லிக் கேணியாம் மாக்கதிக்கு கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்.''

சாதாரண போகங்களிலே திரிந்து உழன்று கொண்டிருக்கும் சிந்தையை நிறுத்தி திருவல்லிக்கேணி திவ்யதேசத்திலே வாழும் வேங்கட கிருஷ்ணனாகிய கண்ணனின் புகழை விரும்பிப் பாடும் தொழிலைச் செய்க. கருவல்லியாகிய - கர்ப்பமாகிய கொடியை அறுக்கும் மருந்தாகும் என்பது பாடல் விளக்கமாகும்.

# ஐம்பெரும் வேள்விகள்



அன்றாடம் கடவுளை வழிபடுவது தேவயக்ஞம்.

அன்றாடம் பெற்றோரை வழிபடுவது பிதுர்யக்ஞம்


அன்றாடம் மக்களுக்குத் தொண்டு செய்வது மனுசயக்ஞம்

அன்றாடம் புல், செடி, கொடி, மரம், பறவை, விலங்கு போன்ற உயிரினங்களைக் காப்பாற்றுவது பூதயக்ஞம்

அறிவை நல்கிய ஆசாரியர் களையும், ரிஷிகளையும் மதித்து அர்க்யம் அளித்தல் பிரம்மயக்ஞம்.

# கயிலாயத்திற்கு இணையான திருவெறும்பீசர் திருக்கோயில்

கவிஞர் யுவராஜ்அமிழ்தன்



அள்ளும் அழகான காவிரியின் கரை தன்னில் அமைதியாய், அமைந்ததோர் சிறிய குன்றில், எறும்பீசர் திருக்கோயில் கயிலாயத்திற்கிணையாகப் புகழ் பெற்றுள்ளது.

திருச்சியிலிருந்து தஞ்சைசெல்லும் வழியில் உள்ள இக்கோயில் முன்னாளில் பிரம்மபுரம், லட்சுமிபுரம், மதுவனபுரம், ரத்தினகூடம், குமாரபுரம் பிப்பிலீசுவரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

கரன், திரிசிரன், தூசனன என்ற மூன்று அரக்க சகோதரர்கள் இக்கோயிலில் சுயம்பு வடிவான ஈசனை வழிபாடு செய்து கொண்டிருருந்த போது இந்திரன் மற்றும் தேவர்களும் வழிபட வந்தனர். கருவறையில் அரக்கர்களைக் கண்ட அவர்கள் அஞ்சி நான்முகனை வேண்டி எறும்பு உருவம் எடுத்து சிவலிங்கத்தின் மீது ஊர்ந்து ஏறும் போது, ஏற முடியாது தவித்ததைக் கண்ட இறைவனும் சற்றே வடக்கில் சரிந்து கொடுத்தாகவும் அதனாலேயே திருஎறும்பூர் எனப் பெயர் வந்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது.

கலைமிகு கலைஞரெல்லாம் களித்திடும் அழகாய் குன்றின்மேல் கோயில் அமையப் பெற்றுள்ளது. நுழைவு வாயிலின் இடது புறம் செல்வ விநாயகரும், வலப்புறம் ஆஞ்சநேயர் சன்னதியும் உள்ளது.

மலைக் கோயிலுக்குச் செல்ல 125 படிக்கட்டுகள் உள்ளன. இம்மலையிலிருந்து பார்த்தால் திருச்சி மலைக்கோட்டையின் அழகுத் தோற்றமும், பசுமைமிகு வயல்வெளிகளையும், வாழைத் தோப்புகளையும் கண்டு ரசிக்கலாம், மேலும் ஸ்ரீரங்கம், பொன்மலை ஆகியவற்றையும் காணலாம், இத்தலத்திற்கு அருகில் கட்டைக்கழிச் சித்தர் என்பவரின் ஜீவ சமாதியும் உள்ளது.



மலைக்கோயில் நுழைவு வ்ாயிலின் இடதுபுறம் அம்மன் சன்னதி தெற்கு நோக்கி உள்ளது. நறுங்குழல் நாயகி என்ற பெயருடன் அம்மனின் இரண்டு திருமேனிகள் அமைந்துள்ளன. அன்னை தன் நான்கு கரங்களில் மலர்களை ஏந்தியும், அபயவரத முத்திரை தாங்கியும், தன்னிடம் வரும் அடியாருக்கு அருள் பாலிக்கிறாள். அன்னையின் தோற்றம் மிகவும் அழகானது. ஒவ்வொரு நாளும் வெவ்வேறு உருவங்களில் அம்பிகை காட்சி அளிப்பது சிறப்பு அம்சமாகும்.

**திருஎறும்பீசனின் காட்சிஃ**

கருவறையில் இறைவன் சுயம்புலிங்கமாகக் காட்சி தருகிறார். வடக்குப் பக்கத்தில் சற்றே சாய்ந்த நிலையில் புராண வரலாற்றுக்கு ஆதாரமாகவும், தன்னை அண்டிவரும் அடியார்க்கு அருள் செய்யும் மனத்தோடு ஆடல் வல்ல இறைவன் கருணை வடிவாய்க் காணப்படுகின்றார். இங்கு இறைவனுக்கு அபிஷேகங்கள் நடப்பதில்லை, ஏனெனில் லிங்க வடிவான ஈசன் மண்ணினினால் ஆனவர்.

**திரு எறும்பூரின் சிறப்புஃ**

திருநாவுக்கரசரால் பாடப் பெற்ற இத்த்லத்திற்கு (1) திருத்தாண்டகம் (2) திருக்குறுந்தொகை ஆகிய தல இல்க்கியங்கள் உள்ளன. தமிழகத்தில் 274 பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள் உள்ளன. அதில் ஒன்றான இத்தலத்திற்கு ஒரு முறை வந்தால் கயிலை மலைக்கு சென்று வந்த புண்ணியம் கிடைக்கும். கல்விக்கும், தொழில் மேன்மைக்கும் திருமணத் தடை நீங்கவும், புத்திர பாக்கியத்திற்கும், இத்திருத்தலத்தில் வழிபாடு செய்தால் வாழ்வில் எல்லா நலன்சளும் பெறலாம்.

பின்வரும் திருஎறும்பியூர் திருப்பதிகம் தினமும் ஓதி பெருவாழ்வு பெறுவோமாக!

திருச்சிற்றம்பலம்

திருமுறைஃ திருக்குறுந்தொகை

''விரும்பிஊறு விடேல் மட நெஞ்சமே
கரும்பின் ஊறல்கண்டாய் கலந்தார்க்கு அவன்
இரும்பின் ஊறல் அறாதது ஓர்வெண்தலை
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே'' *(1)*


''நிறம்கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்
நறுங்கொள் மடவாள் நடுக்கம் எய்திட
மறம்கொள் வாள்அரக்கன் வலிவாட்டினான்
எறும்பியூர் மலை எம்இறை காண்மினே.''

திருச்சிற்றம்பலம்

## மலைக்கோட்டையின் நான்கு முகங்கள்

திருச்சி மலைக்கோயிலைக் கிழக்குத் திசையிலிருந்து பார்த்தால் விநாயகர் போல ஆனைவடிவம் தெரியும்.

வடக்குத் திசையிலிருந்து பார்த்தால் தோகை விரித்தாடும் மயில் போல் தெரியும். மேற்கிலிருந்து பார்த்தால் சிவலிங்கம்போல் தெரியும். தெற்குத் திசையிலிருந்து பார்த்தால் ரிஷபம் தலை உயர்த்தி அமர்ந்திருப்பதாகத் தெரியும்.



# அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி

**தமிழ் அருச்சனை - அருள்வேண்டுதல் -**

**(சங்கற்பம்)**

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில்............ அவர்களுக்கும்,
அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்
சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,
பொருள், இன்பம் வீடு எனும் நாற்பயனும்
பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள்
பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல
வாழ்வெய்தவும்
உமது திருவடிகளில் மலர் தூவி வழிபாடு
செய்கின்றோம்.

**அருள்மிகு தென்முகக்கடவுள் 8 போற்றிகள்**

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் அறம் முதல் நான்கும் அருளினாய் போற்றி
3. ஓம் ஆலின்கீழ் நால்வர்க்கு அருளினை போற்றி
4. ஓம் சின்முத்திரை அருளும் சிவனே போற்றி
5. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
6. ஓம் முயலகன் மேல் கால் ஊன்றினாய் போற்றி
7. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
8. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

**அருள்மிகு தென்முகக்கடவுள் 16 போற்றிகள்**

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி
3. ஓம் ஆலின்கீழ் நால்வருக் கருளினை போற்றி
4. ஓம் உபதேசகலையின் ஒளியே போற்றி
5. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
6. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி
7. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி
8. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
9. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
10. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
11. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
12. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
13. ஓம் மூன்று விரலை முகிழ்த்தாய் போற்றி
14. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
15. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
16. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

**அருள்மிகு தென்முகக்கடவுள் 108 போற்றிகள்**

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் அநாதியாம் முப்பொருள் காட்டினாய் போற்றி
3. ஓம் அநாதியே உற்ற தெய்வமே போற்றி
4. ஓம் அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
5. ஓம் அருளாய் நிறைந்த அமுதே போற்றி
6. ஓம் அருளே முதலாய் ஆனாய் போற்றி
7. ஓம் அலைபுனல் சூடிய அரனே போற்றி
8. ஓம் அல்லல் அறுக்கும் அறத்தாய் போற்றி
9. ஓம் அறம்முதல் நான்கும் அருளினாய் போற்றி
10. ஓம் அறிஞர்க் கறிவாய் நின்றாய் போற்றி
11. ஓம் அறிவின் உருவாய் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் அற்புதம் நிகழ்த்தும் அருளே போற்றி
13. ஓம் ஆகமம் ஆகி அண்ணிப்பாய் போற்றி
14. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி
15. ஓம் ஆணையால் உலகை ஆள்வாய் போற்றி



ஆதிகுரு அருள்மிகு தட்சணாமூர்த்தி

16. ஓம் ஆதிபகவனாய் அமர்ந்தாய் போற்றி
17. ஓம் ஆதியாய் நின்ற அமலா போற்றி
18. ஓம் அரியா னாகி அருளினை போற்றி
19. ஓம் ஆலின்கீழ் நால்வருக் கருளினை போற்றி
20. ஓம் ஆனந்த அருள்மழைக் கண்ணாய் போற்றி
21. ஓம் ஆன்மப் பொருளைத் துலக்கினாய் போற்றி
22. ஓம் இசையில் திளைத்த இசைவே போற்றி
23. ஓம் இடதுகால் ஊன்றிய ஏந்தலே போற்றி
24. ஓம் இருமையை நீக்கும் இடையே போற்றி
25. ஓம் இன்ப உருவின் எழிலாய் போற்றி
26. ஓம் உபதேசக் கலையின் ஒளியே போற்றி
27. ஓம் உயர்வுறு பரமகுருவே போற்றி
28. ஓம் உயிர்க்கெலாம் உயிராய் நின்றாய் போற்றி
29. ஓம் உருவெலாம் கடந்த ஒருவ போற்றி
30. ஓம் ஏகன் அனேகன் இறைவ போற்றி
31. ஓம் ஏகாந்த அனுபவம் இயற்றுவாய் போற்றி
32. ஓம் ஒளிமயமான உருவ போற்றி
33. ஓம் ஒன்றான ஆனந்த உருவே போற்றி
34. ஓம் ஓங்கார நாதத்து ஒருவ போற்றி
35. ஓம் ஓங்கு குருபர நாதனே போற்றி
36. ஓம் ஓங்குயிர் ஞான சிவமே போற்றி
37. ஓம் ஓம்எனும் பிரணவம் உணர்த்தினாய் போற்றி
38. ஓம் ஓம்பரப் பிரம்ம ஒளியே போற்றி
39. ஓம் ஔவியம் போக்கும் அருளே போற்றி
40. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
41. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி
42. ஓம் கருணைக்கடலாய் நின்றாய் போற்றி
43. ஓம் கலையெலாம் புனைந்த கவினே போற்றி
44. ஓம் கல்லாடை புனைந்த கலையே போற்றி
45. ஓம் கல்லாலின் கீழமர் கடவுள் போற்றி
46. ஓம் சச்சிதானந்த சிவமே போற்றி
47. ஓம் சதாசிவத் தென்முகக் கடவுள் போற்றி
48. ஓம் சரியை முதல் நான்கும் தந்தாய் போற்றி
49. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி

50. ஓம் சித்தம் மருவும் செம்பொருளே போற்றி
51. ஓம் சித்தர்கட் கெல்லாம் சிற்குரு போற்றி
52. ஓம் சித்தி அருள் முத்திரையாய் போற்றி
53. ஓம் சித்திகள் பலவாய்த் திகழ்வாய் போற்றி
54. ஓம் சிந்தனைக் கரிய சிவமே போற்றி
55. ஓம் சிவஞானப் புத்தகம் ஏந்தினாய் போற்றி
56. ஓம் சிவயோக நிலையருள் செல்வா போற்றி
57. ஓம் சின்முத்திரை அருள் சிவனே போற்றி
58. ஓம் சுட்டு விரலாற் சுட்டுவோய் போற்றி
59. ஓம் சொற்பதம் கடந்த தொல்லோய்போற்றி
60. ஓம் ஞானத்து உறவை நல்குவாய் போற்றி
61. ஓம் ஞானத்தொரு தெய்வம் ஆனாய்போற்றி
62. ஓம் ஞானம் விளக்கும் நாயகா போற்றி
63. ஓம் தத்துவ விளக்கம் காட்டினாய் போற்றி
64. ஓம் தந்திர கலைதனைத் தந்தாய் போற்றி
65. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
66. ஓம் தவமெலாம் போற்றும் தவமேபோற்றி
67. ஓம் தற்பதப் பொருளாய் நின்றாய் போற்றி
68. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
69. ஓம் தீரத் துறந்த திருவே போற்றி
70. ஓம் துரியம் கடந்த சுடரே போற்றி
71. ஓம் தூண்டா விளக்கின் சோதி போற்றி
72. ஓம் தூய நன்ஞானச் சுடரே போற்றி
73. ஓம் தெற்கமர் பரம பதியே போற்றி
74. ஓம் தேவர்கட் கெல்லாம் தேவனே போற்றி
75. ஓம் தூயனாய்த் துணையாய் நின்றாய் போற்றி
76. ஓம் நவயோக நந்தியாம் நாத போற்றி
77. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
78. ஓம் நாகப் புரியணி நாதா போற்றி
79. ஓம் நிலவை முடியில் நிகழ்த்தினாய் போற்றி
80. ஓம் நிறைவாய் நின்ற நிலையே போற்றி
81. ஓம் நிறைவுறு ஞானப் பொலிவே போற்றி
82. ஓம் நீறணி நெற்றிக் கண்ணாய் போற்றி
83. ஓம் பசுபதியாய் நின்ற பரம போற்றி
84. ஓம் பத்தி நெறிக்கோர் வித்தகா போற்றி
85. ஓம் பரஞானச் செஞ்சுடர் பரம போற்றி
86. ஓம் பரமபதி யெனும் பக்குவ போற்றி
87. ஓம் பரமானந்தப் பரமனே போற்றி
88. ஓம் பன்முக ஞானம் பரப்பினாய் போற்றி
89. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
90. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
91. ஓம் பொய்த்தவப் போக்கைப் போக்குவாய்
போற்றி
92. ஓம் மங்கலம் கருதும் சங்கரா போற்றி
93. ஓம் மந்திரக் கலையில் மகிழ்ந்தாய் போற்றி
94. ஓம் மலமாயை கன்மம் மாற்றினாய் போற்றி
95. ஓம் மறையெலாம் புகழும் மணியே போற்றி
96. ஓம் மனக்கவலை மாற்றும் மருந்தே போற்றி
97. ஓம் முதுமறை நான்காய் முகிழ்த்தாய் போற்றி
98. ஓம் மும்மலப் பேயை முனிவாய் போற்றி
99. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
100. ஓம் முனிவர்க்கே ஞானம் மொழிந்தாய்
போற்றி
101. ஓம் மூன்று விரலை முகிழ்த்தாய் போற்றி
102. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
103. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
104. ஓம் வலக்கால் மடித்து வைத்தவா போற்றி
105. ஓம் வன்பெலாம் தீர்க்கும் மருந்தே போற்றி
106. ஒம் வான்பொருள் வழங்கும் வள்ளலே
போற்றி



## குபேரயோகம் தரும் குருபகவான்

நவகிரகங்களில் குருபகவான் என்னும் வியாழானாகக் காட்சியளிப்பவர் ஒரு ரிஷி. இவர் ஆங்கிர முனிவரின் புத்திரர் தேவேந்திரனின் அமைச்சர், தேவர்களின் குரு.

''தனகாரகன்'' என்று அழைக்கப்படும் இவரை வியாழன் தோறும் வழிபட்டுவந்தால் குபேரயோகம் பெறலாம்.

105. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
106. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

பாடல் : தென்முகக்கடவுள்

''கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்''
- பரஞ்சோதி முனிவர்

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

............. ................. அருள்மிகு தென்முகக்கடவுள் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக, மங்களம் உண்டாகுக.

# ஸ்ரீ ஆண்டாளுக்குக் கம்பன் அளித்த குஞ்சம்

வைணவ சமய திவ்விய சேத்திரம் 108 திருத்தலங்களில் ஒன்று மதுரை - செங்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ''ஸ்ரீவில்லிபுத்தூர்'' என்று அழைக்கப்படும் புண்ணிய திருத்தலம் ஆகும். இவ்வூரைப் பற்றி கூறும்பொழுது,


''மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ
ரென்று ஒருகால்
சொன்னார் கழற் கமலம் சூடினோம்''

என்ற பெருமையை தன்னகத்தே கொண்டு இன்றும் விளங்கி வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் முன்னொரு காலத்தில் ஸ்ரீமன் நாராயணன் வராக அவதாரமாக அவதரித்தபோது தம் தேவியருடன் இளைப்பாறியதால் ''வராக சேத்திரம்'' என்று அழைக்கப்பட்டது.

புற்றுக்கள் நிறைந்து காணப்பட்டதால் ''புத்தூர்'' ''புதுவாபுரி'' என்றும் அழைக்கப்பட்டது.

புற்றுக்கள் நிறைந்த இவ்வூரை ஊராக நிர்மாணித்த மல்லி வள நாட்டு வேடுவ மன்னன் வில்லியின் பெயரால் ''வில்லிபுத்தூர்'' என்றும், மஹாலட்சுமியின் அம்சமாக பூமிதேவியாக 'ஸ்ரீஆண்டாள்' இங்கு விருப்புற்று அவதரித்ததால் ''ஸ்ரீவில்லிபுத்தூர்'' என்றும் போற்றப்படுகிறது.



பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பிள்ளைத் தமிழின் முன்னோடியாக போற்றப்படும் பெரியாழ்வார் இத்திருத்தலத்தில் வடபத்ர சயனருக்கு மாலை கைங்கர்யம் செய்வதற்காக திருக்கோயில் முன்புறம் நந்தவனம் அமைத்து அதில் கைங்கர்யம் செய்து கொண்டு இருந்தார்.

அப்போது துளசிச் செடிக்கு கீழே, கலியுகம் பிறந்து 98-வதாக நிகழ்ந்த நள வருடம் ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் துலா லக்னத்தில் தெய்வீக அழகு பொருந்தியவளாய் அன்று மலர்ந்த மலர் போல திவ்ய ஆபரணங்கள் அணிந்தவளாய் கருவிலே திருவுடையவளாய் மிக்க ஒளியுடன் ஸ்ரீ ஆண்டாள் அவதரித்தாள். ஸ்ரீ ஆண்டாளைக் கண்ட பெரியாழ்வார் ஆச்சரியம் அடைந்து, ஸ்ரீ வடபத்ர சயனர் ஆணைப்படி ''கோதை'' என்ற பெயர் சூட்டி ஸ்ரீஆண்டாளை தம் மகளாக வளர்த்து வந்தான்.

இவ்வாறு கோதை வளர்ந்து வரும் நாட்களில் பெரியாழ்வார் கண்ணனின் பால்ய லீலைகளையும், அவனுடைய குணாதிசயங்களையும் அழகாக அனுபவித்துக் கோதையிடம் சொல்லி வந்தார். நந்தவனக் கைங்கரியம் செய்யும்போதும், பூமாலை கட்டும் போதும் தம் செல்வியை அருகே அமர்த்தி வடபெருங்கோயிலுடையான் மீது தான் கொண்ட பக்தி நிலையை எடுத்துரைப்பார். இவ்வாறு கோதை வளர வளர வடபெருங்கோயிலுடையான் மீது மிக்க பக்தியுடையவளாகவும். கண்ணனிடத்து மிகுந்த பேரன்பு உடையவளாகவும் விளங்கினாள்.

நாட்கள் செல்லச் செல்ல கண்ணனிடம் அவள் கொண்ட அன்பு பக்தி மிகுந்த காதலாகப் பரிணமித்தது. கண்ணனைக் காண வேண்டும்; அவனோடு பேசவேண்டும்; அவனையே மணம் செய்ய வேண்டும் என்று கோதை எண்ணலானாள். பெரியாழ்வார் வடபத்ரசயனருக்கு சாத்துவதற்காக கட்டி வைத்த மாலையினை அவர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்துக் 'கோதை' அணிந்து கொண்டு கண்ணாடியின் முன்னின்று தன் அழகினை ரசித்து, தன் மணாளனான கார்முகில் வண்ணனுக்குப் பொருத்தமாக இருக்கிறேனா? என்று அழகு பார்ப்பாள்.

இவ்வாறு சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான கோதை பக்தி அனுபவம் செய்து கொண்டு இருக்கும்போது, திருமணப் பருவம் அடைந்த தம் மகளுக்கு ஏறற கணவனாக பக்தியிலும், மெய்ஞானத்திலும் சிறந்தவரைக் காணப்பெறாமல் பெரியாழ்வார் கவலைப்படலானார். தந்தையின் எண்ணத்தைக் குறிப்பினால் அறிந்த ஆண்டாள் ''தந்தையே, தாங்கள் நினைப்பது போல ஒருவன் எவ்வளவு தான் பக்தியிலும் ஞானத்திலும் தலைசிறந்தவனாக இருந்தாலும் அவனை மணக்க என் மனம் விரும்பவில்லை.

''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்!

என்றும், ''மாவிருஞ்சோலையம் மாயவற்கல்லாமல் மற்றவர்க்கென்னைப் பேசவொட்டேன்'' என்றும் பதில் உரைத்தாள்.

# தரணிக்கே மறை தந்த தமிழ்ஞானி



ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின்
உயர் அடியொற்றி நடப்பவரை
வாட்டும் தொல்லை வருத்துவதில்லையெனக் குறளில்
காட்டுவதும் வள்ளுவன் தானே!

மனத்தூய்மை தான் நல் அறமென்றும் '
மற்றவை எல்லாம் மன்பதையில்
ஆரவார கோஷங்களே என்றும்
அறிவுறுத்துவதும் குறள் நெறி தானே!

ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு
உலைவின்றித் தாழாது உஞற்ற வாரீர்!
உடன் வாரீர்! உங்கள் உடன் பிறப்பு
அழைக்கின்றேன்; உடன் வாரீர்! உடனே வாரீர்!

- மாண்புமிகு தமிழக முதல்வர்
''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள்



இங்ஙனம் ஆண்டாளின் உறுதியான மனநிலையை அறிந்து வியந்த பெரியாழ்வார் இது எங்ஙனம் நடந்தேறும் எனக் கவலைப்படலானார். ஆண்டாளின் உறுதியான பக்தியினையும், நம்பிக்கையினையும் எம்பெருமான் ஏற்றுக் கொண்டு, பெரியாழ்வாரின் கனவில் தோன்றி ''ஆழ்வாரே! உம்மகள் கோதையை நம்முடைய திருவரங்கத்திற்கு அழைத்து வருவீராக! அவளை யாம் ஏற்று அருள் செய்வோம் என்று அருளினார். இவ்வாறு திருவரங்கத்தில் ஆண்டாளை ஏற்றுக் கொண்ட பெருமான், பெரியாழ்வாரின் விருப்பப்படி ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளி பரம பாகவதர்களும், பந்துக்களும், தேவர்களும் மகிழும்படி பங்குனி உத்தர நட்சத்திரத்தன்று ஸ்ரீரெங்கத்து ரெங்கமன்னார் ஸ்ரீ ஆண்டாளை மணம் செய்து ஏற்று அருளினார் என்பது இத்தலவரலாறு ஆகும்.

''கோதை'' என்ற பெயருக்கு வாக்கை உதவுபவள் என்று பொருள். ''ஆண்டாள்'' என்ற பெயருக்கு எம்பெருமானையும், உலக மக்களின் உள்ளங்களையும் ஆட்கொண்டவள் என்றும், மாலை சூடிக் கொடுத்ததால் ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்றும் சிறப்பு பெயர் பெற்றார்.

இவ்வாறு ஸ்ரீ ஆண்டாளின் பெருமையினையும் பக்தியினையும் எம்பெருமான் மீது அவள் கொண்ட உறுதியினையும் உலக மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். மக்கள் அனைவரும் ஆண்டாளைப் பெரியாழ்வாரின் திருமகளாக கருதாமல் ஒவ்வொரு வரும் தங்கள் வீட்டு பெண் போல எண்ணி ஸ்ரீ ஆண்டாளுக்கு பொன்னும், பொருளும் உயர்ந்த பட்டாடைகளும் சூட்டி மகிழ்ந்தனர்.

ஸ்ரீஆண்டாள் - ஸ்ரீரெங்கமன்னாரைத் தரிசிக்க ஆவலுற்று ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளினார். மேலும் இன்று தமிழக அரசின் முத்திரைச் சின்னமாக விளங்கக் கூடிய இராஜகோபுரத்தின் வானளாவிய தோற்றத்தினை வியந்து இராஜகோபுரத்தினைப் பற்றிக் கீழ்க்கண்ட பாடல் புனைந்துள்ளார்.

''இருக்கோதும் அந்தணர் சூழ்புதுவாபுரி
யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங்கோயில்
மணிவண்ணா!
திருக்கோபுரத்துக் கிணையம்பொன்
மேருச்சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுபமானப்
பணிபில்லையே''

- கம்ப நாட்டாழ்வார்.

இராஜகோபுரத்தின் பெருமையினை மேருமலைச் சிகரத்திற்கு ஒப்பாக அவர் பாடிய பாடல் இராஜகோபுரத்தின் நிலையில் பொறிக்கப்பட்டுள்ளது.

கம்பரும். ஸ்ரீ ஆண்டாளுக்குச் சீதனமாக அழகிய முத்து வேலைப்பாடுகளுடன் கூடிய அழகான கொச்சினைச் (குஞ்சம்) சூட்டி மகிழ்ந்தார். கம்பரின் வேண்டுகோளின்படி தைமாதப் பிறப்பு (சங்கராந்தி) அன்று, ஸ்ரீ ஆண்டாள் எண்ணைக்காப்பு மண்டபம் போய்த் திரும்பி வரும் போது பெரிய கோபுரத்தின் வாயிலில் நின்று, இந்தக் கம்பன் கொச்சு ஸ்ரீ ஆண்டாளுக்கு உச்சந் தலையில் சாற்றித் தீபாராதனை செய்வார்கள், பின்பு ஸ்ரீ ஆண்டாள் ஆஸ்தானம் செல்வார்கள். இந்நிகழ்ச்சி கம்பன் நினைவாக இன்றும் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது.


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

# அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் & சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

## இராயப்பேட்டை, சென்னை- 600 014.

## திருப்பணி - குடமுழுக்கு
## நன்கொடை வேண்டுகோள்



சென்னை - 14, இராயப்பேட்டை, அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் - சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள சன்னதிகள், விமானங்கள், மடைப்பள்ளி, தரைத்தளம் ஆகியவற்றிற்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. திருப்பணிகள் மற்றும் குடமுழுக்குப் பணிகளை நன்கொடையாளர் மூலம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளதால் பொதுமக்களும் நன்கொடையாளர்களும் இப்பணிகளில் பங்கேற்று எல்லாம் வல்ல அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருவருளைப் பெற்று நலமுடன் வாழ அழைக்கிறோம்.

*திருப்பணி செய்ய விழைவோர் மற்றும் நிதி அனுப்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

**உயர்திரு நிர்வாக அதிகாரி அவர்கள்**

**அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்**

இவண்

| | |
|---|---|
| **இரா. வான்மதி,** | **ச. சிவகுமார்,** |
| தக்கார்/ உதவி ஆணையர் / நகை சரிபார்ப்பு அலுவலர். | செயல் அலுவலர் |

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்
# திருஅண்ணாமலை-606601
# தமிழ்நாடு, இந்தியா

## திருக்கார்த்திகை பிரம்மோற்சவ விபரம்

**1416 - பசலி 2006 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில்**

| வ எண் | ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி | கிழமை | உற்சவம் | உற்சவம், வாகனங்கள் சிறப்பு விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 21.11.2006 | கார்த்திகை | 5 | செவ்வாய் | | ஸ்ரீதுர்க்கை அம்மன் உற்சவம் |
| 2. | 22.11.2006 | | 6 | புதன் | | ஸ்ரீபிடாரி அம்மன் உற்சவம் |
| 3. | 23.11.2006 | | 7 | வியாழன் | | ஸ்ரீ விநாயகர் உற்சவம் |
| 4. | 24.11.2006 | | 8 | வெள்ளி | 1 | துவஜாரோகணம் (காலை 7.45 மணிக்கு மேல் 9.15 மணிக்குள்) |
| 5. | 25.11.2006 | | 9 | சனி | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 6. | 26.11.2006 | | 10 | ஞாயிறு | 3 | சிம்மவாகனம், வெள்ளி அன்னவாகனம் |
| 7. | 27.11.2006 | | 11 | திங்கள் | 4 | வெள்ளி கற்பக விருஷம், காமதேனு வாகனம் |
| 8. | 28.11.2006 | | 12 | செவ்வாய் | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 9. | 29.11.2006 | | 13 | புதன் | 6 | வெள்ளி ரதம் |
| 10. | 30.11.2006 | விய வருடம் கார்த்திகைத் திங்கள் | 14 | வியாழன் | 7 | மகா ரதம் (காலை 7.35 மணிக்கு மேல் 8.35 மணிக்குள் வடம் பிடித்தல்) |
| 11. | 1.12.2006 | | 15 | வெள்ளி | 8 | மாலை 4.00 மணிக்கு பிட்சாண்டவர் உற்சவம், இரவு குதிரை வாகனம் |
| 12. | 2.12.2006 | | 16 | சனி | 9 | கைலாசவாகனம் |
| 13. | 3.12.2006 | | 17 | ஞாயிறு | 10 | காலை 4.00 மணிக்குப் பரணி தீபம் மாலை 6.00 மணிக்கு மகாதீபம் |
| 14. | 4.12.2006 | | 18 | திங்கள் | தெப்பல் | இரவு சந்திரசேகர் தெப்பல் ஸ்ரீ பெரிய நாயகர் கிரிபிரதட்சணம் |
| 15. | 5.12.2006 | | 19 | செவ்வாய் | தெப்பல் | ஸ்ரீபராசக்தி அம்மன் தெப்பல் |
| 16. | 6.12.2006 | | 20 | புதன் | தெப்பல் | ஸ்ரீசுப்பிரமணியர் தெப்பல் |
| 17. | 7.12.2006 | | 21 | வியாழன் | | ஸ்ரீசண்டிகேசுவரர் உற்சவம் |

1) கார்த்திகை தீபத்திற்குப் பிரார்த்தனை நெய்குடம் கட்ட விரும்பும் ஆன்மநேயச் செல்வர்கள், ''துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை'' என்ற முகவரிக்கு நேரிலோ, மணியார்டர் மற்றும் பணவரைவோலை மூலமாகவோ, கிலோ ஒன்றுக்கு ரூ.200/-, அரை கிலோவிற்கு ரூ.100/-, கால் கிலோவிற்கு ரூ.50/- என்ற விகிதத்தில், செலுத்தி ஆருத்திரா தரிசனம் முடிந்த பின்னர் தீபச் சுடர் பிரசாதம் ரசீதுடன் நேரிலும், தபால் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

2) 03.12.206 மகா தீப தினத்தன்று மாலை 6.00 மணிக்கு மகாதீப தரிசனம் மற்றும் பஞ்சமூர்த்திகளின் தரிசனம் செய்ய (தென் திருமாளபத்தி மாடியில்) சிறப்புத் தரிசனக் கட்டணமாக டிக்கட் ஒன்றுக்கு ரூ. 500/- வீதம் 500 டிக்கட்டுகளுக்கும், மடப்பள்ளிக்கு செல்லும் வழியில், ஸ்ரீ சம்பந்தவிநாயகர் சந்நிதிக்கு எதிர்புறத்தில் அமர்ந்து தரிசனம் செய்ய சிறப்புத் தரிசன கட்டணமாக டிக்கட் ஒன்றுக்கு ரூ.600/- வீதம் 50 டிக்கட்டுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. மேற்கண்ட சிறப்புத் தரிசன டிக்கட்டுகளைத் தங்கள் பெயர், முகவரியினை முன் கூட்டியே அலுவகத்தில் பதிவு செய்து 02.12.2006, 03.12.2006 அன்று பெற்றுக் கொள்ளலாம்.

3) இத்திருக்கோயிலில் புதியதாக தங்கரதம் செய்யப்பட்டுள்ளது. தங்கரதம் இழுக்கக் கட்டணம் ரூ.1500/- செலுத்திப் பங்குபெறலாம்.

| 4) அன்னதானத் திட்டம் | நாள் ஒன்றுக்கு | வைப்புநிதி |
|---|---|---|
| 200 நபர்களுக்கு | ரூ.2,400/- | ரூ.35,000/- |
| 100 நபர்களுக்கு | ரூ.1,200/- | ரூ. 20,000/- |

**இங்ஙனம்**

**சி.ஜெயராமன், எம்.ஏ.பி.எல்**
துணை ஆணையர்/ செயல் அலுவலர்.

**இரா.சுப்பிரமணியன், பி.ஏ.பி.எல்.,**
தக்கார்/ இணை ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, விழுப்புரம்.